விலை : 20.00
பக்கங்கள்: இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 மார்கழி 01 வியாழக்கிழமை (17.12.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 363


கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# இராணுவம் இல்லாவிட்டால்

# காணி அபகரிப்பு இருக்காது

## முதலமைச்சர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கில் காணி அபகரிப்பு தொடர்ந்து இருப்பதற்கு காரணம் இங்கு இராணுவம் இருப்பதனால் தான். அவர்கள் இல்லையென்றால் இந்தக் காணி அபகரிப்பு பலகாலத்துக்கு தொடர்ந்திருக்காது என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க



வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் கனேடிய தூதுவருக்கும் இடையில் வட மாகாண சபை அலுவலகத்தில் சந்திப்பு இடம்பெற்றதை படத்தில் காணலாம்.

## ஐரோ. ஒன்றிய தூதுவர் கூட்டமைப்புடன் பேச்சு

(கொழும்பு)

இலங்கைக்கும் மாலைதீவுக்குமான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் டேவிட்டெலி, தமிழ்த் தேசியக கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுவினரை நேற்று பாராளு மன்ற கட்டிட தொகுதியிலுள்ள எதிர்க்கட்சி

23ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையின் முன்னேற்றம் உறவுகளை விரிவுபடுத்தும்

## அமெரிக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் தொடர் முன்னேற்றங்களைக் கொண்டு தமது உறவுகளை வரும் ஆண்டுகளில் மேலும் விரிவுபடுத்திக் கொள்ள திட்டமிட்டுள்ளதாக, அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலராக பிரேரிக்கப்பட்டுள்ள தோமஸ் சானொன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுக் காலை

23ஆம் பக்கம் பார்க்க

## உண்ணாவிரத கைதி வைத்தியசாலையில்

(கொழும்பு)

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் மேற்கொண்டுவந்த தமிழ் அரசியல் கைதிகளில் ஒருவர் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்க

23ஆம் பக்கம் பார்க்க

## இந்தியப் பிரஜைகள் நால்வர் கைது

(கொழும்பு)

கல்முனை நகரில் சட்டவிரோதமாக தங்கியிருந்து புடைவை வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த நான்கு இந்தியப் பிரஜைகள் நேற்று புதன் கிழமை கல்முனைப் பொலிஸாரி

23ஆம் பக்கம் பார்க்க

## மகிந்தவிடம் விசாரணை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஊடக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல ஆகியோரிடம் இன்றும் நாளையும்

23ஆம் பக்கம் பார்க்க

# ஒபாமா மட்டுமே இலங்கை வரவில்லை

டளஸ் எம்.பி தெரிவிப்பு

# 17 தமிழ்க் கைதிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

# இலங்கை வரவில்லை

## டளஸ் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

பங்குபரிவர்தனை ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர் கலாநிதி நாலக கொடஹேவா, கடந்த மூன்று வாரத்திற்குள் பொலிஸ்மா அதிபருக்கு செய்த முறைப்பாடு மற்றும் கூட்டு எதிர்க்கட்சியின் இரண்டு செயலமர்வுகளில் கலந்து கொண்டதன் காரணமாகவே கைது செய்யப்பட்டுள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகபெரும தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சிகள் கொழும்

23ஆம் பக்கம் பார்க்க

# ஆறு நாட்களும் விசாரணை 993 பேர் சாட்சியமளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஆறு நாட்களாக இடம்பெற்ற ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளில் 993 பேர் சாட்சியமளித்துள்ளனர். கடந்த பதினோராம் திகதியன்று யாழ்.மாவட்ட செயலகத்தில் ஆரம்பமாகிய சாட்சிய பதிவுகள் நேற்று பதினாறாம் திகதி வரை நான்கு பிரதேச செயலகங்களில் நடைபெற்றது.

இதில் இந்த ஆறு நாட்களும் விசாரணைகளுக்காக ஆயிரத்து 620 பேர் அழைக்கப்பட்டிருந்தனர். அழைக்கப்பட்டோரில் 925 பேரின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

24ஆம் பக்கம் பார்க்க

# எதிராக வழக்குத் தாக்கல்

## பயங்கரவாத தடுப்பு பிரிவு நடவடிக்கை

(கொழும்பு)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள 17 தமிழ் கைதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய தீர்மானித்துள்ளதாக பயங்கரவாத தடுப்பு பிரிவு கொழும்பு நீதவான் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகளின் வழக்குகளை துரிதமாக விசாரிப்பதற்காக அண்மையில் ஏற்படுத்தப்பட்ட விசேட மேல் நீதிமன்றத்தில், சந்தேக நபர்களுக்கு எதிராக சட்டமா அதிபர் குற்றச்சாட்டு பத்திரங்களை தாக்கல் செய்ய உள்ளதாக பயங்கரவாத தடுப்பு பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும் இதனை கண்டித்துள்ள அரசியல் கைதிகளை விடுதலைக்கான அமைப்பை சேர்ந்த அருட்தந்தை என். சக்திவேல், இதன் மூலம் விடுதலையை எதிர் பார்த்திருந்த கைதிகள் ஏமாற்றத்திற்கு உள்ளாகியிருப்பதாக கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உட்பட சிங்கள இனவாத தரப்பை மகிழ்விக்க அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாகவும் அருட்தந்தை சக்திவேல் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதனிடையே கொழும்பு மகசின சிறைச்சாலையில் கடந்த 10 நாட்களாக உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் இரண்டு

24ஆம் பக்கம் பார்க்க

# அமைச்சர்கள் கலந்துகொண்ட நிகழ்வில் எனது கணவனை கண்டேன்

## மனைவி ஆணைக்குழு முன் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

இந்த வருடம் யூன் மாதம் இருபத்தோராம் திகதியன்று அமைச்சர்களான விஜயகலா மற்றும் சுவாமிநாதன் ஆகியோர் வவுனியா புனர்வாழ்வு முகாமை பார்வையிட்ட சம்பவம் ஊடகங்களில் வெளியாகியிருந்தபோது அதில் காணப்படும் புகைப்படத்தில் காணாமல் போன தனது கணவன் நின்றதாக பெண்ணொருவர் ஜனாதிபதி ஆணைக் குழு முன்பாக சாட்சியம் அளித்து

23ஆம் பக்கம் பார்க்க

# நீதிமன்ற தாக்குதல் சந்தேக நபர் சிறையில் எனது மகனை கண்டார்


## தந்தையார் பரபரப்புச் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு வித்தியா கொலை வழக்கின் பின்னரான யாழ்.நீதிமன்ற தாக்குதல் சம்பவத்தில் கைது செய்யப்பட்டு அனுராதபுரம் சிறையில் அடைக்கப்பட்டவர்களில் ஒருவர் 1997ஆம் ஆண்டு இராணுவத்தால் கடத்தப்பட்ட தனது மகனை கண்டதாக தந்தை ஒருவர் திகைப்பூட்டும் வகையில் சாட்சியம் அளித்துள்ளார்.

மானிப்பாயை சேர்ந்தவரான எ.இராசையா என்பவர் சாட்சிய மளிக்கையில் எனது மகனான இராசையா சசிந்தன் மானிப்பாய் சந்

24ஆம் பக்கம் பார்க்க



# அச்சுறுத்தல் விடுக்கப்பட்டால் ஆணைக்குழுவில் முறையிடலாம்

## தலைவர் பரணகம அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாக சாட்சியம் அளிப்பவர்களுக்கு அச்சுறுத்தல்கள் ஏதும் விடுக்கப்பட்டால். அது தொடர்பில் ஆணைக்குழுவில் முறையிடப்படுவதன் மூலம் அச்சுறுத்தல் விடுக்கப்படுபவர்களுக்கு எதிராக ஜனாதிபதி ஆணைக்குழு உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல செய்யும் என ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம

24ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# எனது மகனின் கடத்தலுடன் பொலிஸாருக்கு தொடர்பு!

## விசாரிக்கக் கோருகிறார் தாயார்

(யாழ்ப்பாணம்)

தனது மகன் கடத்தப்பட்ட பின்னர், சுன்னாகம் பொலிஸார் வைத்திருந்த புகைப்படங்களில் காணப்பட்ட தனது மகனின் நெற்றியில் சிவப்பு பொட்டு ஒன்றை பொலிஸார் வைத்திருந்ததாக கதறும் தாயொருவர், அப்போது இடம்பெற்ற கடத்தல்களுக்கும் கொலைகளுக்கும் பொலிஸாரும் துணை போயிருக்கலாம் அவர்களும் விசாரணைக் குட்படுத்தப்பட்ட வேண்டும் என்றும் சாட்சியமளித்துள்ளார்.





தனது மகனை தன் முன்னாலேயே துப்பாக்கியால் சுட்டு பிடித்து சென்றதாக கதறிய அவர் எனது மகனின் சூடுபட்ட காயம இப் போது குணமடைந்து இருக்குமா? என்ற ஏக்கத்தோடு ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாக சாட்சியம் அளித்துள்ளார்.

தெல்லிப்பளையில் நடைபெற்ற சாட்சிய பதிவில் அந்த தாய் கூறுகையில்,

உடுவிலை சேர்ந்த எங்கள் மகன் இரவில் ஆழ்ந்த உறக் கத்தில் இருந்த போது 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பத்தாம் திகதியன்று எமது வீட்டிற்கு நள்ளிரவு பன்னிரண்டு மணியளவில் வந்த இராணுவம் எங்கள் மகனை எங்கே என்று என்னிடம் கேட்டனர். நீங்கள் யாரென்று அவர்களிடம் கேட்ட போது தங்களை அவர்கள் இனங்காட்டவில்லை.

இதனால் அவர்களை எமது மகன் தூங்கிக்கொண்டு இருந்த இடத்திற்கு நானும் எனது அம்மாவும் அனுமதிக்கவில்லை. இதனால் அவர்கள் என்னையும் எனது அம்மாவினையும் கடுமையாக தாக்கினார்கள். எங்களால் ஒன்றும் செய்யுமுடியாமல் போக எனது மகனை பிடித்தனர். அவனும் அவர்களோடு செல்ல மறுத்து சண்டை பிடித்தான்.

இதன்போது வந்தவர்களில் ஒருவர் துப்பாக்கியை எடுத்து மேலே சுட்டதோடு எனது மகனையும் சுட்டனர். இதனால் எனது மகன வலிதாங்க முடியாமல் அம்மா என்று கத்தியது இன்றும் எனது காதுகளில் ஒலித்துக் கொண்டே உள்ளது.

சம்பவத்தின் போது நான் மயக்கமடைத்து விட்டேன். பின்பு மயக்கம் தெளிந்து காலையில் பார்க்கும் போது மகன் சுடப்பட்ட இடத்தில் இரத்தம் வழிந்து காணப்பட்டது.

எனது மகன் கடத்தி செல்லப்பட்டதன் பின்னர், சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தேன்.

முறைப்பாடு செய்து சில நாட்களின் பின்னர் எங்கள் வீட்டுக்கு வந்த கிராம சேவையாளர், காணாமல் போன எனது மகனின் புகைப்படத்தை வாங்கி சென்றார். இதன் பின்னர் ஒருநாள் நான் எனது மகன் பற்றி விசாரிப்பதற்கு சுன்னாகம் பொலிஸ் நிலையம் சென்றிருந்தேன்.

அப்போது அவர்கள் வைத்திருந்த புகைப்படத்தில் காணப்பட்ட எனது மகனின் நெற்றியில் சிவப்பு பொட்டு ஒன்று வைக்கப்பட்டிருந்தது.

அதனை பார்த்ததும் அதிர்ச்சி அடைந்த நான், எனது மகனின் நெற்றியில் ஏன் சிவப்பு பொட்டு வைக்கப்படுள்ளது என்று கதறினேன்.

இது உனக்கு தேவையில்லாத விடயம் என்று மிரட்டி பொலிஸ் நிலையத்திலிருந்து என்னை வெளியே தள்ளிவிட்டார்கள் என்று அந்த தாய் கதறலுடன் சாட்சியமளித்தார்.(எ-4)


### பணிப்பெண் தேவை

மருத்துவர் குடும்பத்திற்கு வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.

**கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.**

(2909)

**தொடர்பு : 0777113480, 0778804439, 0776047241**

### யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் ஒன்றுமே முடியாது
நான் என்ன செய்வது? என்று எண்ணுகின்றீர்களா...

சனி - ஞாயிறு தினங்களில் முற்பகல் 9 மணிமுதல் பிற்பகல் 5 மணிவரை
திங்கள் - வெள்ளி முற்பகல் 9 மணிமுதல் பிற்பகல் 1 மணிவரை (2714)

எம்முடன் பேசுங்கள்

**கைகொடுக்கும் நண்பர்கள்**
104, 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
• மதசார்பற்றது • ரகசியம் பேணப்படும்
021 222 8117, 077 900 8776
Sponsored By Enlightnment Circle, UK


### அறிவித்தல்

சிகை அலங்கரிப்பாளர் அங்கத்தவர்களுக்கு எதிர் வரும் நத்தார் (கிறிஸ்மஸ்) பண்டிகையை முன்னிட்டு 19.12.2015 சனிக்கிழமையில் இருந்து இரவு நேரக் கட்டுப்பாடு தளர்த்தப்படுவதுடன் (20.12.2015) ஞாயிற்றுக்கிழமை வாடிக்கையாளர் நலன்கருதி உங்கள் தொழில் நிலையத்தினை திறந்து சேவையாற்றுமாறும் 24.12.2015 (வியாழக்கிழமை) வரையும் நேரக்கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளது.


குறிப்பு : 25.12.2015 அன்று நத்தார் பொது விடுமுறை தினம் ஆகும். ஏற்கெனவே நடைமுறையில் உள்ளது போல் நேரக்கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

சங்க செயலாளர்
ஜே.ஜெயக்குமார்

(சி-2984)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


### 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி — 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



(சி-2989)

அமரர்
திரு.செல்லையா வீரசிங்கம்

அமரர்
திருமதி இராசமணி வீரசிங்கம்

பாசத்தின் பிறப்பிடமாய்; பண்பின் உறைவிடமாய்; அன்புக்கு இலக்கணமாய்; வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்த எம் குல விளக்குகளே; ஒன்பதல்ல இன்னும் எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் பசுமையான நினைவுகள் எம் மனதில் என்றும் நிலைத்திருக்கும்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
**செல்லையா வீரசிங்கம் ஸ்ரீதரன்**


### வேலை ஆட்கள் தேவை

எமது ஸ்தாபனத்துக்கு கொழும்பில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு வேலையாட்கள் தேவை. மாத வேதனமாக ரூபாய் 27000/= வழங்கப்படும். இலவச தங்குமிட வசதி உண்டு. ஆண்கள் மட்டும். வயது 18 - 25 வரை.

**தொடர்பு : கிங்ஸ் எலக்ரோனிக்ஸ்**
**11A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே : 021 222 3857**

(2907)


### முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு சபை (வ/து) கூட்டுறவுப் பணியாளர் சாதாரண பிரிவு பயிற்சிக்கான விண்ணப்பம் கோரல்

2016ஆம் ஆண்டு தை மாதத்தில் கூட்டுறவுப் பணியாளர் சாதாரண தரப் பயிற்சி நெறியானது முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு சபையினால் ஆரம்பிக்கப்பட இருப்பதால் கீழ்க் குறிப்பிடப்படும் தகைமைகளை உடையோர் தங்கள் சுயவிபரத்தினை சுயமாகத் தயாரித்து 28.12.2015 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு சபை, முத்துஐயன்கட்டு ப.நோ.கூ சங்க கட்டடம், ஒட்டுசுட்டான் என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகைமைகள்**

- க.பொ.த (சா/த) சித்தி அடைந்து இரண்டு வருடம் தனியார் வர்த்தகத் துறையில் சேவை அனுபவம். அல்லது
- க.பொ.த (சா/த) சித்தி அடைந்து கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாககுழு உறுப்பினராக உள்ளவர்கள். அல்லது
- க.பொ.த (சா/த) தமிழ், கணிதம், உட்பட நான்கு திறமைச் சித்திகளுடன் கூடிய இருதடவைக்கு மேற்படாது ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது
- க.பொ.த (உ/த) ஒரே தடவையில் இரண்டு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

தலைவர்
முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு சபை

(சி-2986)

# முதலமைச்சரின் அமைச்சுகளுக்கு 2357.191 மில்லியன் நிதி ஒதுக்கீடு

## வடக்கு முதல்வர் சபையில் சுட்டிக்காட்டு

**(யாழ்ப்பாணம்)**

**முதலமைச்சரின் அமைச்சுக்களுக்கு 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் 2357.191 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முதலமைச்சர் அமைச்சின் ஒதுக்கீடுகள் தொடர்பான விவாதம் நேற்றையதினம் வடமாகாண சபையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போது முதலமைச்சர் அமைச்சின் வரவு செலவுத்திட்டம் தொடர்பான விபரங்களை சபையில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் வாசிக்கப்பட்டது.**

முதலமைச்சரின் அமைச்சானது வீடமைப்பு நிர்மாணம் மற்றும சுற்றுலாத்துறை உள்ளூராட்சி திணைக்களம், மாகாணக்காணி ஆணையாளர் திணைக்களத்தையும் உள்ளடக்கியுள்ளது. இதில் 2038.691 மில்லியன் ரூபா மீண்டு வரும் செலவீனத்துக்கும் 318.5 மில்லியன் மூலதன செலவீனத்துக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் முதலமைச்சரின அமைச்சுக்கு 57.491 மில்லியனும், உள்ளூராட்சி திணைக்களத்துக்கு 1816.200 மில்லியனும், தொழிற்றுறைத் திணைக்களத்துக்கு 78.000 மில்லியனும், காணி நிர்வாகத்திணைக்களத்துக்கு 87.000 மில்லியனும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மீண்டுவரும் செலவீனத்தில் பிரமாண அடிப்படையிலான நன்கொடையில (CBG) முதலமைச்சரின் அமைச்சுக்கு 8மில்லியனும், உள்ளூராட்சி திணைக்களத்துக்கு 6.5 மில்லியனும், தொழிற்றுறைத் திணைக்களத்துக்கு 1.5மில்லியனும், காணிநிர்வாகத் திணைக்களத்துக்கு 1.5 மில்லியனும் மொத்தமாக 17.5 மில்லியனும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடையில் வீடமைப்புக்கு 9 மில்லியனும், சுற்றுலாத்துறைக்கு 50 மில்லியனும், உள்ளூராட்சி திணைக்களத்துக்கு 224 மில்லியனும், கிராமிய தொழிற்றுறைக்கு 15 மில்லியனும், காணி நிர்வாகத்துக்கு 3 மில்லியனும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இவ் வருடம் நாங்கள் தெரிவு செய்த சில வேலைத் திட்டங்கள் எமக்கு அவசியமானதாக இருந்த போதும் நிதி ஆணைக் குழுவின் பிரமாணத்தை திருப்தி செய்யாமையால் நிதி ஆணைக் குழுவினால் நிராகரிக்கப்பட்ட வேலைகளுக்குப் பதிலாக மாற்றுத் திட்டங்களுக்கு செல்லவேண்டியேற்பட்டது.

மேலும் உள்ளூராட்சி அமைப்புக்கள் அடிமட்டமக்களின் தேவைகளை இனம் கண்டு அவற்றினை முன்னுரிமைப்படுத்துவதில் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது.

இதனால் முன்னர் குறிப்பிட்டது போன்றதான இதர சில காரணங்களாலும் சில அபிவிருத்தித் திட்டங்களை உரிய காலத்தில் பூரணப் படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ள போதிலும் இவ்வருட இறுதிக்குள் ஒதுக்கீடுகள் யாவும் செலவு செய்யப்படுவன என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே 2016 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் இந்த சவால்களை சமாளிக்கக் கூடியதான விதமாகத் தெரிவுசெய்யப்பட்டு வருகிறது.

அதற்கான ஆரம்பவேலைகள் இப்பொழுதே முடுக்கி விடப்பட்டுள்ளன. 2016 ஆம் ஆண்டுக்குரிய அமைச்சினதும் திணைக்களங்களினதும் வேலைகளைச் சிறப்பாக முன்னெடுப்பதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பு தேவையென மேலும் தெரிவித்தார். (இ-9)

# இராணுவமே எங்கள் பிள்ளைகளை கடத்தி வைத்துள்ளது




















**காணாமற் போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முதலாம் கட்ட இறுதிநாள் விசாரணைகள் நேற்றைய தினம் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதன்போதும் இலங்கை இராணுவமே எங்கள் பிள்ளைகளை கடத்தி வைத்துள்ளது என அதிகமான பெற்றோர்கள் சாட்சியம் அளித்தனர்.** (படங்கள்:-உ.சாளின்)

இந்தியன் சுப்பர் லீக் கால்பந்து

# 2ஆவது சுற்று அரையிறுதியில் கொல்கத்தா வெற்றி கோல்கள் அடிப்படையில் சென்னையின் எப்.சி இறுதியில்

இந்தியன் சுப்பர் லீக் கால்பந்து தொடரின் இறுதிப் போட்டிக்கு சென்னை அணி அசத்தலாக முன்னேறியது. கொல்கத்தா அணி பரிதாபகரமாக தொடரிலிருந்து வெளியேறியது.

இந்தியன் சுப்பர் லீக் (ஐ.எஸ்.





எல்.,) கால்பந்து தொடரின் 2ஆவது பருவகாலத்துக்கான போட்டிகள் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.

கொல்கத்தாவில் நேற்று நடந்த 2ஆவது சுற்று அரையிறுதி போட்டியில் சென்னை, கொல்கத்தா அணிகள் மோதின.

முன்னதாக புனேயில் இந்த இரு அணிகள் மோதிய முதல் சுற்று அரையிறுதியில் சென்னை அணி 3:0 என்ற கோல் கணக்கில் வென்றிருந்தது.

இதனால் கொல்கத்தா அணி இறுதிப் போட்டிக்கு நுழைய வேண்டுமாயின் 4:0 என்ற கோல் கணக்கில் சென்னை அணியை வெற்றி பெற்றாக வேண்டிய கட்டாயத்தில் களமிறங்கியது.

போட்டியில் கொல்கத்தா அணி சார்பில் 22ஆவது நிமிடத்தில் லெகிக் ஒரு கோலும் இரண்டாவது பாதியில் ஹியும் (87) தம் பங்குக்கு ஒரு கோல் அடித்தனர்.




இதனால் கொல்கத்தா அணி 2:0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.

எனினும் அவ்வணி இறுதிப் போட்டிக்கு தகுதிபெற வேண்டுமாயின் மேலும் இரண்டு கோல்களை புகுத்தியாகவே வேண்டும்.

எனினும் கடைசி கட்டத்தில் களமிறங்கிய சென்னை அணியின் பிக்ரு (90) ஒரு கோல் அடித்து அசத்த கொல்கத்தாவின் எண்ணம் தவிடுபொடியாகியது.

முடிவில் கொல்கத்தா அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றிருநதாலும், மொத்த கோல்கள அடிப்படையில் சென்னை அணி 4:2 (ஏஜிஜி) கணக்கில் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

20ஆம் திகதி நடக்கும் இறுதிப் போட்டியில் சென்னை-கோவா அணிக்ள் மோதுகின்றன. (க)




# ஐ.பி.எல் ஏலம் 2016 விலைபோகாத வோட்சன்




2016ஆம் ஆண்டுக்கான இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) ஏலத்தில் ராஜஸ்தான் அணியின் முன்னணி வீரர் ஷேன் வோட்சன் தெரிவாகவில்லை.

சென்னை, ராஜஸ்தான் அணிகளில் விளையாடிய 'ரொப் 5' வீரர்களை புனே, ராஜ்கோட் அணிகள் தேர்வு செய்தன.

ராஜஸ்தான் அணியின் முன்னணி வீரராக இருந்த அவுஸ்திரேலியாவை சேர்ந்த வோட்சன் விலைபோகாதது அதிர்ச்சியானதே.


அவர் மிகச் சிறந்த சகலதுறை வீரர். வோட்சன் நேரடியான ஏலத்தில் எடுக்கப்படலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

தேர்வு செய்யப்பட்ட 10 வீரர்களில் 7 பேர் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை (தோனி, ரெய்னா, ஜடேஜா, மக்கலம், அஸ்வின், பிராவோ, டு பிளசிஸ்) சேர்ந்தவர்கள்.

மீதியுள்ள 3 பேர் (ரஹானே, ஸ்ரீபன் ஸ்மித், போல்க்னர்) ராஜஸ்தான் அணியில் விளையாடியவர்கள். (க)

# கிடைக்குமா தலைமைப் பதவி

## மக்கலம் விளக்கம்




ராஜ்கோட் அணிக்கு தலைவராக யாரை நியமிப்பது என்பது பற்றி அணி நிர்வாகம்தான் முடிவு செய்யும். இது எனது கையில் இல்லை என நியூசிலாந்து அணி வீரர் பிரண்டன் மக்கலம் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்து அணித் தலைவர் பிரண்டன் மக்கலம் (வயது-34). கடந்த 2008இல் நடந்த முதலாவது இந்தியன் பிரிமியர் லீக் கிரிக்கெட் தொடரில் கொல்கத்தா அணியில் இடம்பிடித்த இவர், பெங்களூரு அணிக்கு எதிரான முதல் போட்டியில் 73 பந்துகளில் 158 ஓட்டங்கள் எடுத்தார்.

அதன்பின் கொச்சி அணிக்கு சென்ற இவர் கடைசியாக சென்னை அணியில் இடம்பெற்றிருந்தார். சூதாட்டம் தொடர்பான பிரச்சினையில் சென்னை, ராஜஸ்தான் அணிகளுக்கு 2 ஆண்டுகள் தடைவிதிக்கப்பட்டது.

இதனால் புனே, ராஜ்கோட் என 2 புதிய அணிகள் 2 ஆண்டுகளுக்கு மட்டும் தற்காலிகமாக சேர்க்கப்பட்டன.

இதற்கான ஏலத்தில் ராஜ்கோட் அணியில் ரூ. 7.5 கோடிக்கு மக்கலம் ஒப்பந்தமானார். இவர், பிரிமியர் தொடரில் கொல்கத்தா அணியை வழிநடத்திய அனுபவம் இருப்பதால் ராஜ்கோட் அணிக்கு தலைவராக நியமிக்கப்படலாம் என எதிர் பார்க்கப்படுகிறது.

ரெய்னாவின் பெயரும் அடிபடுவதால் தலைமைப் பதவிக்கு பலத்த போட்டி காணப்படுகிறது. கவாஸ்கர் போன்றோர் இந்தியரையே தலைவராக நியமிக்க வேண்டும் என வலியுறுத்துகின்றனர்.

இதுகுறித்து பிரண்டன் மக்கலம் கூறியதாவது,

இந்திய மண்ணில் நிறைய போட்டிகளில் விளையாடி உள்ளேன். பிரிமியர் தொடருக்கான அடுத்த இரண்டு சீசனில் ராஜ்கோட் அணிக்காக விளையாட இருப்பது மகிழ்ச்சி. கிரிக்கெட் போட்டிக்கு ரசிகர்கள் கொடுத்து வரும் ஆதரவு தான், இந்தியாவில் கிரிக்கெட் விளையாட வேண்டும் என்ற ஆசையை அதிகரிக்கச் செய்துள்ளது.

சென்னை அணிக்காக விளையாடிய ரெய்னா, ரவிந்திர ஜடேஜா, டுவைன் பிராவே ஆகியோர் ராஜ்கோட் அணியில் இருப்பதால், லெவன் அணியில் பெரிய வித்தியாசம் ஏற்படாது என நினைக்கிறேன். தலைமைப் பதவி குறித்து பேசுவதற்கு இது சரியான நேரமல்ல. இதனை அணி நிர்வாகம் தான் முடிவு செய்யும். இவ்வாறு பரண்டன் மக்கலம் கூறினார். (க)

பங்களாதேஷ் பிரிமியர் லீக் 2015

# கபாலியின் பிரகாசமான துடுப்பாட்டத்தால் கோமிலா விக்ரோறியன்ஸ் அணி சம்பியன்



அலோக் கபாலியின் நேர்த்தியான துடுப்பாட்டம் கைகொடுக்க கோமிலா விக்ரோறியன்ஸ் அணி, பரிஸல் புல்ஸ் அணியை இறுதி போட்டியில் 3 விக்கெட்டுக்களால் வீழ்த்தி 2015ஆம் ஆண்டுக் கான பங்களாதேஷ் பிரிமியர் லீக் தொடரில் சம்பியனாகியது.

மிர்பூர், ஷேயா பங்களா தேசிய விளையாட்டரங்கில் நடைபெற்ற இவ் பரபரப்பான இறுதிப் போட்டியில் பரிஸல் அணி கொடுத்த பலமான அழுத்தத்தின் மத்தியில் கோமிலா விக்ரோறியன்ஸ் அணியால் இவ்வெற்றி பெறப்பட்டது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கோமிலா விக்ரோறியன்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பரிஸல் புல்ஸ் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 156 ஓட்டங்களை எடுத்தது.




துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் மகமதுல்லா 48, சஹாரியார் நபீஸ் ஆட்டமிழக்காமல் 44 ஓட்டங்களை தங்கள் அணி சார்பில் அதிக பட்ச ஓட்டங்களாக எடுத்தனர்.

பந்துவீச்சில் கோமிலா விக்ரோறியன்ஸ் அணி சார்பில் ஷைடி, குலசேகர, ஸ்ரீபன்ஸ், மோர்டஷா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

157 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்கு தமது துடுப்பாட்டத்தை ஆரம்பித்த கோமிலா விக்ரோறியன்ஸ் அணியின் ஆரம்ப விக்கெட் 23 ஓட்டங்களில் வீழ்த்தப்பட்டாலும்,

பின்னர் 2ஆவது விக்கெட்டுக்காக இணைந்த ஆரம்ப வீரர் இம்ருல் ஹெய்ஸ் - பாகிஸ்தான் வீரர் அஹமட் ஷெசாட் இணை பகிர்ந்த 54 ஓட்டங்களும் இறுதி ஓவரில் வெற்றிக்காக தேவைப்பட்ட 13 ஓட்டங்களுக்கு அலோக் கபாலியின் துடுப்பு காட்டிய வித்தையும் இணைந்து 20 ஓவரின் இறுதிப் பந்தில் கோமிலா விக்ரோறியன்ஸ் அணியை சம்பியன் பட்டம் காணச் செய்தது.

துடுப்பாட்டத்தில் இம்ருல் ஹெய்ஸ் 53, அலோக் கபாலி ஆட்டமிழக்காமல் 39, அஹமட் ஷெசாட் 30 ஓட்டங்க்ளை தமது அணி சார்பில் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் பரிஸல் புல்ஸ் அணி சார்பில் அணித் தலைவர் மகமதுல்லா, கெவன் கூப்பர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக் களைக் கைப்பற்றினர்.

இவ்வெற்றி மூலம் கோமிலா விக்ரோறியன்ஸ் அணி முதல் தடவையாக பங்களாதேஷ் பிரிமியர் லீக்கில் சம்பியனாகியது.

போட்டியின் ஆட்டநாயகனாக அலோக் கபாலி (கோமிலா விக்ரோறியன்ஸ்), போட்டித் தொடரின் நாயகனாக அசார் ஷைடி (கோமிலா விக்ரோறியன்ஸ்) தெரிவானார். (க)

# லஞ்சம் பெற்ற எஸ்.ஐக்கு மறியல்

20ஆயிரம் ரூபாவை இலஞ்சமாக பெற்றுக் கொண்டார் என்ற குற்றஞ்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட ஹப்புத்தளை பொலிஸ்நிலை யத்தின உப-பொலிஸ் பரிசோதகர் (எஸ்.ஐ) விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட அவர், கொழும்பு பிரதான நீதிமன்ற நீதவான் கிஹான பிலப்பிட்டிய முன்னிலையில் நேற்றுமுன் தினம் ஆஜர்படுத்திய போதே அவரை எதிர்வரும் 29ஆம் திகதி வரையிலும விளக்க மறியலில்வைக்குமாறு நீதவான்உத்தரவிட்டுள்ளார்.

தீயினால் எரிந்து சாம்பாலாகிபோன ஆட்டோவுக்கு காப்புறுதி இழப்பீட்டை பெற்றுக்கொள்வதற்காக அதன் உரிமையாளருக்கு பொலிஸ் அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கே அவர், 20ஆயிரம் ரூபாவை இலஞ்சம் பெற்றார் என்று அறியமுடிகின்றது.

அவ்வறிக்கையை கொடுப்பதற்காக முதலல் 30 ஆயிரம் ரூபாவை கோரியதாகவும் அதில் 20 ஆயிரம் ரூபாவை பெற றுக் கொள வதற் கு முயன்ற போதே இலஞ்ச ஊழல் ஒழிப்புஆணைக்குழுவின் அதிகாரிகளால் கடந்த 12ஆம் திகதி கைது செய்யப்பட்டார். (இ-7)

## மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை சங்கம் கேள்விப் பத்திரம் கோரல்

மேற்படி வைத்தியசாலை வளவிலுள்ள பெரிய தேக்கமரம் விற்கப்படவுள்ளது. அதனை வாங்க விரும்புவோர் அலுவலக நேரத்தில் (9.00AM-4.00PM) பார்வையிட்டு தங்கள் கூறு விலைகளை 05.01.2016 ஆம் திகதிக்கு முன் "தலைவர் கூட்டுறவு வைத்தியசாலை, மூளாய்" எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

(சி-2974) தலைவர்

## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 RC<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா:58 செவ். 1இல்<br>உயரம்: 6'4"<br>தகைமை/தொழில்: BSC,MSC/ அரச தொழில்<br>தொ.இ: B/2918 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 26 சூரி செவ் 5 இல்<br>உயரம்: 164cm<br>தகைமை/தொழில்:MBBS/ வைத்தியர்<br>தொ.இ: G/3692 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்:மகம்<br>கி.பா: 13 சூரி செவ் 3இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: HND/ தனியார் தொழில்<br>தொ.இ: B/2937 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 25<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/3698 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 26<br>உயரம்: 6'2"<br>தகைமை/தொழில்: A/L/அரச தொழில்<br>தொ.இ: B/2971 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 32 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:HNDA<br>தொ.இ: G/3699 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 29 சூரி செவ் 11 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:A/L/பிரான்ஸ் PR<br>தொ.இ: B/2977 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 46 சூரி செவ் 5 இல்<br>உயரம்: 150 cm<br>தகைமை/தொழில்:BSC/ அரச தொழில்<br>தொ.இ: G/3706 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



## காரைநகர்-சிவன்கோவில்- திருவெம்பாவை

### முதலாம் நாள் திருவிழா-வாழ்த்து

காரையம்பதியில் அமர்ந்து, கலங்கரை விளக்கமாகி, உலகியலில் உலகம் உய்ய இறைவியுடன் உடன் உறைந்து பஞ்சதிருத்தியம் செய்து பிறவிகள் எம்மையும் மீட்டு, பாரினில் நாம் தளைக்க கிருபையாய் இரக்கம் செய்து நம் சிந்தை எல்லாம் நிறைந்து சீரிய வாழ்வு தந்து ஊரை உலகளவில் உயர்த்தி உலகத்தை ஊராக்கி மார்கழி மாதம் தன்னில் மாபெரும் திருவிழாவாகி இதயம் எல்லாம் இனிக்க இன்பமான பத்து நாட்கள் இயன்ற வரை அழுது தொழுகின்றோம். இந்த அகிலம் எல்லாம் வந்து ஆண்டவனே உமைநோக்கி, அபயம், அபயம் என்று ஓலம் இடுகின்றதே, உணராயோ? உணர்ந்தீர்! அருள் அளித்தீர்!! உயர்த்தினீர்!!!
நீரே ஆதிரையான் என்றும் எம் (ன்) இறைவன்.

**காரை S.கெங்காதரன் B.A (S.L)**

M L C

சிவன் அருள் கிடைக்க வாழ்த்துவோர்
மீனாட்சி மொழிக் கல்லூரி
MEENADCHI LANGUAGE COLLEGE
வேதர் அடைப்பு, காரைநகர்.
(2799)

காரை S.கெங்கா (B.A(S.L)
இயக்குநர்
காரை G.ஜனகன் (Dip-Eng) இணை இயக்குநர்

## கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்–கிளிநொச்சி

## பாவித்த அரிசி ஆலை இயந்திர உபகரணங்கள் விற்பனைக்கான மூடிய கூறுவிலை கோரல்

எமது சங்கத்திற்கு சொந்தமான பாவித்த அரிசி ஆலை இயந்திர உபகரணங்களை மூடிய கூறுவிலை கோரல் மூலமாக விற்பனை செய்யவுள்ளோம். இதனைக் கொள்வனவு செய்ய விரும்புவோர் மூடிய கூறுவிலைகளை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

01. தமது மூடிய கூறுவிலைகளை பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், கோரும் விலை என்பவை உள்ளடங்கலாக சங்கத்தினால் தயாரிக்கப்பட்டு வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தை ரூபா 150.00 செலுத்திப் பூர்த்தி செய்து கடித உறையிலிட்டு சீல் செய்து 30.12.2015 ஆம் திகதி பி.ப.4.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக தலைவர், கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், கிளிநொச்சி என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்க வேண்டும்.

02. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் அரிசி ஆலை இயந்திர உபகரணம் கூறுவிலை விண்ணப்பம் எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

03.கேள்விகளை ஏற்கவோ, மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு.

04.கேள்விச் சபையினால் தெரிவு செய்யப்படும் கேள்வியாளர் மூன்று வேலை நாட்களுக்குள் முழுமையாக பணத்தினை செலுத்துவதுடன் இயந்திரங்களை உடன் எடுத்துச் செல்லல் வேண்டும்.

05.மேற்படி இயந்திர உபகரணங்களை பார்வையிட விரும்புவோர் வேலை நாட்களில் (திங்கள் –வெள்ளிவரை) மு.ப.9.00 மணி தொடக்கம் பி.ப.400 மணி வரை சங்க தலைமை அலுவலகத்தில் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

தொலைபேசி இல. 021 228 5752,
(077 776 5916)
டிப்போ வீதி,
கனகபுரம்,
கிளிநொச்சி.

பொது முகாமையாளர்,
கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம்,
கிளிநொச்சி.

(C-2972)

## ராசி பலன்

17.12.2015
(மார்கழி 01, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.15 மணிக்கு
சஷ்டி முற்பகல் 11.09மணிவரை
சதயம் முன்னிரவு 11.38மணிவரை
இராகுகாலம் 1.52-3.22 மணிவரை
சுபநேரம்-7.52 - 9.22 மணிவரை
திருவெம்பாவை பூசை ஆரம்பம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| சந் | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பூசம், ஆயிலியம் | | |
| | | | குரு |
| சூரி புத | சனி | சுக் | ராகு செவ் |

**மீனம்:** வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், தூரதேசச் செய்திகள் ஆச்சரியப்பட வைக்கும், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

**மேடம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொருளாதார நிலையில் முன்னேற் றம் காண்பீர்கள், தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச் சிக்கு உறுதுணை புரியும்.

**இடபம்:** இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, பொன்னான செய்திகள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு.

**மிதுனம்:** கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், உங்களின் கடின உழைப்பால் முன்னேற்றமுண்டு.

**கும்பம்:** ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், உறவினர் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை.

**கடகம்:** மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வது நல்லது, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், சஞ்சலங்கள் கூடும் நாள்.

**மகரம்:** கல்யாணக் கனவுகள் நனவாகலாம், வாக்கு மேன்மையுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**சிம்மம்:** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், கனவு பலித முண்டு, மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு:** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், உடன் பிறப்புக்கள் அனுசரணையாக நடந்து கொள்வர், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பொருளாதார நிலை உயரும்.

**விருச்சிகம்:** செல்வ வளம் பெருக அதிக பிரயாசை காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, பாராட்டும் புகழும் கூடும் நாள், வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம்.

**துலாம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம், பிள்ளைகளின் கல்வி நலனில் அக்கறை காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி:** எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே வந்து சேரலாம், உடல்நலன் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், பகைவர்கள் விலகுவர், போசன சுகமுண்டு.

## டிசெம்பர் 26ஆம் திகதி

# இயற்கைப் பேரிடர் தணிப்புத் தினம் வடக்கு மாகாண சபையால் பிரகடனம்

(யாழ்ப்பாணம்)

**வடமாகாண இயற்கைப் பேரிடர் தணிப்புத் தினமாக டிசெம்பர் 26ஆம் திகதியை வடக்கு மாகாணசபை பிரகடனப் படுத்தியுள்ளது.**

வடக்கு மாகாணசபையின் 41 ஆவது அமர்வின் இரண்டாவது நாளான நேற்று புதன்கிழமை (16.12.2015) வடக்கு சுற்றாடல் அமைச்சர் இது தொடர்பான பிரேரணையை முன்மொழிந்து உரையாற்றியிருந்தார்.

இயற்கையின் சீற்றங்கள் புதியன அல்ல. பூமியில் வாழ்கின்ற உயிரினங்கள் பூமியில் தாங்கள் தோன்றிய காலம் முதல் எரிமலைக் குமுறலாகவும், நிலநடுக்கமாகவும், கடற்கோளாகவும், காட்டுத் தீயாகவும், பெருவெள்ளமாகவும் ஏதோ ஒருவகையில், ஏதோ ஒரு பரிமாணத்தில் இயற்கையின் சீற்றங்களை அனுபவித்தே வந்திருக்கின்றன. ஆனால், அண்மைக் காலமாக இயற்கைச் சீற்றங்கள் உலகையே உலுக்கும் பேரிடர்களாக உருவெடுத்து வருகின்றன.

பூமியில் ஏற்பட்டுவரும் வெப்பநிலை உயர்வு பூகோள ரீதியாகக் காலநிலையில் எதிரும் புதிருமான பல மாற்றங்களைக் கடுகதியில் ஏற்படுத்தி வருகிறது. ஒருபுறம் மழையால் வளம்கொழித்திருந்த பல பிரதேசங்கள் வரட்சியால் காயத்தொடங்க, இன்னொரு புறம் வரண்டிருந்த பல பிரதேசங்களை மழை வெள்ளம் மூழ்கடித்துக் கொண்டிருக்கிறது. சில நாட்களுக்கு முன்னர் சிங்காரச் சென்னை பெருவெள்ளத்தால் சீரழிந்தமை இதற்கு ஒரு உதாரணம்.

காலநிலை மாற்றங்களால் வருங்காலத்தில் இலங்கையும் பேரிடர்களைச் சந்திக்கும் என்று ஆய்வாளர்களால் எதிர்வுகூறப்பட்டுள்ளது. குறிப்பாக, வடக்கின் தலைப்பகுதியான யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கடல் காவுகொள்ளும் என்றும் எச்சரிக்கப்டுகின்றது.

இயற்கையின் சீற்றம் தவிர்க்க முடியாததொன்று. ஆனால், இயற்கைக்கு முரணான, எதிரான எமது நடவடிக்கைகளைத் தவிர்த்துக் கொள்வதன் மூலம் இயற்கையின் சீற்றத்தைத் தணிவித்துப் பேரழிவுகளிலிருந்து எம்மைக் காப்பாற்றிக்கொள்ள முடியும். அவ்வாறு தணிப்பதற்குப் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, வினைத்திறன் மிக்க செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது அவசரமான அவசியம் ஆகும். இதற்கான ஒரு தொடக்கப் புள்ளியாக வடமாகாணத்துக்கென இயற்கைப்பேரிடர் தணிப்புத்தினம் (Natural Disaster Mitigation Day) ஒன்றைப் பிரகடனப்படுத்தி, ஆண்டுதோறும் கடைப்பிடிப்பது காலபொருத்தமானது எனக் கருதுகிறேன்.

எம் தலைமுறையில் நாம் பார்த்திராத, வரலாறுகளில் மட்டுமே நாம் படித்திருந்த கடற்கோள் இயற்கைப் பேரழிவாக 2004ஆம் ஆண்டு டிசெம்பர் 26ஆம் திகதி அதிகாலை இலங்கையைத் தாக்கியது. கடல், இலங்கையின் கரையோர மாவட்டங்களில் புகுந்து திரும்பியதில் ஒரு மணித்தியாலயத்துக்குள் 40 ஆயிரம் மனித உயிர்கள் வரையில் அநியாயமாகப் பலியாகின. எமது வடக்குக் கிழக்கின் கரையோரங்கள் பெரும் உயிர்ச்சேதங்களையும் சொத்தழிவுகளையும் சந்தித்தது. கடற்கோள் தாக்கிப் பதினொரு ஆண்டுகள் கடந்துவிட்டபோதும் அது ஏற்படுத்திய வலி இன்னமும் ஆறவில்லை. "இயற்கையை நீ அழித்தால் இயற்கையால் நீ அழிவாய்" என்று இயற்கை எமக்கு உரத்துப் போதித்த, கடற்கோள் தாக்கிய தினமான டிசெம்பர் 26ஆம் திகதியை வடமாகாண இயற்கைப் பேரிடர் தணிப்புத் தினமாகப் பிரகடனப்படுத்துவதற்கு இந்த உயரிய சபையின் அங்கீகாரத்தைக் கோருகின்றேன் என்று தெரிவித்ததைத் தொடர்ந்து பிரேரணையைச் சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டுள்ளது. (இ-9)





## வாழ்நாள் வங்கியாளர் சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம் இலங்கை வங்கி ஓய்வூதியர் சங்கத்தினால் வெளியிடப்பட்டு வருகின்ற வாழ்நாள் வங்கியாளர் என்ற அரையாண்டு சஞ்சிகை 6 மாதங்களுக்கொரு தடவை வெளியிடப்படுவதாக சங்கத்தின் செயலாளர் ஏ.இராசநாயகம் அறிவித்துள்ளார்.

சமகால வங்கியாளர் மற்றும் க.பொ.த சாதாரண தர, உயர்தர, பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் நிதித்துறையில், வங்கியியலில் ஆர்வமுள்ளவர்களின் நன்மை கருதியும் பரீட்சைகளில் சித்தியெய்துவதற்கு பொது அறிவைப் பெற்றுக் கொள்வதற்குமென இச் சஞ்சிகையானது வெளியிடப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

## மூவர் விடுதலை

வல்வெட்டித்துறைப் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடியதாகவும், அடையாள அட்டை மற்றும் வல்வெட்டித்துறை பிரதேசத்திற்கு வருகை தந்தமைக்கான காரணங்களை தெளிவுபடுத்த தவறியதற்காகவும் வல்வெட்டித்துறை பொலிஸாரால் கடந்த 09.09. 2015 அன்று கைது செய்யப்பட்ட மட்டக்களப்பு மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த கணேஸ் மரியதாஸ், ஹிசைபாத்திமா ஹனிதா, தங்க வேலு ஜெயந்தா மூவரையும் பொலிஸாரின் மேலதிக அறிக்கையில் மேற்படி சந்தேகநபர்கள் தொடர்பில் எவ்வித குற்றச்சாட்டுக்களும் இல்லை என்பதற்கு இணங்க நேற்று பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜாவால் விடுதலை செய்யப்பட்டனர். (இ-5-60)

## கல்வியியல் டிப்ளோமா திட்டத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தால் முதல்முறையாக தமிழ் மொழி மூலம் முன் பிள்ளைப் பருவம் மற்றும் ஆரம்பக் கல்வியியல் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்திற்கு புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி 18 வயதைப் பூர்த்தி செய்திருப்பதுடன் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் தமிழ் மொழி, கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியுடன் க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் 3 பாடங்களிலும் சித்தியடைந்திருக்க வேண்டும். அல்லது இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் அடிப்படைக் கற்கை நெறிகளில் ஏதாவது ஒன்றினைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ

## பட்ட மேல் டிப்ளோமா திட்டத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தால் விசேட தேவைகள் சார் பட்ட மேல் டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டத்தின் 2015/16 ஆம் கல்வி ஆண்டிற்கு புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் இளமாணிப் பட்டம் பெற்ற பட்டதாரியாக இருப்பதுடன் அங்கீகரிக்கப் பட்ட பாடசாலையில் சேவையிலுள்ள ஆசிரியராக, அதிபராக, ஆசிரிய ஆலோசகராக/ஆசிரிய கல்வியியலாளராக இருத்தல் வேண்டும். இக் கற்கை நெறிக்கான தமிழ் மொழி மூல வகுப்புக்கள் யாழ்.பிராந்திய நிலையத்தில் நடத்தப்படும். மேலதிக விபரங்களை பிறவுண் வீதி கொக்குவிலில் அமைந்துள்ள பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம் என உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ

## சிறுவர்தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட சிறுவர்தின நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை நடைபெறவுள்ளது.

வடமாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்கள ஆணையாளர் தி.விஸ்வரூபன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தின்ராகக் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வடமாகாண சுகாதாரம், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் கலாநிதி ப.சத்தியலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

### யாழ்.பொதுநூலகத்தால் நடத்தப்பட்ட போட்டியில்

## வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு விழா நாளை

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு யாழ்.பொதுநூலகத்தால் அண்மையில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு நிகழ்வு நாளை வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சரின் செயலாளர் இ.வரதீஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளரும் ஆளணி விருத்தி மற்றும் பயிற்சி பிரதிப் பிரதம செயலாளருமான ஏ.சிவபாலசுந்தரம் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்று பரிசுபெறுவோர் விபரம் வருமாறு,

**கீழ்ப்பிரிவு-கதைகூறல்**

சு-அகர்ஷித், ய.சர்வின், சி.மனஸ்வினி

**ஆங்கில எழுத்துக்களில் சொற்கள் அமைத்தல்**

ச.சபிஷா, ஜ.அரிஷ்னவன், கு.சாரங்கன்

**ஆங்கில வாசிப்பு**

யோ.ஆருஷன், கா.மிருன்திகா, ஜ.அனந்தவைகரி

**சித்திரப்போட்டி**

ச.யெரூபினி, தி.ரிஷிகன், த.வைஷால்


**மத்திய பிரிவு-பேச்சுப் போட்டி**

வ.ஜீவிதன், த.கேதகி, ர.அபிநயா

**மேற்பிரிவு- கட்டுரைப் போட்டி**

அ.சுஜீவன், அ.ரவீந்திரன், ம.அருள்மாறன். (இ-5-51)

# பேருந்து விபத்து 40 பேர் காயம்!





(கொழும்பு)

நுவரெலியா - லிந்துலை பிரதான வீதியில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் 40 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்றுக் காலை 9.25 மணியளவில் இடம்பெற்றதாக பொலிஸ் ஊடப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இலங்கை தேசிய ஆராய்ச்சி நிலையத்திற்கு சொந்தமான பேருந்து ஒன்றே இவ்வாறு பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

தேயிலை தொழிற்சாலை பணியாளர்களை ஏற்றிச் சென்ற சந்தர்ப்பத்திலேயே இந்த விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் லிந்துலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களில் சிலர் மேலதிக சிகிச்சைகளுக்காக நுவரெலியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை லிந்துலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

# மீண்டும் அடக்குமுறைக்கு முயற்சிக்கிறது அரசாங்கம்

## நாடாளுமன்றில் ஜே.வி.பி.குற்றச்சாட்டு

"பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதாக ஜெனிவாவில் கூறிய அரசு, அந்தச் சட்டத்திலுள்ள பயங்கரமான சரத்துகளை சாதாரண சட்டதுகளுக்குள் உள்ளீர்த்து மீண்டும் அடக்குமுறையை உருவாக்க முயற்சிக்கின்றது" என ஜே.வி.பியின் விஜித ஹேரத் எம.பி குற்றஞ்சாட்டியுள்ளார.

இந்த நிலைமையானது பயங்கரவாத தடைச்சட்டத்தைவிடவும் ஆபத்தானது எனறும்எச்சரிக்கை விடுத்தார்.

இந்தச் சட்டதிருத்தம் தொடர்பில் நீதிமன்றத்தை நாடுவதற்கும் வரையறுக்கப்பட்ட காலமே உள்ளதால், இது குறித்து நாடாளுமன்றத்துக்குஅரசுதெளிவுபடுத்தவேண்டும்என்றும் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில்நேற்று முன்தினம் இடம்பெற்ற பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம், கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள், அரசு தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றியபோதே மேற்கண்ட விடயங்களைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த சனிக்கிழமை இந்தச் சபையில் குற்றவியல் சட்டக்கோவை திருத்தம் அவசரமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாத தடைச் சட்டத்திலுள்ள பயங்கரமான சரத்துகள் இந்த சாதாரண சட்டமான குற்றவியல் சட்டக் கோவைக்குள் உள்ளீர்க்கப் படுவதாக அந்தத் திருத்தம் அமைந்துள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தைப் பயன்படுத்தித்தான் அன்று ஊடகவியலாளர் திஸ்ஸநாயகம் கைதுசெய்யப்பட்டார். ஊடகவியலாளர்களைக் கைதுசெய்ய அந்தச் சட்டத்திலுள்ள பயங்கரமான சரத்துகளைப் பயன்படுத்தினார்கள்.

இப்போது பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதாகக் கூறியுள்ளீர்கள். அது நீக்கப்படுகின்றதா? எனப் பார்ப்போம். ஆனால், அந்தச் சட்டத்திலுள்ள பயங்கரமான சரத்துக்கள் சாதாரண சட்டமான குற்றவியல் சட்டக் கோவைக்குள் உள்ளடக்கப் பட்டுள்ளன.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதாக நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும், ஜெனிவாவுக்கும், உலகுக்கும் கூறிவிட்டு அதிலுள்ள பயங்கரமான சரத்துகளை ஏன் சாதாரண சட்டத்துக்குள் உள்ளீர்க்கப் பார்க்கின்றீர்கள்.

அந்த சரத்துக்களை வேறு சட்டத்தின்கீழ் நடைமுறைப் படுத்த முயற்சிப்பது அதைவிட (பயங்கரவாத தடைச் சட்டத்தை)ஆபத்தானதுஎனஅவர் மேலும் தெரிவித்தார். (இ-7)




யாழ்ப்பாண பிரதேச செயலக கலாசாரப் பேரவையானது அண்மையில் நடத்திய நாடக எழுத்துரு ஆக்கப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற ஜோ. ஜெஸ்ரின், பிரதேச செயலக கலாசார பேரவையானது கடந்த திங்கட்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடத்திய கலாசார விழாவின் போது சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

(படம்:-கொழும்புத்துறை செய்தியாளர்)

*நெல்லியடி கட்டைவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் ஒரு மாதத்தில் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட பொருட்கள் கொள்வனவு செய்த 3 அதிர்ஷ்டசாலிகளுக்கு பரிசுகள் கூட்டுறவுச் சங்கத்தினால் அண்மையில் வழங்கப்பட்டிருந்தன.*


*இப்பரிசில்களை வடமாகாணசபை உறுப்பினர் தர்மலிங்கம் வழங்கி வைத்த போது...*

*(படம்:-கரணவாய் செய்தியாளர்)*





வடமராட்சி தெற்கு மேற்கு கரவெட்டி பிரதேச சபையால் வதிரி நாகதம்பிரான் ஆலயத்திற்கு பயன்தரு மரக்கன்றுகள் அண்மையில் வழங்கப்பட்டன. இம் மரக்கன்றுகளை பிரதேச சபைச் செயலாளர் க.கனகதுரை வழங்கி வைத்தார். (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)



நெதர்லாந்து அரசின் இலங்கைக்கான தூதுவர் ஆன்விராங்கின் இன்றைக்கான சரித்திரம் என்ற தொனிப்பொருளில் அமைந்த கண்காட்சி யாழ்.பொது நூலகத்தின் கேட்போர் கூடத்தில் கடந்த 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு நேற்று நிறைவடைந்துள்ளது.

(படங்கள்:-கொழும்புத்துறை செய்தியாளர்)

# வெலிஓயாவிற்கு பேருந்து மாற்றப்பட்டமையால் போக்குவரத்து வசதி இன்றி அவதியுறுகின்றோம்

## பாதிக்கப்பட்ட மக்கள் ஆதங்கம்

(முள்ளியவளை)

முல்லைத்தீவிலிருந்து புதுக்குடியிருப்பு இரணைப்பாலை வழித்தடங்கல் வழியாக மாத்தளன்வரை தினமும் மூன்று வேளை களிலும் இ.போ.ச.பேருந்து சேவை நடை பெற்று வந்த நிலையில் தற்போது குறித்த பேருந்தை வெலிஓயாவிற்கு சேவையில் ஈடுபடுத்தியுள்ளனர் முல்லைத்தீவு இ.போ. சபையினர்.

இந்நிலையில் தமக்கான பேருந்து சேவை எதுவும் நடைபெறாத நிலையில் பாதிக்கப் பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கு மாற்று நடவடிக்கையாக எந்த வொரு பேருந்தையும் இ.போ.சபையினர் சேவையில் ஈடுபடுத்தவில்லையென அம் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இதனால் மாத்தளன், புதுமாத்தளன், அம்பலவன் பொக்கணை, செம்மன்குன்று ஆகிய கிராமங்களில் வாழும் மக்கள், மாணவர்கள் போக்குவரத்து வசதியின்றி பெரும் அவதியுறும் நிலையில் உள்ளனர்.

இதுபற்றி பாதிப்பிற்கு உள்ளாகிய மக்கள் கருத்துத் தெரிவிக்கையில், தமது கிராம வாசிகளில் பெருமளவானோர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்கள். இதனால் போக்குவரத்து வசதியற்றவர்களாகவே தாம் உள்ளதாகவும் பேருந்து சேவையினை நிறுத்தியமையினால் தமது அத்தியாவசிய தேவைக்காக வைத்தியசாலைக்கோ அல் லது மாணவர்கள் பாடசாலைகளுக்கோ சென்று திரும்ப முடியாத அவல நிலைக்கு உள்ளாகியுள்ளதாக அவர்கள் தெரிவிக் கின்றனர்.

அத்துடன் வெலிஓயாவிற்கு பேருந்து சேவையை மேற்கொள்ளவேண்டுமாயின் மாத்தளனிற்கு சேவையில் ஈடுபட்ட பேரு ந்தை மாற்றியதற்கான காரணம் என்ன? என அம்மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எனவே தமது கிராமத்திற்கான பேருந்து சேவையை விரைவாக ஏற்படுத்தித் தருமாறு அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-302)

# உள்ளூராட்சி வட்டார எல்லைகளின் விபரங்கள் வர்த்தமானியில் வெளியீடு

(மல்லாவி)

மாந்தை கிழக்கு பிரதேச சபையின் உள் ளூராட்சி வட்டார எல்லைகளின் விபரங்களை அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள் ளதாக மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய எட்டு வட்டாரங்கள் தெரிவு செய்யப்பட்டு எதிர்வரும் காலங்களில் 8 உள் ளூராட்சி சபைகளுக்கான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இதன்பிரகாரம் இல. 1 விநாயகர்புரம் வட்டா ரத்தினுள் பொன்னகர், விநாயகர்புரம் ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளும் இல. 2 கரும் புள்ளியான் வட்டாரத்தினுள் பூவரசன் குளம், கரும்புள்ளியான் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளும் இல. 3 பாண்டியன்குளம் வட் டாரத்தினுள் பாண்டியன்குளம் கிராம சேவை யாளர் பிரிவும் இல. 4 பாலிநகர் வட்டாரத் தினுள் பாலிநகர் கிராமசேவையாளர் பிரிவும் இல. 5 ஒட்டறுத்தகுளம் வட்டாரத்தினுள் கொல்ல விளான் குளம், அம்பாள் குளம், ஒட்டறுத்த குளம் ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளும் இல. 6 பனங்காமம் பற்று வட்டாரத்தினுள் வன்னி விளான்குளம், மூன்று முறிப்பு ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளும் இல. 7 செல்வ புரம் வட்டாரத்தினுள் சிவபுரம், செல்வபுரம் ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளும் இல. 8 நட்டாங் கண்டல் வட்டாரத்தினுள் சிராட்டி குளம், நெட் டாங்கண்டல் ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளும் உள்ளடங்குவதாக அவர் அறிவித்துள்ளார். (2-15)

## 90 இலட்சம் ரூபா நிதியில்

# செல்வபுரம் தொடக்கம் குமரிகுளம் வரையுள்ள வீதி புனரமைக்கப்படவுள்ளது

(மல்லாவி)

உலக வங்கியின் நிதியனுசரணையுடனும் வடக்கு மாகாண சபையின் கீழுள்ள மாந்தை கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட செல்வபுரம் கிராமம் தொடக்கம் குமரிகுளம் கிராமம் வரை யுள்ள 750மீற்றர் வீதி 90 இலட்சம் ரூபா நிதி செலவில் கல் இட்டு தார் வீதியாக புனரமைக் கப்படவுள்ளதாக மாந்தை கிழக்கு பிரதேச சபை செயலாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது, மாந்தை கிழக்கு பிரதேசசபைக்குட்பட்ட செல்வபுரம் தொடக்கம் குமரிகுளம் வரை யிலான 750 மீற்றர் தூரத்திற்கு கல் இட்டு தார் வீதியாக்கும் வேலைத்திட்டம் உலக வங்கியின் நிதியனுசரணையுடனும் பிரதேச சபையின் பங்களிப்புடனும் நடைபெறும்.

இவ்வேலைக்கான ஒப்பந்தகாரர் தெரிவு இடம்பெற்று முடிந்ததும் எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதமளவில் குறித்த வீதியின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 120 நாட்களினுள் நிறைவடையவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீடு

(வவுனியா)

பசுந்திரா சசி எழுதிய ''பாவு தளிர் தூவு வானம்'' சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீடு எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு செட்டிகுளம் மகா வித்தி யாலயத்தில் இடம்பெறவுள்ளது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் இ.இந் திரராசா தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக சாகித்திய ரத்னா தெளிவத்தையோசப்பும் சிறப்பு விருந் தினர்களாக செட்டிகுளம் மகா வித்தியாலய அதிபர் க.தர்மரட்ணம், ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் எல்.சீ.லம்பேட் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக தமிழருவி த.சிவகுமாரன், கவிஞர் மேமன் கவி, ஊடக வியலாளர் கலாபூஷணம் கே.பொன்னுத் துரை ஆகியோரும் கலந்து கொள்வர். (2)




# சுனாமி நினைவாலயத்தின் துப்புரவுப்பணிகள் ஆரம்பம்

## நேரில் சென்று பார்வையிட்டார் பாராளுமன்ற உறுப்பினர்

(முள்ளியவளை)

முள்ளியவளை நெடுங்கேணி வீதியின் 6 ஆம் கட்டையடியில் உள்ள சுனாமி நினைவாலயமானது மீள் குடியமர்வின் பின்னர் இதுவரை சுத்திகரிக்கப்படாத நிலையில் பற்றைக் காடாக காட்சியளிக் கின்றது. இந்நிலையில் இங்கு புதைக் கப்பட்டவர்களுக்கு இந்தவருடம் அஞ்சலி செய்வதற்கும் அவர்களை நினைவு கொள் வதற்கும் ஏதுவாக பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜாவின் பணிப்பிற்கு அமைய கரைதுறைப்பற்று பிரதேச சபை யினரால் இந்நினைவாலயத்தை துப்புரவு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வரு கின்றது. இந்நினைவிடத்திற்கு நேற்று முன்தினம் பிற்பகல் நேரடியாகச் சென் றிருந்த பாராளுமன்ற உறுப்பினர் மேற் கொள்ளப்பட்டுவரும் துப்புரவுப் பணிகளைப் பார்வையிட்டதுடன் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை இந்நினைவு இடத்தில் மேற்கொள்ளவுள்ள நினைவு நாள் ஏற் பாடுகள் பற்றியும் ஆராய்ந்தார். இந்நினை வாலயத்தில் இந்த வருட நினைவுகூரல் நிகழ்வுகள் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில் நடைபெற வுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. சுனாமி அவலத்தின்போது முல்லைத்தீவில் உயிரி ழந்த பல்லாயிரக்கணக்கானோரில் இனம் காணப்பட்ட மற்றும் அடையாளம் காணப் படாத சுமார் ஆயிரத்து 500இற்கு மேற் பட்டோர் மேற்படி இடத்தில் புதைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-302-281)

# வீர, வீராங்கனைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

வடக்குமாகாணவிளையாட்டுத்திணைக்களத் தினால் வருடாந்தம் நடத்தப்படுகின்ற விளை யாட்டுத் துறையில் சிறப்பாக செயற்பட்ட வீரர் களைதெரிவுசெய்துகௌரவிக்கும்வர்ண இரவு - 2015 ஆனது எதிர்வரும் மார்கழி மாதம் 30 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதில் விருதுகளைப் பெறுவதற்கு தகுதி வாய்ந்த பின்வரும் விளையாட்டு வீர, வீராங் கனைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன. அவற்றை 21.12.2015ஆம் திகதி க்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் அனுப்பி வைக்க வேண்டும்.

இலங்கை தேசிய அணியினை பிரதிநிதித் துவப்படுத்தி இலங்கையில் நடைபெற்ற அல் லது இலங்கைக்கு வெளியே நடைபெற்ற சர்வதேச போட்டியொன்றில் எமது மாகாண வீரர் பங்குபற்றியிருத்தல், இலங்கை தேசிய அணியினை பிரதிநிதித்துவப்படுத்தி இலங் கையில் நடைபெற்ற அல்லது இலங்கைக்கு வெளியே நடைபெற்ற சர்வதேச போட்டியொ ன்றில் எமது மாகாண வீரர் பங்குபற்றி பதக் கம் பெற்றிருத்தல், இலங்கையில் நடைபெறும் தேசிய சிரேஷ்ட/கனிஷ்ட போட்டியொன்றில் எமது மாகாண வீரர் பங்குபற்றி பதக்கம் பெற்றிருத்தல், வடக்குமாகாண மாவட்டங்களுக் கிடையிலான போட்டியொன்றில் மாகாண வீரர்/வீராங்கனைகள் பங்குபற்றி புதிய சாத னையொன்றினை நிலைநாட்டியிருத்தல்.

குறிப்பு:- இவ்வாண்டில் நடைபெற்ற போட் டியிலேயே மேற்படி சாதனை நிலைநாட்டி யிருத்தல் வேண்டும்.

தகுதியானவர்கள் பாடசாலை மாணவர் களாயின் பாடசாலை அதிபர் மற்றும் பிரதிக் கல் விப்பணிப்பாளர், மாகாணக்கல்வித்திணைக்களம் ஊடாக பணிப்பாளர், விளையாட்டுத் திணைக் களம், வடமாகாணத்திற்கு அனுப்பி வைக்கவும்.

தகுதியானவர்கள் பாடசாலை மாணவர் அல் லாதவர் ஆயின் மாவட்ட விளையாட்டு உத்தி யோகத்தர் ஊடாக பணிப்பாளர், விளையாட்டுத் திணைக்களம், வடமாகாணத்திற்கு அனுப் பிவைக்கவும் என வடமாகாண விளையாட் டுத்திணைக்கள பணிப்பாளர் அறிவித்துள் ளார். மேலதிக தகவலுக்கு 077 386 8560, 021 320 2718 என்ற தொலைபேசி இலக் கங்களுடன் தொடர்பு கொள்ளவும் என அறிவிக் கப்பட்டுள்ளது. (இ



கிளிநொச்சியில் பெய்த அடைமழை காரணமாக திரு வையாறு முதலாம் பகுதி பிர தான வீதியில் அமைந்துள்ள மதகு பகுதி போக்குவரத்து செய்ய முடியாத அளவிற்கு சேதமடைந்துள்ளது. எனவே குறித்த வீதியை புனரமைப்பு செய்வதற்கு சம்பந்தப்பட் டவர்கள் நடவடிக்கை எடுக் கவேண்டுமென பொதுமக் கள் வேண்டுகோள் விடுத் துள்ளனர். (2-272)

# இந்திய மீனவரின் சடலம் மையவாடியில் அடக்கம்

(மன்னார்)

தலைமன்னார் கடற்பரப்பில் மீட்கப்பட்ட காணாமற் போன இந்திய மீனவர் ஒருவரின் ஜனாசா நேற்று முன்தினம் மாலை மன்னார் உப்புக்குளம் முஸ்லிம் மையவாடியில் அடக் கம் செய்யப்பட்டுள்ளது.

இராமேஸ்வரம் இராமநாதபுரம் பகுதியைச் சேர்ந்த 4 மீனவர்கள் கடற்றொழிலுக்குச் சென்றபோது கடந்த 29ஆம் திகதி முதல் காணாமற் போயுள்ளனர்.

குறித்த மீனவர்களை தொடர்ச்சியாக தேடி வந்த நிலையில் கடந்த 4ஆம் திகதி இரவு தலைமன்னார் கடற்பரப்பில் ஆண் ஒருவரின் சடலம் கரையொதுங்கியது.

தலைமன்னார் கடற்படையினரின் உதவி யுடன் குறித்த சடலம் மீட்கப்பட்டு மன்னார் பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட் டது.

குறித்தசடலத்தின்கைப்பகுதியில் 'எச்றுபினா' என பச்சை குத்தப்பட்டிருந்தமை அடையாளம் காணப்பட்டது.

இந்நிலையில் இந்திய உயர்ஸ்தானிகர் காரியாலயத்தினூடாக குறித்த தகவல் இந்தி யாவிற்கு அறிவிக்கப்பட்டதோடு சடலமாக மீட்கப்பட்ட மீனவரின் புகைப்படமும் அங்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த சடலம் காணா மற்போன 4இந்திய மீனவர்களின் ஒருவ ரான இராமேஸ்வரம் இராமநாதபுரம் சல்லி மலை கிராமத்தைச் சேர்ந்த யாகீர் ஹீசைன் என அடையாளம் காணப்பட்டது.

குறித்த மீனவர் ஒரு முஸ்லிம் மதத்தைச் சேர்ந்தவர் என்பதனால் அவரது ஜனாசா முஸ்லிம் மதத்தின் முறைப்படி அடக்கம் செய்யப்படவேண்டும் என இந்திய துணைத் தூதுவர் ஆ.நடராஜன் மன்னார் மாவட்ட மீனவ சமாசத்தின் தலைவர் என்.எம்.ஆலம் ஆகியோரிடம் கோரிக்கை விடுத்தார்.

இதனையடுத்து மன்னார் உப்புக்குளம் பள்ளி பரிபாலகர் சபையூடாக மன்னார் உப் புக்குளம் முஸ்லிம் மையவாடியில் அடக்கம் செய்யப்பட்டது. (2-281)

# டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் அடையாளம் காணப்பட்டால் சட்ட நடவடிக்கை

## வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ்.லவன் எச்சரிக்கை

**வவுனியா நகரையண்டிய பகுதிகளில் டெங்கு பரவும் அபாயம் உள்ளதால் அதனை கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ்.லவன் தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொடர்ச்சியாக பெய்த மழை காரணமாக வவுனியா நகரப் பகுதியில் டெங்கு பரவக் கூடிய பல இடங்கள் அடையாளங் காணப் பட்டுள்ளன. இதனை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.




பொது மக்களும் தமது வீடு மற்றும் வீட்டுச் சூழல் என்பவற்றில் நுளம்புகளின் பெருக்கம் ஏற்பட இடமளியாத வகையில் முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.எமது சுகாதார துறை பணியாளர்கள், பொலிஸார், தாதிமார் என டெங்கு ஒழிப்பு உத்தியோகத்தர்கள் டெங்கு பரவும் இடங்களை அடையாளம் காணும் வேலைகளில் ஈடுபட்டுள்ளனர் அவர்கள் வீடு, வீடாக சென்று டெங்குநுளம்பின் பெருக்கம் தொடரபில் பரிசோதனை செய்வார்கள். டெங்கு நுளம்புகள் பெருகும் வகையில் நீர்தேங்கும் இடங்கள் அடையாளம் காணப்பட்டால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-250)





முல்லைத்தீவு மாங்குளம் கிராம சேவையாளர் பிரிவில் இயங்கி வரும் அருட்தந்தை சறத்ஜீவன் முன்பள்ளி சிறார்களின் ஒ ளி விழா நிகழ்வு அண்மையில் இடம்பெற்ற போது...(பனிக்கன்குளம் செய்தியாளர்)

## மாகாண தொழில் பயிற்சி நிலையத்தில் இருபாலாருக்குமான தொழில் பயிற்சி நெறிகள்

### நாளை ஆரம்பம்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்தில் அமைக்கப் பட்டுள்ள மாகாண தொழிற்பயிற்சி நிலையத்தில் க.பொ.த (சா/த)பரீட்சை எழுதிய ஆண், பெண் இருபாலாருக்குமான தொழிற்பயிற்சி நெறிகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதாக துணுக்காய், வலயக் கல்விப் பணிப்பாளர் எல். மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இப் பயிற்சி நெறிகளில் இணைய வடிவமைப்பு, நீர்க்குழாய் பொருத்துநர், வீட்டு மின்னிணைப்பு, அழகுசாதனக்கலை, சிறுவர் பெண்களுக்கான ஆடை வடிவமைப்பு , இலத்திரனியல், வெல்டிங் ஆகியன நடை பெற வுள்ளது. இப் பயிற்சிகளில் வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்திற்குட்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த க.பொ.த (சா/த) பரீட்சை எழுதியவர்கள் பங்கேற்க முடியும்.

இப் பயிற்சி நெறிகள் அனைத்தும் இலவசமாக நடைபெறுவதுடன் ஆறு மாதங்களை கொண்டதுடன் பயிற்சி நெறிகளைப் பூரணமாக பூர்த்தி செய்பவர்களுக்கு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் உறுதிப்படுத்தப் பட்ட சான்றிதழ் வழங்கப்படும். இப் பயிற்சி நெறிகளுக்கு வயதெல்லை கணிக்கப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

## மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத்தலைவர்கள் நியமனம்

மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத் தலைவர்களாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள ஐந்து மாவட்டங்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 5 நாடாளுமன்ற உறு ப்பினர்கள் மாவட்ட அபிவிருத்திக்குழு இணைததலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, யாழ்ப்பாணம் - மாவை சேனாதிராஜா, வவுனியா - செல்வம் அடைக்கலநாதன், கிளிநொச்சி - எஸ்.சிறீதரன், மன்னார - சார்ள்ஸ் நிர்மலநாதன், முல்லைத்தீவு - எஸ். சிவமோகன், மட்டக்களப்பு- ஜி.ஸ்ரீநேசன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களிலும் தமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இணைத்தலைமை பதவி வழங்கப்பட வேண்டும் என்ற எதிர்பாரப்பு தம்மிடம் இருப்பதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். (2-281)

## மன்னார் விளையாட்டு மைதானத்தில் மது அருந்துவதை தடுத்து நிறுத்துங்கள்

### விளையாட்டுச் சமூகம் கோரிக்கை



மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் வைத்து விசமிகள் மதுபானம் அருந்துவதுடன், போத்தல்களை அப்பகுதியில் போட்டு உடைப்பதாக சமூக ஆர்வலர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். குறிப்பாக இரவு வேளைகளில் மைதானத்தில் கூடும் ஒரு சில இளைஞர்கள், அங்கு காணப்படும் மைதானத்தின் மேடையினுள் நுழைந்து மது அருந்தி விட்டு போத்தல்களை அங்கேயே போட்டு உடைப்பதாக விளையாட்டு வீரர்களால் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் விளையாட்டுத்துறையில் பல்வேறு பட்ட குறைபாடுகள் காணப்படும் நிலையில், அதனை நிவர்த்தி செய்வதற்கு பல்வேறு கோரிக்கைகளை விளையாட்டு துறையினரினால் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ்வாறு ஒருசில விசமிகள் குறித்த விளையாட்டு மைதான வளாகத்தில் இவ்வாறாக செயற்படுவதால் விளையாட்டுத்துறை சமூகம் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் இவ்வாறான அநாகரீக செயற்பாட்டால் விளையாட்டு மைதானம் மேலும் பாதிப்படைவதாக விளையாட்டுச் சமூகம் உள்ளிட்ட சமூக ஆர்வலர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். மன்னார் நகர சபையின் மேற்பார்வையில் இருக்கும் குறித்த விளையாட்டு மைதானத்திற்குள் இவ்வாறான அநாகரீக செயற்பாடுகள் நடைபெறுவதை தடுத்து நிறுத்த சம்பந்தப்பட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் விளையாட்டுச் சமூகம் கவலை அடைந்துள்ளது.


ஏற்கனவே விளையாட்டு மைதானத்தை மேற்பார்வை செய்ய ஒரு பணியாளர் பணியில் உள்ள நிலையில் இவ்வாறு நடைபெறும் சமூக விரோத செயற்பாடுகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டு செல்ல தவறியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இங்கு உடைக்கப்படும் போத்தல்களின் கண்ணாடி ஓடுகள் விளையாட்டு மைதானத்தின் மேடை பகுதியில் சிதறி காணப்படுகின்றது.

குறித்த போத்தல் ஓடுகள் விளையாட்டு மைதானத்தில் பரவப்பட்டால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாக அறிந்திருந்தும் சம்பந்தப்பட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க தவறியுள்ளதாக விளையாட்டுச் சமூகம் கவலை அடைந்துள்ளது.

எனவே விளையாட்டு மைதான பகுதியில் மதுபானம் அருந்துவது போன்ற செயற்பாடுகளை உடன் தடுத்து நிறுத்தி உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு விளையாட்டுச்சமூகம் உள்ளிட்ட சமூக ஆர்வலர்கள் சம்பந்தபட்ட நிர்வாகத்திடம் வேண்டுகோள் விடுக்கின்றனர். (2-281)

# மகத்துவம் மிக்கது



# மார்கழி மாதம்



மாதங்களில் மகிமை மிக்கது மார்கழி - இந்த மாதம் சுபகாரியங்கள் செய்வதற்கு நிறைவில்லாததென்பது தவறாகும். வருடத்தை நான்காகப் பிரித்தால் உத்தராயணத்திற்கு முந்த உஷத காலத்தின் மார்கழி வருகிறது.

தேவர்களுக்கு ஆடி முதல் மார்கழி வரை இரவு காலமாகும். தை முதல் ஆனி முடிய பகலுமாக ஒரு நாளாகும். எனவே மார்கழி தேவர்களுக்கு இறுதிக் காலமாகும்.

மணிவாசகர் சைவ சமயத்திற்கு அளித்த அரும்பெரும் சொத்து திருவாசகம், திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை. மார்கழி மாதத்தில் அதிகாலையிலே ஆலயங்களில் திருப்பள்ளி எழுச்சி ஓதப்படும். இந்த 10 பாடல்களிலும் திருப்பெருந்துறை சிவபெருமானை துயிலுணர்ந்து பள்ளியின்றும் எழுந்தருள்வீராக அருள் நிதி தர வரும் ஆனந்த மலையே அறிவரியாய், எமக்கெளியாய் என்னையும் ஆண்டருள் புரிபவனே. எண்ணகத்தாய் உலகிற்கு உயிரானாய் ஆட்கொள்ளவல்ல ஆரமுதே பள்ளி எழுந்தருளாயே என பாடியருளியுள்ளார்.

தொடர்ந்து உதயத்திலே பாடப்படுகின்ற திருவெம்பாவையிலே "ஆதியும் அந்தமும் இல்லாத அரும் பெரும் சோதி'' என தொடங்கி பெண்ணே! சோதியான சிவபெருமானை நாங்கள் பாடுவதைக் கேட்ட பின்பும் நீ தூங்குகின்றாயோ என அடி எடுத்து 12 ஆவது பாடலில் ''ஆர்த்த பிறவி துயர்கெட நாம் ஆத்தாடும்" பெண்ணே சிவபெருமானது படைத்தல், காத்தல், அழித்தல் என்றும் முத்தொழில் விளையாட்டு சிறப்பினை எடுத்துக் கூறி பொய்கையிலே நீராடி வணங்கி விளையாடுவோமாக எனவும் ''போற்றி அருளுக நின் ஆதியாம் பாத மலர்" என இறுதிப் பாடலில் பெருமானே காப்பாற்றுக! ஆதியும் அந்தமுமாயுள்ள பாதங்கள் காக்க நாங்கள் உய்ந்து பிழைக்க ஆட்கொண்டருளும். பாதங்கள் காக்க - என்று நீராடி மார்கழி நீருக்கு வணங்குவோம் என நிறைவு செய்துள்ளார்.

அடுத்த பொக்கிசமானது திருவாசகம். திருவாசகத்திற்கு உருகாதோர் ஒருவரில்லை. திருவாதவூரரின் திருவாசகத்தினை தேன் என வர்ணிக்கப்படுகிறது. திருவாசகத்தினை மோகன இராகத்தில் இசை வழுவாது ஓதும்போது கேட்போர்க்கு மெய்தான் அரும்பி விதிர்விதித்து விரையார் கழற்கு கைதான் தலை வைத்து கண்ணீர் ததும்புகின்ற நிலை ஏற்படுகின்றதல்லவா. "நானே பொய் என் நெஞ்சும் பொய் என் அன்பும் பொய் ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே'' என்று தன்னையும் தனது அன்பினையும் இறைவனிடத்தில் பொய்யாகக் காண்பித்து அழுதால், தொழுதால் இறைவன் அருளுவார் என அற்புதமாக எடுத்துக்காட்டியுள்ளார். மார்கழி மாதத்திற்கு மெருகூட்டும் வகையில் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி தொல்பாவாய் ஆண்டாள் மார்கழி மாதம் முழுவதும். ''மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளாம்

நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்'' என திருப்பாவையிலே தொடங்கி 30 ஆவது பாடலில் "வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனை" என வழுத்தி

''செங்கண் திருமுகத்து செல்வத்திருமாலால்

எங்கும் திருவருள் பெற்று இன்புறுவரெம்பாவாய்" என நிறைவு செய்திருக்கிறார். திருமாலின் பெருமையை இப்பாடல்கள் மூலம் முன்னெடுத்திருக்கின்றார்.

ஈழத்தில் வரலாற்றுப் புகழ் மிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயம், யாழ்ப்பாணம் வண்ணை வெங்கடேஸ்வர வரதராஜப் பெருமாள் ஆலயம், வல்லிபுரம் ஆழ்வார் ஆலயங்களில் அதிகாலை வேளை விஷேட திருப்பாவை பூஜை இடம் பெற்று 30 திருப்பாவை பாடல்களும் ஓதப்பட்டு வருகின்றது.

மார்கழி மாத வைகுண்ட ஏகாதசி தினத்தில் குறிப்பிட்ட ஆலயங்களில் ''சுவர்க்க வாசல்" தரிசனம் சிறப்பாக நடைபெறும்.

இந்த மாதத்திற்கு மேன்மை தருகின்ற வகையிலே இறைவன் உலகத்தினர் உய்யும் பொருட்டு திருவாதிரை நன்னாளில் "ஆருர்தர தரிசனம்" தந்து அடியவர்களுக்கு அருட்காட்சி தந்தார்.

மேலும் இம் மாதத்திற்கு சிறப்பூட்டும் வகையிலே மக்கள் தங்கள் வீட்டு வாயில்களிலே சாணத்தினால் மெழுகி மாக்கோலமிட்டு,பிள்ளையார் பிடித்து 31 நாட்களும் வணங்கி வந்து தைப்பொங்கல் தினத்தில் 31 மோதகம் பிடித்து ஆலயங்களில் வழிபட்டு பிடித்த பிள்ளையாரை கடலில் சங்கமமாக்குகின்ற பண்டை நிகழ்வு சில கிராமங்களில் இன்றும் நிலவி வருகின்றது.

இந்த மாதத்தில்- வரும் பாவை நோன்பு, மார்கழி நோன்பு, காத்தியாயனி விரதம் கன்னியர்கள் அனுஷ்டித்தால் கண்ணிறைந்த கணவனும் சுமங்கலிகள் அனுஷ்டித்தால் கணவனோடு மங்களகரமாக



கலாபூஷணம்
க.லோகேஸ்வரன்.
தொல்புரத்தூர்



நல்லூர் வடக்கு அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகர பிள்ளையார் ஆலயத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற சஜமுகசங்காரம் நிகழ்வின் போது

## ஈழத்து சிதம்பர தரிசனம்

காலனைக் காலால் உதைத்தவனே
காரைநகர் திண்ணபுரத்தில் ஆடுகின்றான்
ஏழை பங்காளனாக ஐயனுடன் உறைபவனே
எழிலன்னை சௌந்தராவுடன் அருளுகின்றான்
நீள நினைத்திட வாழ்வு தருபவனே
நீரெறுசடையனான நிலவுலவும் சுந்தரேசன்
ஈழத்து சிதம்பரத்தை ஆள்பவனே
எண்ணிய யாவையும் தந்து
எம்மை ஆளுகிறான்.

மதுரகவி காரை. எம். பி. அருளானந்தன்

# அரசாங்கம் அவன் கார்ட் நிறுவனத்திற்கு 40 000 மில். டொலர் செலுத்த வேண்டும்

(கொழும்பு)

**ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டாலும் அவன் கார்ட் நிறுவனத்திற்கு அரசாங்கம் 40 ஆயிரம் மில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்த நேரிட்டுள்ளதாக அந்த நிறுவனத்தின் வர்த்தகக் கப்பல் முகாமையாளர் முன்னாள லெப்டினன் கேணல் நிலந்த ஜயவீர தெரிவித்துள்ளார்.**

அவன் கார்ட் நிறுவனத்திற்கு சொந்தமான மிதக்கும் ஆயுதக் கப்பல் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை கடற்படையினர் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளனர்.

எனினும், இரு தரப்பிற்கும் இடையிலான ஒப்பந்தங்கள் ஏதும் இரத்து செய்யப்படவில்லை.

இதனால் அரசாங்கம், அவன் கார்ட் நிறுவனத்திற்கு 40 ஆயிரம் மில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்த வேண்டியுள்ளது.

அரசாங்கத்திற்கும் அவன் கார்ட் நிறுவனத்திற்கும் இடையில் கூட்டொப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

ஏதேனும் ஓர் தரப்பு தனித்து தீர்மானம் எடுத்து ஒப்பந்தத்தை ரத்து செய்தால் ஏனைய தரப்பிற்கு 40 ஆயிரம் மில்லியன் அமெரிக்க டொலர் செலுத்த வேண்டும்.

நாம் ஒப்பந்த அடிப்படையிலேயே செயற்படுகின்றோம். எனினும் அவ்வாறு ஒப்பந்தத்தை மதித்து செயற்படவில்லை.

கடற்படையினர் எமது நிறுவனத்தின் பணிகளை பொறுப்பேற்று ஒரு மாத காலமாகின்றது.

இதனால் 6,754 பேரின் தொழில் வாய்ப்புக்கள் இழக்கப்பட்டுள்ளது.

நேரடியானதும் மறைமுகமானதுமான வருமானங்கள் இழக்கப்பட்டுள்ளன. இதனால் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் பாதிக்கப்பட்டள்ளனர் என முகாமையாளர் நிலந்த ஜயவீர தெரிவித்துள்ளார்.

சிங்கள நாளிதழ் ஒன்று தொலைபேசி மூலம் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்த போது அவர் இதனைக் தெரிவித்தார். (இ-7)

# அரசியலமைப்புக்கு முரணான குற்றவியல் திருத்தச் சட்டம்

## த.தே.கூ. சுட்டிக்காட்டு

குற்றவியல் விடயங்களின் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழ், ஒழுங்குவிதிகள் திருத்தச் சட்டம் தொடர்பில் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, இந்தத் திருத்தச் சட்டம், அரசியலமைப்புக்கு முரணானது என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

2015 ஆம் ஆண்டு, டிசெம்பர் 11 ஆம் திகதிய ஒழுங்குப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள இந்த விடயம் தொடர்பில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

1887 தண்டனைக் கோவையின் சில ஏற்பாடுகளுக்கு, புதிய ஏற்பாடு ஒன்றை புகுத்துவது, இந்தச் சட்டமூலத்தின் நோக்கமாகும் என்பதுடன், 1979 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க குற்றவியல் செயன்முறைக் கோவையைத் திருத்தவும், இந்தச் சட்டமூலம் கொண்டு வரப்படுகிறது. புதிதாக வரும் சட்ட ஏற்பாடொன்று, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஒரு பிரிவாக உள்ளது என்றும அக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த ஏற்பாட்டைப் பயன்படுத்தித்தான் முன்னைய அரசாங்கம், தமிழ், முஸ்லிம் சமுதாயங்களைத் தாக்குவதற்குப் பயன்படுத்தியதுடன், அவர்களின் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தைப் பறித்தது.

தமிழ் ஊடகவியலாளர் ஜே. எஸ். திஸநாயகத்துக்கு, 20 வருடச் சிறைத் தண்டனை விதிக்கவும், இச்சட்டமே பிரயோகிக்கப்பட்டது. முஸ்லிம் அரசியல்வாதியான அசாத் சாலியைக் கைது செய்யவும் தடுத்து வைக்கவும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 2(1)(எச்) பிரிவு பயன்படுத்தப்பட்டது என்றும் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

அரசியலமைப்பின் 14(1) (அ) பிரிவின் பிரகாரம், பேச்சுச் சுதந்திரமும் கருத்து தெரிவிக்கும் சுதந்திரமும் உள்ளது. எனினும், புதிய திருத்தச சட்டம், அரசியலமைப்பின் மேற்குறிப்பிட்ட பிரிவுக்கு முரணானதாக உள்ளது என்றும் கூட்டமைப்பு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.(இ-7)

# “இசை கேட்டால் புவி அசைந்தாடும் அது இறைவன் செயலாகும்”



ஆயகலைகள் அறுபத்துநான்கு என்பதும் அக்கலைகளுக்கும் கலைத்தெய்வமான சரஸ்வதி தலைமை தாங்குகிறாள் என்பதும் எமது இந்து சமய மரபாகும். அறுபத்து நான்கு கலைகளுள் சிறந்து விளங்குவது இசைக்கலை என்றால் மிகையாகாது. இசையால் ஈர்க்கப்படாதவை எவையும் இல்லை என்றே கூறலாம். இசை கேட்டால் புவி அசைந்தாடும் அது இறைவன் செயலாகும் என்கிறது பாடல். நாதப் பிரமமாய் விளங்கும் இறைவனை அடைவதற்குச் சிறந்த சாதனமாக விளங்குவது இசையேயாகும். இசையால் தான் நாமும் இன்புற்று மற்றவர்களையும் இன்புற்றிருக்கச் செய்யலாம்.

ஆலயங்கள் என்பது ஆன்மாக்கள் லயப்படும் இடமாகும். எனவே ஆன்மாக்களை இசை மூலம் நல்வழிப்படுத்தி இறைவனை அடையச் செய்வதில் ஆலயங்கள் பெரும் பங்காற்றுகின்றன "பண்ணும் பதமேழும் பலவோசைத் தமிழவையும் உள்நின்றதோர் சுவையும் உறு தாளத் தொலிபலவும்" என்பது திருஞானசம்பந்தரின் அருள்வாக்கு. "ஏழிசையாய் இசைப் பயனாய்" என்று சுந்தரமூர்த்தி நாயனார் பாடினார் இசையும் இறைவனும் பாலுடன் கலந்த நெய்போல ஒன்றை விட்டு ஒன்று பிரிக்க முடியாது என்பது ஆன்றோர் கருத்து. இறைவனை அடைய இலகுவான வழி இசையே என்பது அனைவரும் அறிந்த உண்மை. இராவணன் சாமகானம் பாடி சிவனை மெய்மறக்கச் செய்தான் என்பதனை நாம் நூல்கள் வாயிலாக அறிய முடிகின்றது. சிந்துவெளி நாகரீகத்தின் மொகஞ்சதாரோ ஹரப்பா நகரின் அகழ்வாராச்சி மூலம் கண்டெடுக்கப்பட்ட சிலைகளில் பல இசை வாத்தியங்களுடன் காணப்படுகின்றன. இவை இசை மூலம் மக்கள் இறைவனை வழிபட்டனர் என்பதற்குச் சான்றாகும். இந்து ஆலயங்களின் கோபுரங்களில் காணப்படும் சிற்பங்களில் சிவனின் கையில் உடுக்கு, சரஸ்வதி கையில்வீணை, கண்ணனின் கையில் புல்லாங்குழல், நாரதரின் கையில் தம்புரா என்பவை வாத்தியங்களின் தொன்மையைக் காட்டுவதுடன் இறைவனுக்கும் இவைக்குமுள்ள தொடர்புகளை எடுத்தியம்புவனவாயுள்ளன.

மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் காணப்படும் இசைத் தூண்கள் இறைவனும் இசையும் ஒன்றித்து நிற்கும் நிலையை உணர்த்துகின்றது. திருஞானசம்பந்தருக்கு இறைவன் பொற்றாளம் வழங்கியதில் இருந்து பாடலை ஓசையுடன் பாடுவதுடன் லயத்துடனும் பாடும் பொழுது இறைவன் அதில் லயித்து விடுகின்றான் என்பது புலனாகின்றது. ஆலயத்தினுள் புகும்போது மணி, சேமக்கலம், சங்கு, பேரிகை என்னும் வாத்தியங்கள் இசைக்கப்படுகின்றன. பூசைக்காலங்களை அறிவிக்க காண்டாமணி இசைக்கப்படுகின்றது. பூசை நேரத்தில் தேவார பாராயணம் நடைபெறுகின்றது. பஞ்சபுராணம் ஓதப்படுகின்றது. விஷேட காலங்களில் திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி, சகலகலாவல்லிமாலை என்பன பாடப்படுகின்றன. திருவிழாக்காலங்களில் ஊஞ்சற் பாக்கள், நலங்கு, லாலி, பராக்கு, மங்களம் என்பன பாடப்படுகின்றன. நாதஸ்வரம், தவில் என்பனவும் இசைக்கப்படுகின்றன. இறைவனை இசையோடு வழிபடும்போது இறைவனுடன் ஒன்றிணைந்து விடும் உணர்வினை பெறுகின்றோம். மகுடியின் இசைக்கே அரவம் தன்னை மறந்து மயங்கி ஆடுகின்றது. எனவே இசைக்கு மயங்காதவர் எவரும் உலகில் இல்லை என்றே கூறலாம்.

உற்சவ காலங்களில் ஆலயக் கொடியேற்றத்தின் போதும் கொடியிறக்கத்தின்போதும் நவசக்திப் பண்கள், நவசக்தித் தாளங்கள் என்பன இசைக்கப்படுகின்றன. சுவாமி வீதியுலாவின் போது கொம்பு, திருச்சின்னம் என்னும் வாத்தியங்கள் இசைக்கப்படுகின்றன. நாதஸ்வரத்தில் மல்லாரி இசைக்கப்படுகின்றது. இங்கு கதி பேதங்கள் கையாளப்படுகின்றன. சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் தேவார இசையாலும் மணிவாசகர் திருவாசகத் தேனமுதாலும் (திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்) அருணகிரிநாதர் திருப்புகழ் பாமாலைகளினாலும் இறைவனை இசையுடன் போற்றி வழிபட்டனர். அபிராமி பட்டர் அபிராமியந்தாதி பாடி இறைவியைத் தனது துணையாக்கினார். எனவே இசையை பாதுகாப்பதற்கு அன்றிலிருந்து இன்று வரை இந்து ஆலயங்கள் முதன்மை வகித்திருப்பதை நாம் உணரலாம்.

இசை அனைத்தையும் கடந்து நிற்கும் என்பார்கள். இறைவனையே மகிழ்விக்கும் இசையானது மனித மனங்களை ஒன்று சேர்க்க உதவ வேண்டும். இசையின் தெய்வீகத்தை இசைக்கலைஞகளின் பெறுமதியை இளம் இசைக் கலைஞர்களின் முக்கியத்துவத்தை இசை ஆர்வலர்கள் உணர்ந்து அவர்களுக்கு இசை விழாக்களில் முக்கித்துவம் கொடுக்க வேண்டும். எமது எதிர்கால கலைத்துறைச் சந்ததியானது அறிவாற்றலும், இசைத்துறையில் விற்பனர்களாகவும் வர வேண்டும். சமகாலத்தில் ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், சிறார்கள் பல மன அழுத்தங்களோடு வாழ்கின்றார்கள். இவ்வாறான மன அழுத்த நேரங்களில் மிக மென்மையாக இசை வகைகளைக் கேட்க மனம் சாந்தி பெறும். அவ்வாறான இசையை நாம் எமது முன்னோர் காட்டிய வழிகளில் தொடர்ந்தும் பேணி எதிர்கால சந்ததியினருக்கு பொறுப்பு கொடுப்பது எம் போன்ற இசைக் கலைஞர்களின் தலையாய கடமையுமாகும். எனவே இசை ஆர்வலர்கள், பொது மக்கள் இசைக்கு முக்கியத்துவம் கொடுத்து இசையை வளர்க்க வேண்டும். இசையால் வசமாகா உலகம் மேது? எமது மாணவச் செல்வங்கள் அழியாச் செல்வமாகிய இசைக் கலையினை முறையாகப் பயின்று நம் முன்னோர்கள் வளர்த்த அருகி வரும் இசைக் கலையினை பேணிப் பாதுகாப்போமாக!

கலை இன்பமே நிலை நின்பமாம்

கலாவித்தகர்
திருமதி. மலர்விழி. கனகசபை,
உதவிக் கல்விப் பணிப்பாளர் ,
(அழகியல்)
தீவக கல்வி வலயம்.

# தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் எதிரொலி 1000 பாடசாலைகளை மூடிய நிர்வாகம்

**அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் சுமார் 1000 பாடசாலைகள் தீவிரவாதிகளின் அச்சுறுத்தலை அடுத்து மூடப்பட்டுள்ள சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**

லொஸ் ஏஞ்சல்ஸ் மற்றும் நியூயோர்க் பகுதிகளில் உள்ள பல பாடசாலைகளுக்கு தீவிரவாதிகள் மின்னஞ்சல் வழியாக அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக தகவல்கள் வெளியாகின.

இதனையடுத்து அங்குள்ள ஆயிரத்திற்கும் அதிகமான பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளதாக நகர அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால் அனைத்து பாடசாலை பேருந்துகளும் பாடசாலைகளுக்கு உடனே திரும்பி வரவேண்டும் என்றும், பெற்றோர்கள் யாரும் தங்கள் குழந்தைகளை பாடசாலைக்கு அழைத்து வர வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே தகவலறிந்து விரைந்து வந்த விசாரணை அதிகாரிகள் பல மணிநேர சோதனைக்கு பின்னர் வெடிகுண்டு மிரட்டல் வெறும்புரளியென தெரியவந்துள்ளது.

இருப்பினும் தீவிரவாதிகள் அல்லது அவர்களின் ஆதரவாளர்கள் நடைபெறும் சம்பவத்தினை உன்னிப்பாக கவனிக்கக் கூடும்என்பதால் பாதுகாப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர். (இ-7)

## கூட்டுப்படைத் தாக்குதலால் ஏமனில் 15 பேர் உயிரிழப்பு

(டுபாய்)

அரபு நாடுகளில் ஒன்றான ஏமனில் ஜனாதிபதி மன்சூர் ஹாதி ஆதரவு படையை எதிர்த்து ஈரான் ஆதரவு பெற்ற ஷியா பிரிவு ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கடுமையாக சண்டையிட்டு வருகின்றனர்.

இந்த ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக சவுதி அரேபியா கூட்டுப்படைகள் கடந்த மார்ச் மாதம் 26 ஆம் திகதி முதல் தாக்குதல்கள் நடத்தி வருகின்றன.

இந்த நிலையில், அங்குள்ள ஹஜா மாகாணத்தில், பானி அல் ஹதாத் என்ற கிராமத்தில் சவுதி கூட்டுப்படைகளின் போர் விமானங்கள் கடந்த திங்கட்கிழமை இரவு குண்டு வீச்சு நடத்தின.

இந்த குண்டு வீச்சில் அப்பாவி மக்கள் 15 பேர் சிக்கி பரிதாபமாக உயிரிழந்தனர். பலர் காயம் அடைந்தனர்.

ஆனால் அப்பாவி பொதுமக்களை குறிவைத்து தாக்குதல் நடத்தவில்லை என சவுதி கூட்டுப்படை செய்தி தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

சுவிட்சர்லாந்தில் ஐ.நா. சபையின் ஏற்பாட்டில் சண்டை நிறுத்த பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு முன்பாக இந்த தாக்குதல் நடைபெற்றிருப்பது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. (இ-7)

### பாரீஸ் தாக்குதல்

## முக்கிய குற்றவாளியை கைது செய்த பொலிஸ்

பிரான்ஸ் நாட்டில் நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதலுடன் தொடர்புடைய முக்கிய குற்றவாளியை பொலிஸார் கைது செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரீஸில் கடந்த மாதம் 13 ஆம் திகதி தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 130 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் பலர் காயமடைந்தனர்.

மேலும் தாக்குதல் நடத்தியவர்கள் மீது பொலிஸார் நடத்திய எதிர் தாக்குதலில் 7 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதலுக்கு ஐ.எஸ். தீவிரவாதிகள் பொறுப்பேற்றனர். இதையடுத்து இந்த தாக்குதலில் தொடர்புடைய குற்றவாளிகளை பொலிஸார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

இதுவரை 2,700 சோதனைகள் நடைபெற்றுள்ளன. 360 பேர் வீட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் பாரீஸ் தாக்குதலில் தொடர்புடைய 29 வயது நபர், ஒருவர் சிரியாவுக்கு செல்ல முயன்றபோது பாரீஸ் நகரில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

அதிக பாதுகாப்பு நிரம்பிய சிறையில் அவர் அடைக்கப்பட்டுள்ளார் என்றும் அவரிடம் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

### மோடியின் உருவ பொம்மையை எரித்த

## காங்.தொண்டர்களின் உடலில் தீ பற்றியதால் பெரும் பரபரப்பு



(டில்லி)

பிரதமர் மோடியின் உருவ பொம்மையை எரிக்க முயற்சித்த போது காங்கிரஸ் தொண்டர்களின் உடலில் தீ பற்றிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நஷனல் ஹெரால்டு வழக்கில் காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா மற்றும் ராகுல் காந்தி ஆகியோர் மீது பா.ஜ.க. வேண்டுமென்றே குற்றம் சுமத்துவதாக காங்கிரஸ் கூறி வருகிறது.

இந்நிலையில் இது தொடர்பாக பா.ஜ.க.வுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக இமாச்சல பிரதேசத்தில் பொலிஸ் துணை ஆணையர் அலுவலகம் முன்பு நேற்று முன்தினம் போராட்டம் நடைபெற்றது.

அப்போது பிரதமர் மோடியின் உருவ பொம்மையை சிலர் எரிக்க முயற்சித்துள்ளனர்.

எதிர்பாராத விதமாக தொண்டர்களின் உடலிலும் தீ பற்றியதால் பரபரப்பு ஏற்பட்டது.

இந்த சம்பவத்தில் 3 தொண்டர்களுக்கு தீவிர காயம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

இதை தொடர்ந்து காயமடைந்தவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இந்த சம்பவத்தால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.(இ-7)

## பெண் ஓவியர் வெட்டிக்கொலை இருவர் பொலிஸாரால் கைது

மும்பையைச் சேர்ந்த பிரபல பெண் ஓவியர் மற்றும் அவரது சட்டத்தரணி கொலை வழக்கில் வாரணாசியில் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மும்பை காந்திவிலி மேற்கு, தானுக்கர்வாடி பகுதியில் உள்ள சாக்கடையில் இரண்டு அட்டைப் பெட்டிகளில் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அந்த அட்டைப்பெட்டிகளில் ஆண் மற்றும் பெண்ணின் உடற்பாகங்கள் துண்டு, துண்டாக வெட்டி வைக்கப்பட்டு இருந்தன.

இதையடுத்து மீட்கப்பட்ட உடற்பாகங்கள் பிரேத பரிசோதனைக்காக பகவதி வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இது தொடர்பான விசாரணையில், ஜுகு பகுதியை சேர்ந்த பெண் ஓவியர்ஹேமா உபாத்யாய (வயது - 40) மற்றும் அண்டாப்ஹில் பகுதியை சேர்ந்த சட்டத்தரணி ஹரிஷ் பம்பானி இருவரும் தான் கொல்லப்பட்டுள்ளனர் என தெரியவந்துள்ளது.

இந்த இரட்டை கொலை தொடர்பாக காந்திவிலி பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

உத்தரப்பிரதேச சிறப்பு அதிரடிப் படையினருடன்வாரணாசிக்கு விரைந்த மும்பை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் 2 பேரைக் கைது செய்துள்ளனர்.

இவர்கள் இருவரும் கொலை செய்யப்பட்ட ஹேமா மற்றும் ஹரிஷின உடலை அப்புறப்படுத்த உதவியதாகவும், இருவரையும் விசாரித்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

## ஏவுகணையை பரிசோதித்தது பாகிஸ்தான்

(இஸ்லமாபாத்)

அணு ஆயுதங்களை ஏந்திச் செல்லும் ஷாஹீன் 1-ஏ என்ற ஏவுகணையை பாகிஸ்தான் வெற்றிகரமாக பரிசோதித்ததாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பல்வேறு வகையான ஆயுதங்களை சுமந்து கொண்டு 900 ஆயிரம் கிலோ மீற்றர் வரை சென்று எதிரிகளின் இலக்குகளை தாக்கவல்ல இந்த வகை ஏவுகணையை, மறு பரிசோதனை செய்துள்ளது. அரேபியக் கடலை இலக்காக வைத்து நடத்தப்பட்ட இந்தச் சோதனை வெற்றிகரமாக அமைந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஷாஹீன் ரக ஏவுகணைகளை தயாரித்து சோதனை செய்துவரும் பாகிஸ்தான் ஷாஹீன்-1, ஷாஹீன்-2 சோதனைகளை கடந்த ஆண்டு நடத்திய நிலையில் கடந்த 11 ஆம் திகதி ஷாஹீன்-3 ஏவுகணை சோதனையை வெற்றிகரமாக நடத்தியது.

இந்த நிலையில், இந்த ஷாஹீன் 1-ஏ ஏவுகணை சோதனையின் வெற்றி பாகிஸ்தான் பாதுகாப்பு துறையில் ஒரு மைல்கல்லாக விளங்கும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வெள்ளத்தில் சிக்கி 4 பேர் பலி

(மணிலா)

பிலிப்பைன்ஸை தாக்கிய மெலர் சூறாவளியால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சிக்கி 4 பேர் பலியானதாக தெரியவந்துள்ளது.

பிலிப்பைன்ஸ் நாட்டின் கிழக்குப பகுதிகளை கடந்த திங்கட்கிழமை கடும் சூறாவளி தாக்கியது. மணிக்கு சுமார் 150 கிலோ மீற்றர் வேகத்தில் வந்த இந்த மெலர் சூறாவளி தாக்கியதையடுத்து கடும் காற்றுடன் கனமழை பெய்தது.

அந்நாட்டின் 7 மாகாணங்கள் புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. அங்கு மின்சாரம்முற்றிலுமாகத் துண்டிக்கப்பட்டுள்ளது. வெள்ள அபாயம் இல்லாத பகுதியிலும் மின்துண்டிப்பு ஏற்பட்டுள்ளது.

முன்னதாக, சூறாவளி நெருங்கி வருவதாக வானிலை மையம் எச்சரிக்கை விடுத்ததையடுத்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கிழக்கு மாகாணங்களில் உள்ள சுமார் ஏழுரை இலட்சம் மக்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பிலிப்பைன்ஸில் ஒவ்வொரு ஆண்டும் 20இற்கும் மேற்பட்ட கடும் புயல்கள் தாக்கி வருகின்றன. கடந்த ஒக்டோபர் மாதம் வீசிய புயலில 54 பேர் உயிரிழந்தனர். கடந்த 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வீசிய புயலில் சிக்கி சுமார் 7,350 பேர் உயிரிழந்தனர். (இ-7)

## மாவோ சேதுங் எழுதிய கடிதம் 9 இலட்சம் டொலருக்கு ஏலம்

சீனாவின் கம்யூனிசத் தலைவர் மாவோ சேதுங் 1937 ஆம் ஆண்டில் எழுதியிருந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கடிதம் ஒன்று லண்டனில் 9 இலட்சம் டொலருக்கும் அதிக விலைக்கு ஏலம்போயுள்ளது.

மாவோ கையொப்பம் இட்டுள்ள இந்தக் கடிதம், அப்போதைய பிரிட்டிஷ் எதிர்க்கட்சியான தொழிற்கட்சியின் தலைவர் கிளெமென்ட் அட்லீக்கு எழுதப்பட்டுள்ளது.

"மிகவும் அரிதானது" என்று இந்தக் கடிதத்தை ஏலத்தில் விற்ற நிறுவனம் வர்ணித்திருந்தது.

சீனா மீதான ஜப்பானின் படையெடுப்புக்கு எதிராக பிரிட்டன் நடைமுறை ரீதியான உதவிகளை வழங்க வேண்டும் என்று மாவோ அந்தக் கடிதத்தில் கேட்டுக்கொண்டிருந்தார்.

முன்னதாக, ஒன்றரை இலட்சம் டொலருக்குத் தான் இந்த கடிதம் ஏலம் போகும் என்று மதிப்பிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(இ-7)

# போகோஹறாம் தீவிரவாதிகள் நைஜீரியாவில் மீண்டும் தாக்குதல்

## அப்பாவி கிராம மக்கள் 30 பேர் பலி

**நைஜீரியாவில் மூன்று கிராமங்களுக்குள் புகுந்த போகோஹறாம் தீவிரவாதிகள் திடீர் தாக்குதலில் ஈடுபட்டதில் அப்பாவிப் பொதுமக்கள் 30 பேர் கொல்லப்பட்டுள்ளதோடு 20 பேர் படுகாயமடைந்துள்ளனர்.**

ஆபிரிக்க நாடுகளான நைஜீரியா, நைஜர், சாட், கமரூன் உள்ளிட்டவற்றில் போகோஹறாம் தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். அவர்கள் அங்கு பல்வேறு தீவிரவாத தாக்குதல்களை நடத்தி அப்பாவி மக்களை கொன்று குவித்து வருகின்றனர்.

நைஜீரியாவில் கிராமங்களுக்குள் புகுந்து அங்குள்ள சிறுமிகளையும் பெண்களையும் போகோஹறாம் தீவிரவாதிகள் கடத்தி வருகின்றனர். குறிப்பாக வடகிழக்கு பகுதியில் உள்ள நகரங்களும் கிராமங்களும் அவர்கள் கட்டுப்பாட்டிலுள்ளன.

இந்நிலையில் நைஜீரியாவின் வட கிழக்கு பகுதியில் உள்ள 3 கிராமங்களுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த தாக்குதலில் அப்பாவி கிராம மக்கள் 30 பேர் கொல்லப்பட்டனர். 20 இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

போர்னோ பகுதியில் உள்ள வார்வரா, மங்காரி மற்றும் புரா-ஷிகா ஆகிய மூன்று கிராமங்களில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இதில் பெரும்பாலானவர்கள் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டதாகவும் நைஜீரிய இராணுவத்தினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போகோஹறாம் தீவிரவாதிகளின் தாக்குதலை அடுத்து அப்பகுதிகளை சேர்ந்த கிராம மக்கள் 30 கிலோமீற்றர் தொலைவில் உள்ள பியு பகுதிக்கு இடம்பெயர்ந்து விட்டனர்.

மேலும் தாக்குதல் நடத்தப்பட்ட கிராமங்கள் அனைத்தும் நைஜீரியாவின் தலைமை இராணுவ தளபதியான தாக்கூர் யூசப் புரட்டையின் சொந்த ஊருக்கு அருகில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சவுதி தலைமையில் 34 நாடுகள் தீவிரவாதிகளை எதிர்கொள்ளும்

(ரியாத்)

தீவிரவாதத்துக்கு எதிராக சவுதி அரேபியா போர்க்கொடி உயர்த்தி உள்ளது. ஏமனில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக சவுதி அரேபியாவின் தலைமையில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ், குவைத், ஜோர்தான் உள்ளிட்ட 10 நாடுகளின் கூட்டுப்படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன.

அதேபோல் ஈராக் மற்றும் சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்க கூட்டுப்படையில இணைந்து சவுதி அரேபியா தாக்குதல் நடத்தி வருகிறது.

தீவிரவாதத்தை எதிர்த்து போராட சவுதி அரேபியாவின் தலைமையில் முஸ்லிம் மக்களை பெரும்பான்மையாக கொண்ட 34 நாடுகளின் படைகளை இணைத்து புதிய கூட்டுப்படையை நிறுவ திட்டமிடப்பட்டிருந்தது.

தற்போது இதற்கு அந்த 34 நாடுகளும் ஒப்புதல் அளித்துள்ளன. இந்த புதிய கூட்டுப்படையில் மாலி, மலேசியா, பாகிஸ்தான், லெபனான், எகிப்து மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ உள்ளிட்ட நாடுகள் சேருகின்றன.

மேலும் சவுதி அரேபியாவின் பிராந்திய போட்டி நாடான ஈரான் இந்தக் கூட்டுப்படையில் பங்கேற்காது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான அறிவிப்பை நேற்று முன்தினம் நடைபெற்ற செயதியாளர் சந்திப்பில் சவுதி அரேபியாவின் இளவரசரும் இராணுவ அமைச்சருமான முகமது பின் சல்மான் தெரிவித்தார். (இ-7)

# செங்கல் ஆலையில் திடீரென விபத்து

## 8 பேர் உயிரிழப்பு

(காத்மண்டு)

நேபாள நாட்டில், இட்டஹாரி நகரில் ஒரு செங்கல் உற்பத்தி ஆலை உள்ளது. இந்த ஆலையில் இந்தியர்களும், நேபாள நாட்டினரும் வேலை செய்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் இந்த ஆலையில் தொழிலாளர்கள் வேலை செயது கொண்டிருந்தனர். அப்போது சற்றும் எதிர்பாராத வகையில் அந்த ஆலையில் அமைக்கப்பட்டிருந்த 105 அடி உயர புகைபோக்கி இடிந்து விழுந்தது. இடிபாடுகளில் தொழிலாளர்கள் சிக்கிக்கொண்டனர்.

உடனடியாக மீட்பு படையினருக்கு தகவல் தரப்பட்டது. அவர்கள் விரைந்து வந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

இந்த விபத்தில் சதாம் உசேன், ராகுல் மியா, சலிம் மியா (மேற்கு வங்காளம்), கரிப்லால் பஸ்வான், மிதிலாஸ் பஸ்வான், முஸ்தப் மியா (பீகார்) ஆகிய 6 இந்தியர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

நேபாளத்தை சேர்ந்த பகலி தேவி சவுத்ரி, சிவலால் சவுத்ரி என்னும் இருவரும் பலியாகினர்.

25 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் மீட்கப்பட்டு வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. அவர்களில் சிலரது நிலை கவலைக்கிடமாக உள்ளதால், பலி உயரக் கூடும் என அஞ்சப்படுகிறது.

சம்பவம் நடந்தபோது 10 இலட்சம செங்கற்கள் சுடுவதற்காக அடுக்கி வைக்கப்பட்டு இருந்த நிலையில் தான் புகைபோக்கி இடிந்து விழுந்து விட்டது என கூறப்படுகிறது.

கடந்த ஏப்ரல் 25ஆம் திகதி நேரிட்ட பூகம்பத்தால் இந்த புகைபோக்கியின் ஒரு பகுதி இடிந்து விழுந்துவிட்டதாகவும், அண்மையில் தான் அது பழுது பார்க்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது. (இ-7)

# பாகிஸ்தானில் பாரிய குண்டு வெடித்ததில் பலியானோரின் எண்ணிக்கை அதிகரிப்பு

## 24 பேர் இதுவரை அடையாளம் காணப்பட்டனர்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் குர்ரம் ஏஜென்சிக்கு உட்பட்ட பரச்சினார் என்ற இடத்தில் உள்ள சந்தை பகுதியில் பயங்கர குண்டு வெடிப்பு சம்பவம் நிகழ்ந்தது. இதில் சம்பவ இடத்திலேயே 15 பேர் உடல் சிதறி பலியாகினர். ஏராளமானோர் படுகாயம் அடைந்தனர்.

இதையடுத்து பாதுகாப்பு படை வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று படுகாயம் அடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள வைத்தியசாலையில் அனுமதித்தனர். அதில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக இருந்ததால் அவர்களை மேலதிக சிகிச்சைக்காக பரச்சினார் நகரில் இருந்து 90 மைல் தொலைவில் உள்ள கோஹட் நகர் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

அங்கு அவர்களை காப்பாற்ற வைத்தியர்கள் தீவிர சிகிச்சை அளித்து வந்தனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் சிகிச்சை பலனளிக்காமல் 9 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இதனால் பலி எண்ணிக்கை 24 ஆக உயர்ந்துள்ளது. மேலும் பலி எண்ணிக்கை உயரக்கூடும் என அஞ்சப்படுகிறது.

இதற்கிடையில், இந்த பயங்கர தாக்குதலுக்கு தடை செய்யப்பட்ட இயக்கமான லஷ்கர்இஜங்வீ தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. (இ-7)

# ஊனமுற்ற 38 குழந்தைகளுக்கு விச ஊசியை ஏற்றிக் கொல்ல ஐ.எஸ்.தீவிரவாதிகள் உத்தரவு

(மொசூல்)

ஈராக் மற்றும் சிரியாவின் சில பகுதிகளை கைப்பற்றி உள்ள ஐ.எஸ். தீவிரவாதிகள் அதனை இணைத்து இஸ்லாமிய அரசாக அறிவித்து உள்ளனர். ஐ.எஸ். தீவிரவாதிகளின அண்மைய இலக்காக ஊனமுற்ற குழந்தைகளை விச ஊசி போட்டு கொலை செய்ய திட்டமிட்டு உள்ளதாக கூறப்படுகிறது.

ஐ.எஸ். தீவிரவாதிகள் சிண்ட்ரோம் குழந்தைகளை பூண்டோடு அழிக்க வேண்டும் என உத்தரவிட்டு உள்ளதாக மொசூல் கண் அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

ஐ.எஸ். தீவிரவாதிகளின் ஷரியா வாரியம் பத்வா ஒன்றை வெளியிட்டுள்ளது சிண்ட்ரோம், பிறவிக் குறைபாடுகள் மற்றும் ஊனமுற்ற குழந்தைகளை கொலை செய்ய உத்தரவிட்டு உள்ளது. இதனை ஈரான் கண்காணிப்பு வலைப்பதிவு ஒன்று தெரிவித்துள்ளது.

இந்த குழு விச ஊசி மற்றும் மூச்சுத் திணறல் மூலம் குறைபாடுகளுடன் பிறந்த 38 குழந்தைகளை கொல்ல உத்தரவிட்டு உள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தக் குழந்தைகள் ஒருவாரம் முதல் 3 மாதம் வரை வயதுள்ளவர்கள் ஆவார்கள்.

இந்தக் குழந்தைகள் வெளிநாட்டு போராளிகள் மூலம் ஈராக்,சிரியா மற்றும் ஆசிய பெண்களை திருமணம் செய்து கொண்டவர்களுக்கு பிறந்தவைகளாகும் என ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர். (இ-7)

# வீட்டை பராமரிக்காததால் அபராதமும் 6 மாத சிறையும்

## அதிர்ச்சியில் வயோதிபத் தம்பதியினர்

கனடாவில் வீட்டை பராமரிக்க தவறிய உரிமையாளருக்கு அபராதமும் 6 மாத சிறையும் விதிக்கப்படும என நகரசபை அதிகாரிகள் அனுப்பிய கடிதம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கனடாவின் வின்னிபெக் பகுதியில் தமது மனைவியுடன் குடியிருந்து வருபவர் 76 வயதான Rodney Pearson.

கடந்த 45 ஆண்டுகளுக்கும் மேலாக இப்பகுதியில் குடியிருந்து வரும் இந்த தம்பதியர், தங்களது வீட்டின் பின்பகுதியை சரிவர பராமரிக்கவில்லை எனவும்,

அது அப்பகுதியில் குடியிருக்கும் ஏனைய வீட்டு உரிமையாளர்களை சங்கடப்படுத்துவதாக கூறிவின்னிபெக நகர அதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வின்னிபெக் நகரில் இதுபோன்று பராமரிக்கப்படாத வீட்டு உரிமையாளர்களுக்கு அடுத்த ஆண்டு மே மாதம 4 ஆம் திகதி வரை கால அவகாசமும் வழங்கியுள்ளனர்.

இந்த கால அவகாசத்திற்குள் புது வண்ணம் பூசி பராமரிக்காத வீட்டு உரிமையாளர்களுக்கு 1000 டொலர் அபராதமும் 6 மாதங்கள் வரை சிறையும் விதிக்க வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவித்து கடிதம் அனுப்பியுள்ளது.

இந்நிலையில், Rodney தம்பதிகள் தங்களுக்கு நகரசபை அளித்துள்ள கால அவகாசத்தினுள் தங்களது வீட்டின் பராமரிப்பை நிறைவேற்ற முடியாத நிலை இருப்பதாகவும், நகரசபை அதிகாரிகளின் கடிதம் தங்களுக்கு மிகுந்த வருத்தம் அளிப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, அரசே முன்வந்து இதுபோன்ற உதவிகளை இயலாத மக்களுக்கு செய்ய வேண்டும்என பொது மக்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

மேலும், அயலவர்கள் ஒன்றிணைந்து இந்த குளிர் காலத்தில் அந்த வயதான தம்பதியருக்கு உதவி செய்தால் அதுவே அவர்களுக்கு தரும கிறிஸ்மஸ் பரிசாகவும் அமையும் எனவும் தெரிவித்தார். (இ-7)




# இரட்டைக் காக்காவும் அதிர்ஷ்டமும்!

ஓர் ஊரில் பெரிய பணக்காரன் ஒருவன் இருந்தான்.

அவனிடம் யாரோ தூங்கி எழுந்தவுடன் இரட்டைக் காக்காய்களை ஒரே சமயத்தில் பார்த்தால் நன்மை!

அதிர்ஷ்டம் வந்து அள்ளும் என்று சொல்லிவிட்டார்கள்.

அவனோ சரியான தூங்கு மூஞ்சி அதிகாலையில் எழுந்து பழக்கம் இல்லாதவன்.

ஆனால் சகுனம் ஜோஸ்யம் இதில் எல்லாம் அபார நம்பிக்கை அவனுக்கு உண்டு.

அதிகாலையில் அவன் எழுந்திருக்கும் முன் காக்கைகள் பறந்து போய்விடுமே! என்று எண்ணிய அவன் தன் வேலைக்காரனை அழைத்தான்.

" நம் வீட்டுத் தோட்டத்தில் விடியற் காலையில் இரட்டை காக்கைகள் அமர்ந்து இருப்பதை பார்த்தால் நீ விரைந்து வந்து என்னை எழுப்பவேண்டும்" என்று கட்டளை இட்டான்.

வேலைக்காரனும் சரி எஜமான்! என்று ஒத்துக் கொண்டான்.

ஒரு நாள் விடியற்காலையில் தூங்கிக் கொண்டிருந்த செல்வந்தனை ஓடிவந்து எழுப்பினான் வேலைக்காரன்!

"எஜமான் எழுந்திருங்கள்! நமது தோட்டத்தில் இரண்டு காகங்கள் ஜோடியாக வந்து அமர்ந்து உள்ளன! உடனே வந்து பாருங்கள்!" என்று எழுப்பினான்.

செல்வந்தன் அரக்கபரக்க எழுந்தான்.

கண்ணை மூடியவாறே வேலையாள் கையைப் பிடித்தபடி தோட்டத்திற்கு சென்றான்.



அங்கே சென்று கண்ணைத் திறந்தான்.

அந்தோ! பரிதாபம்! அங்கு இருந்த காக்கைகளுள் ஒன்று பறந்து சென்றுவிட்டு இருந்தது.

ஒரு காக்கை மட்டுமே இருந்தது.

செல்வந்தனுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

" அடேய்! முட்டாள்! மடையா! இரண்டு காகங்கள் ஜோடியாக இருக்கும் போது அல்லவா என்னை எழுப்பச் சொன்னேன்! இப்போது ஒற்றை காகம் அல்லவா இருக்கிறது" என்று கத்தி ஒரு அறை கொடுத்தான்.

அடி வாங்கிய வேலையாள் அழுதபடி, எஜமான் நீங்கள் வருவதற்குள் ஒரு காக்கா பறந்து போய்விட்டது! என்று பவ்யமாக கூறினான்.

அதற்கும் வேலையாளையே குற்றம் சாட்டி, முட்டாளே! நீ விரைவாக வந்து எழுப்பி இருக்க வேண்டும்!

உன் சோம்பலால் எனக்கு கிடைக்க இருந்த நன்மையை பாழாக்கிவிட்டாயே! என்று கத்தினான்.

உன்னால் எல்லாம் பாழாகிவிட்டது! என்று வேலைக்காரனை போட்டு அடித்து உதைத்தான். அப்போதும் அவன் கோபம் அடங்கவில்லை!

வலிதாங்க முடியாத வேலைக்காரன், ஐயா! என்னை அடிக்காதீர்கள்! இரட்டைக் காக்கைகளை விடியலில் பார்த்ததற்கான பலன்களைத்தான் நான் இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்! இதற்கா நீங்கள் ஆசைப்பட்டீர்கள்! என்று சாந்தமாக கேட்டான்.

அப்போதுதான் செல்வந்தனுக்கு தன் தவறு உறைத்தது.

அடடா! ஓர் அப்பாவியை அடித்து உதைத்து விட்டோமே! என்று வருந்தினான். மூடநம்பிக்கையையும் விட்டொழித்தான்.

நம்மில் பலரும் இப்படித்தான் இருக்கிறோம்! கொஞ்சம் மாறிக் கொள்வோமே!




- 942 - நோர்மண்டியின் முதலாம் வில்லியம் படுகொலை செய்யப்பட்டான்.
- 1398 - சுல்தான் மெஹ்மூடின் படைகளை டில்லியில் வைத்து டீமூர் படைகள் தோற்கடித்தன.
- 1577 - பிரித்தானிய அரசி முதலாம் எலிசபெத்துக்காக அமெரிக்காக்களின் பசுபிக் பெருங்கடல் பகுதியை ஆராய்வதற்காக பிரான்சிஸ் டிரேக் இங்கிலாந்து, பிளைமவுத் துறைமுகத்தில் இருந்து புறப்பட்டான்.
- 1718 - பெரிய பிரித்தானியா ஸ்பெயினுடன் போரை அறிவித்தது.
- 1819 - சிமோன் பொலிவார் பெரிய கொலம்பியாவின் விடுதலையை அறிவித்தான்.
- 1834 - அயர்லாந்தின் முதலாவது தொடருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டது.
- 1862 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஐக்கிய அமெரிக்காவின் டென்னசி, மிசிசிப்பி, கென்டக்கி ஆகிய மாநிலங்களில் இருந்து யூதர்கள் வெளியேற்றப்பட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.
- 1903 - ரைட் சகோதரர்கள் வடக்கு கரொலைனாவில் முதன்முதலில் பன்னிரெண்டு வினாடிகள் எஞ்சின் உந்தும் ரைட் பிளையர் ஊர்தியில் பறந்தனர்.
- 1926 - லித்துவேனியாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து மக்களாட்சி அரசு கலைக்கப்பட்டு அண்டானஸ் சிமெத்தோனா ஆட்சியைப் பிடித்தார்.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியப் படைகள் வடக்கு போர்ணியோவில் இறங்கினர்.
- 1947 - இலங்கைத் தமிழரசுக் கட்சி அமைக்கப்பட்டது.
- 1961 - கோவாவை இந்தியா, போர்த்துக்கலிடம் இருந்து கைப்பற்றியது.
- 1967 - ஆஸ்திரேலியப் பிரதமர் ஹரல்ட் ஹோல்ட் விக்டோரியா மாநிலத்தில் போர்ட் கடலில் நீந்தும்போது காணாமல் போனார். இவர் இறந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது.
- 1970 - போலந்தில் கிதீனியா நகரில் தொடருந்துகளில் இருந்து இறங்கிய தொழிலாளர்களை நோக்கிச் சுட்டதில் பலர் கொல்லப்பட்டனர்.
- 1986 - போதைப் பொருள் வர்த்தகத்துக்கெதிராகக் குரல் கொடுத்த கொலம்பியாவின் பத்திரிகையாளர் கில்லெர்மோ இசாசா சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1989 - 25 ஆண்டுகளின் பின்னர் பிரேசிலில் முதலாவது பொதுத்தேர்தல் இடம்பெற்றது.

**பிறப்புக்கள்**

- 1908 - வில்லார்ட் ஃபிராங்க் லிப்பி, அமெரிக்க இயற்பியல் வேதியியலாளர் (இ. 1980)
- 1959 - ரஞ்சகுமார், ஈழத்தின் சிறுகதையாசிரியர்
- 1972 - ஜோன் ஆபிரகாம், இந்திய நடிகர்
- 1975 - சுசந்திகா ஜயசிங்க, இலங்கையின் ஓட்ட வீராங்கனை

**இறப்புகள்**

- 1947 - ஜொஹான்ஸ் நிக்கொலஸ் பிரோன்ஸ்டெட், டென்மார்க் நாட்டு வேதியியலாளர் (பி. 1879)
- 1967 - ஹரல்ட் ஹோல்ட், முன்னாள் ஆஸ்திரேலியப் பிரதமர் (பி. 1908)
- 1975 - சோ. இளமுருகனார், ஈழத்துப் புலவர் (பி. 1908)
- 1979 - சேர் ஒலிவர் குணதிலக்க, இலங்கையின் மகா தேசாதிபதி

## சுசந்திகா ஜயசிங்க



சுசந்திகா ஜயசிங்க டிசெம்பர் 17, 1975 ஆம் ஆண்டு பிறந்தார்.

இவர் இலங்கையைச் சேர்ந்த ஓர் ஓட்ட வீராங்கனை ஆவார். 100 மற்றும் 200 மீட்டர் குறுந் தூரப் போட்டிகளில் பல வெற்றிகளைப் பெற்றவர்.


2000 ஆம் ஆண்டு சிட்னியில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் 200 மீட்டர் ஓட்டத்தில் இரண்டாமிடம் பெற்று வெள்ளிப் பதக்கம் வென்றார், ஆரம்பத்தில் இவருக்கு மூன்றாம் இடமே கிடைத்தது எனினும் வெள்ளிப்பதக்கம் வென்ற மரியன் ஜோன்ஸ் ஊக்கமருந்து சேதனையில் சிக்கியமையால் அவரின் பதக்கம் பறிக்கப்பட்டது இதையடுத்து சுசந்திகாவிற்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது. 1948 இன் பின் ஒலிம்பிக் பதக்கம் வென்ற ஒரே இலங்கையர் இவராவார்.


# நம்பிக்கையில்லாப் பிரேரணையினை ஆராய தெரிவுக்குழுவை அமைக்கவும்

## பிரதமர் சபாநாயகரிடம் வலியுறுத்து

(கொழும்பு)

**நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையின் உண்மைத் தன்மையை ஆராய்வதற்காக, நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை அமைக்குமாறு சபாநாயகர் கருஜயசூரியவிடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தியுள்ளார்.**





நாடாளுமன்றத்தில் வைத்தே அவர் இந்தக் கோரிக்கையை நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை விடுத்தார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களின் உண்மைத்தன்மை தொடர்பில் ஆராய்ந்து ஒருமாத காலத்துக்குள் அறிக்கையிடுமாறு அந்தக்குழுவுக்கு பணிக்குமாறு பரதமர் இதன்போது ஆலோசனை வழங்கினார்.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் கல்வித்துறையில் பாகுபாடு காட்டப்பட்டமை தொடர்பில் உறுதிப் படுத்தப்படுமாயின் முன்னாள் கலவியமைச்சர் பந்துல குணவர்தனவும் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய எம். பியுமான மகிந்த ராஜபக்ஷவும் தங்களுடைய எம்.பி. பதவிகளைத் துறப்பதற்குத் தயாரா? என்றும் பிரதமர் வினவினார்.

நிதியமைச்சருக்கு எதிராகக் கூட்டு எதிர்க்கட்சியினால் கையளிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதிப்பதற்குத் திகதி குறிக்குமாறு, நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார, சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தபோதே பிரதமர் மேற்கண்டவாறு ஆலோசனை வழங்கினார். (இ-7)

## அண்ணன், தம்பி இருவருக்கும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டது

மட்டக்களப்பு ஆரையம்பதியில் இரட்டைக்கொலை சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான பூபாலப்பிள்ளை பிரசாந்தன் மற்றும் அவரது சகோதரர் பூபாலப்பிள்ளை ஹரன் ஆகியோர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இருவரும் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது, இம் மாதம் 29 ஆம் திகதி வரை அவர்களைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.என்.அப்துல்லா முன்னிலையில் இவர்கள் ஆஜர் படுத்தப்பட்ட போதே இந்த விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு - ஆரையம்பதி பகுதியில் 2008 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 29 ஆம் திகதி பாடசாலை ஆசிரியரான தமிழ்நாடு என அழைக்கப்படும் கிருஸ்ணபிள்ளை மனோகரன் உட்பட இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இது தொடர்பாக கிருஸ்ணபிள்ளை மனோகரனின் சகோதரியொருவர் காத்தான்குடி பொலிஸாருக்கு அளித்திருந்த வாக்குமூலத்தை அடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், பூபாலப்பிள்ளை பிரசாந்தன் மற்றும் அவரது சகோதரர் ஹரன் ஆகியோர் காத்தான்குடி பொலிஸாரால் கைதுசெய்யப் பட்டனர். (இ-7)

## ஆமைக்குஞ்சுகளுடன் ஒருவர் கைதானார்



ஆமைக் குஞ்சுகள் நான்குடன் ஹறறன், கொட்டகலையைச் சேர்ந்த 58 வயது நபரை பதுளை பொலிஸார் நேற்றுக்காலை கைது செய்துள்ளனர்.

பதுளை ஹிந்தகொட பாலத்துக்கு அருகிலுள்ள ஆற்றில் இருந்து இவ் ஆமைக் குஞ்சுகளை பிடித்துள்ள அந்நபர் அவற்றை சாரமொன்றில் சுற்றி உரப்பைக்குள் போட்டவாறு பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்காக இவர் ஆமைக்குஞ்சுகளை பிடித்துள்ளதாக விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது. (இ-7)

# தீர்வு கிடைக்காவிட்டால் தொடர் வேலை நிறுத்தம்

## வங்கி ஊழியர் சங்கம் எச்சரிக்கை

வங்கி ஊழியர் சங்கத்தின் கோரிக்கைகள் தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் தொடர் வேலை நிறுத்தம் மேற்கொள்ளவுள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் தலைவர் ஜயரத்தின இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இது குறித்து தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர், நேற்று முன்தினம் மேற்கொண்ட அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் மாபெரும் வெற்றியளித்துள்ளது.

இந்த அடையாள வேலை நிறுத்தத்தில் அரச வங்கிகள் நான்கு மற்றும் தனியார் வங்கிகள் 20உம் கலந்து கொண்டிருந்தன. அத்துடன் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாடு முழுவதும் உள்ள நான்காயிரம் வங்கிக் கிளைகளின் ஊழியர்களும் போராட்டத்தில் பங்கேற்றனர்.

வங்கிகளில் தங்க நகை அடகுத திட்டத்தை குறைத்தல், ஒரு மில்லியனுக்கு மேல் பணம் மீளெடுக்கப்படும் போது வரி அறவிடுதல், லீசிங சேவையை முடிவுறுத்தல், செயலற்ற வங்கிக் கணக்கில் உள்ள தொகையை அரசின் ஒன்றிணைந்த நிதிக்கு மாற்றுதல், அரச நிறுவனங்களை சிங்கப்பூர் நிறுவனமொன்றின் கீழ் கொண்டு வந்து பங்கு விற்பனை செய்தல் என்பவற்றை உடனடியாக கைவிடுமாறு இலங்கை வங்கி ஊழியர்கள் சங்கம் அரசாங்கத்தை தொடர்ந்தும வலியுறுத்துகின்றது.

அத்துடன் வங்கிகளை நட்டத்திற்கு தள்ளிவிடும் நோக்கில் வங்கி வாடிக்கையாளர்களுக்கு வரி அறவிடுதல் போன்ற தூரதிருஷ்டியற்ற நடவடிக்கைகளை அரசாங்கம் வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக அறிமுகப்படுத்தியுள்ளது.

குறித்த விடயங்களை அரசாங்கம் மீளப் பெற வேண்டும். இல்லையேல் மிக விரைவில் வங்கி ஊழியர்களை ஒன்று திரட்டி தொடர் வேலைநிறுத்தப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்க உத்தேசித்துள்ளோம் என்றும் வங்கி ஊழியர் சங்கத்தின் தலைவர் ஜயரத்தின தெரிவித்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## கல்விக்குக் கரையில்லை

சுவாமி ராமதீர்த்தர் ஒரு தடவை கப்பலில் ஜப்பானுக்குப் போய்க் கொண்டிருந்தார். அதே கப்பலில் இன் னொரு ஜப்பான்காரரும் பயணம் செய்தார். அந்த ஜப் பான்காரருக்கு 90 வயதுக்கு மேல் இருக்கும். வயதுக் கேற்ற நடுக்கம் அவரில் தெரிந்தது. உடம்பும் மிகவும் பலவீனமாக இருந்தது.

ஆனால் அவரோ ஒரு கண்ணாடியை போட்டுக் கொண்டு சீன மொழியில் ஏதோ ஒருபாடத்தை திரும்பத்திரும்பச் சொல்லிக் கொண்டும், எழுதிக் கொண்டும் இருந்தார். கையோ நடுங்கிக் கொண்டிருந்தது. இதைப் பார்த்தும் சுவாமி ராம தீர்த்தருக்கு வியப்பாக இருந்தது.

சுவாமிஜி அந்தப் பெரியவரிடம் ''பெரியவரே! இவ்வ ளவு தீவிரமாக என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

அதற்குப் பெரியவர்,

''சீன மொழியை கற்க வேண்டும் என்று ஆர்வமாக இருக்கின்றது. எழுதிப்பார்த்தால் மொழிப் பயிற்சி கிடைக் கும். அதனால் தான் அந்த மொழியில் எழுதிப் பழகிக் கொண்டிருக்கிறேன்''என்றார்.

''மற்ற மொழிகளை விட சீன மொழி மிகவும் கடினமா னதல்லவா!''என்றார் சுவாமிஜி.

''கடினமானது என்பதற்காக அதைக் கற்கக் கூடா தென்பதில்லையே!'' என்றார் பெரியவர்.

''அதற்காக மொழியைக் கற்பதற்கு வருடக் கணக் காகுமே'' என்றார் சுவாமிஜி. ''அப்படியானால் நான் சீன மொழியைக் கற்கக் கூடாது என்கிறீர்களா?'' என்று கேட்டார் பெரியவர். ''நான் அப்படியெல்லாம் சொல்லவில்லை. ஆனால் இதைக் கற்க வேண்டு மென்ற ஆர்வம். உங்களுக்கு எப்படி வந்தது?'' என்று கேட்டார் சுவாமிஜி. எழுதியதை மடித்து ஒரு பக்கமாக வைத்து விட்டு அந்தப் பெரியவர் சொன்னார்.

''நான் உயிருடன் இருக்கும் வரை எதையாவது புதிதாகக் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும் என்பது தான் எனது ஆசை''என்றார்.

''ஆனால் உங்களுடைய உடல் நிலை இதற்கு சாதக மாக இல்லையே?''என்றார் சுவாமிஜி. அதற்கு அந்தப் பெரியவர்.

''வாழ்க்கை என்பது ஆதி அந்தமில்லாத தங்கு தடையற்ற ஒரு பிரவாகம். ஓயாமல் பிரவகிக்கும் வாழ் க்கை எனும் நீரோட்டத்தினூடே ஒவ்வொரு நாளும் ஏதா வது ஒன்றை அறிய கண்டுபிடிக்க ஒரு சிந்தனையில் லயிக்க வாய்ப்புக் கிடைத்தால் அதை கை நழுவ விடக் கூடாது''என்று கூறி முடித்தார்.

இப்பொழுதான் சுவாமி ராமதீர்த்தருக்கு ராம கிரு ஷ்ண பரமஹம்சர் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது.

அதாவது ''எத்தனை நாள் வாழ்ந்தேனோ அத்தனை நாளும் ஏதாவது கற்றுக் கொண்டே இருப்பேன்''என்பது இந்தக்கதையை என்னிடம் அறிவுரை கேட்க வந்த நண்பரிடம் கூறினேன்.

'' எனக்கும் கூட அப்படித்தான். புதுசு புதுசா ஏதாவது தெரிந்து கொள்ளணும் என்று ஆசை. அதுதான் உங்க ளிடம் வந்தேன்''என்றார் நண்பர்.

எனக்கு ரொம்பப் பெருமையாக இருந்தது.

''இன்றைக்கு என்னிடம் வந்ததால புதுசா என்ன தெரிந்து கொண்டீர்கள்''என்று கேட்டேன்.

''புதுசா எதையாவது தெரிந்து கொள்ள வேண்டு மென்றால் உங்களைத் தேடி வரக் கூடாதென்று தெரிந்து கொண்டேன்''என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தமிழ் சினிமா வரலாறு

79

## "அபூர்வ சகோதரர்கள்" அபார வெற்றி

பெண்களுக்கு விசேட காட்சிகள் நடத்த வேண்டிய அளவுக்கு தியேட்டர்களில் கூட்டம் அலை மோதியது.

அடுத்த வெளி வந்த ராஜி என் கண்மணி என்ற படம் (கே.ஜே.மகோதேவன் டைரக்‌ஷனில் ஸ்ரீரஞ்சனி-டி.ஆர்.ராமச்சந்திரன் நடித்தது) தோல்வி அடைந்தது.

வள்ளியின் செல்வன் சுமார் ரகம். இதில் எஸ்.வி.சுப்பையா, சுந்தரிபாய், ஜெமினி கணேசன், வனஜா ஆகியோர் நடித்தனர்.

### வஞ்சிக்கோட்டை வாலிபன்

ஜெமினியின் அடுத்த பிரமாண்டமான படம் வஞ்சிக்கோட்டை வாலிபன் 1958 ஏப்ரல் மாதம் வெளியாகியது.

ஜெமினி கணேசன், பத்மினி, வைஜயந்தி மாலா, பி.எஸ்.வீரப்பா, எஸ்.வி.சுப்பையா, விஜயகுமாரி தங்கவேலு நடித்த இப்படம், இன்றைய தலைமுறையினரும் பார்த்து ரசித்த படமாகும்.

பத்மினியும் வைஜயந்தி மாலாவும் ஆடிய போட்டி நடனம் இந்தப் படத்தின் சிறப்பு அம்சம். சபாஷ்! சரியான போட்டி என்று பி.எஸ்.வீரப்பா மட்டும் கூறவில்லை. ரசிகர்களும் கூறினர்.

இப்படத்தை எஸ்.எஸ். வாசன் டைரக்ட் செய்திருந்தார். கதை: கே.ஜே.மகாதேவன். வசனம்: கொத்மங்கலம் சுப்பு.

வடநாட்டில் கொடிகட்டிப் பறந்த இந்தி இசை அமைப்பாளர் சி.ராமச்சந்திரா, இப்படத்துக்கு இசை அமைத்தது புதுமை.

வஞ்சிக்கோட்டை வாலிபன், ராஜ் திலக் என்ற பெயரில் இந்தியிலும் வெளிவந்தது.


இந்தி சந்திரலேகா நிஷான் ஆகிய படங்களின் வெற்றியைத் தொடர்ந்து இந்திப் படங்களை நிறைய தயாரித்தார் வாசன்.

பழைய மங்கம்மா சபதத்தை மங்களா என்ற பெயரில் தயாரித்தார்.

மங்கம்மா சபதத்தில் கதாநாயகனாக நடித்த ரஞ்சன் (ஏறத்தாழ 10 ஆண்டுகள் கழித்து) மங்களாவிலும் கதாநாயகனாக நடித்தார்!

கதாநாயகி பி.பானுமதி.

படம் வெற்றி பெற்றது.



தமிழ் சம்சாரத்தை சன்சார் என்ற பெயரில் மிஸ் மாலினியை மிஸ்டர் சம்பத் என்ற பெயரிலும் தயாரித்தார். இந்தப் படங்களும் ஓரளவு வெற்றிகரமாகவே ஓடின.

### இன்சானியத்

பிறகு இன்சானியத் என்ற படத்தை இந்தியில் பிரமாண்டமாகத் தயாரித்தார்.

இது தமிழில் வெளிவராத கதை. இந்திப் படத்துக்காகவே உருவாக்கப்பட்டது.

இயற்கையாக நடிப்பவர், சோக நடிப்பில் ஈடு இணையற்றவர் என்று புகழ்பெற்றிருந்த திலீப் குமார், படத்தின் ஹீரோ.

ஆனால், அவருக்கு ஜோடி கிடையாது.

காதலை தியாகம் செய்து விட்டு நாட்டுக்காகப் போராடும் இளைஞனின் கதை. தேவ் ஆனந்த்-பிணாராய் ஜோடியாக நடித்தனர்.

ராஜா- ராணி கதையைக் கொண்ட இந்தப் படத்தில் பல விசேடங்கள்.

திலீப்குமார் ஆக்‌ஷன் ஹீரோவாக மாறி பிரமாதமாக கத்திச் சண்டை போட்டார்!

சமூகப் படங்களில் ஷேவ் செய்த முகத்துடன் வசீகரமாக நடித்து வந்த தேவ் ஆனந்த், இதில் பெரிய மீசையுடன் தோன்றினார்.

(தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 346

## அதிருப்தியிலிருந்து நன்றியுணர்விற்கு...

...நான் அதை யார் விரும்பினாலும் அவர்களுக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். அதைக் கொண்டு திறப்பதற்கு உங்களுக்கு ஒரே ஒரு கணம் மட்டுமே பிடிக்கும்!

ஆயினும் நீங்கள் கஷ்டப்பட வேண்டும் என்று எண்ணினீர்களானால் அது உங்களுடைய சுதந்திரம்; நான் அதில் குறுக்கிட மாட்டேன்!

உங்களுடைய ஒரே ஒரு முயற்சி, பிரபஞ்ச இருப்புத் தன்மை உங்கள் வழியாக பாய்ந்துசெல்ல அனுமதிப்பதாக மட்டுமே இருக்க வேண்டும்.

பிரபஞ்ச இருப்புத் தன்மைக்கு உங்களுடைய எதிர்ப்பு குறைவாக இருக்கும்பொழுது நீங்கள் செய்ய வேண்டிய முயற்சியும் குறைவாகவே இருக்கும்.

அது நேராக விகிதத்தில் தொடர்பு கொண்டுள்ளது. நீங்கள் ஞானமடையும்பொழுது ஒரு காலியான ஊடகமாகிவிடுகிறீர்கள்.

உங்கள் வழியாக பிரபஞ்ச இருப்புத் தன்மை தொடர்ந்து பாய்கிறது. அவ்வளவே.

உங்கள் தரப்பிலிருந்து எல்லா முயற்சிகளும் நழுவி விழுந்து விடும்பொழுது பிரபஞ்ச இருப்புத் தன்மையால் உங்கள் வழியாக முயற்சியின்றிப் பாய முடியும்.

சரி, ஏதேனும் கேள்விகள் கேட்க விரும்புகிறீர்களா?

ஸ்வாமிஜி, திருப்தியாக இருப்பதற்கு தியானம் எவ்வாறு உதவுகிறது?



பாருங்கள், நீங்கள் தொடர்ந்து தியானம் செய்யும்பொழுது மிருதுவாக்வும் மென்மையாகவும் ஆகிவிடுகிறீர்கள்.

உள்வாங்கும் தன்மையுடனும் நுட்பமான உணர்வுடையவர்களாகவும் விழிப்பு மிக்கவர்களாகவும் ஆகிவிடுகிறீர்கள்.

உங்களுடைய விழிப்புணர்வு ஒவ்வொரு கணமும் விரிவடைந்து கொண்டே செல்வதைக் காண்பீர்கள்.

உங்களுடைய உணர்வுகளையும் செயல்களையும் விழிப்புணர்வே தீர்மானிக்கிறது.

அதனால்தான் நான் மீண்டும் மீண்டும் உங்களை தியானம் செய்யச் சொல்கிறேன்.

அது உங்கள் விழிப்புணர்வைத் தூய்மைப்படுத்துகிறது. விடயங்கள் உங்களுக்கு இன்னும தெளிவாகத் தெரியும்.

உங்கள் மையம் மூளையிலிருந்து இதயத்திற்கு நகர்வதை உங்களால் உணர முடியும்.

உங்கள் மனதிற்கும் உங்களுக்கும் இடையேயுள்ள தூரம் அதிகரிக்கும்பொழுது உங்கள் முழு இருப்புத் தன்மையும் ஒரு வித்தியாசமான உணர்வுடன் அதிர்வடைய ஆரம்பிக்கிறது.

இந்த உணர்வே திருப்தி; ஒரு ஆழமான மனநிறைவு; அனைத்தையும் நோக்கிய எந்தவிதமான காரணமுமற்ற ஆழமான அன்பு; ஒரு தொடர்ந்த மகிழ்ச்சியும் ஆனந்தமுமான உணர்வு.

நீங்கள் மனதிலிருந்து இயங்கிக் கொண்டிருக்கும் வரை மேலும் மேலும் கேட்டுக்கொண்டுதான் இருப்பீர்கள்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

# சிங்கள குடியேற்றங்கள் இனிமேல் இடம்பெறாது!



## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

**தமிழ் மக்கள் வாழும் எந்தவொரு பகுதியிலும் அத்துமீறிய சிங்கள குடியேற்றங்கள் எவையும் இனி நடைபெறாது. முன்னைய அரசாங்கத்தைப் போலவே எம்மையும் கருதாது அனைவரும் எம்முடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என அமைச்சரவை ஊடகப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**

அதேவேளை, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையிலோ அல்லது அவர்களின் தேவைக்காகவோ எம்மால் அநாவசியமாக எதையும் மேற்கொள்ளவும் முடியாது. அரசாங்கம் என்ற ரீதியில் நாம் சட்ட திட்டங்களுக்கு அமையவே விசாரணை பொறிமுறைகளை முன்னெடுக்க முடியும்.

வடக்கு,கிழக்கு பகுதிகளின் மீள்குடியேற்ற நடவடிக்கைகளில் தாம் தொடர்ந்தும் புறக்கணிக்கப்படுவதாகவும், இந்த நிலைமை தொடருமாயின் மீண்டும் சர்வதேச தரப்பிடம் முறையிட வேண்டி வரும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ள நிலையில் இந்த கருத்து தொடர்பில் அரசாங்கத்தின் பதிலை வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்தின் பின்னர் வடக்கில் பொதுமக்களின் காணிகளை இராணுவம் வைத்திருந்த குற்றச்சாட்டை நாம் ஒருபோதும் மறுக்கவில்லை. முன்னைய அரசாங்கம் வடக்கில் பல ஏக்கர் நிலங்களை தமது சொந்த நிலங்களை போல் பாவித்தனர்.

அதேபோல் அநாவசிய இராணுவ முகாம்களை அமைத்தும் அதியுயர் பாதுகாப்பு வலயங்களை உருவாக்கியும் தமது ஆதிக்கத்தை தக்க வைத்திருந்தனர். எனினும் ஆட்சி மாற்றத்தின் பின்னர் எமது அரசாங்கத்தின் முதற்கட்ட நடவடிக்கையாக வடக்கிலும், கிழக்கிலும் அநாவசிய இராணுவ முகாம்கள் அனைத்தையும் நீக்கி பொதுமக்களின் காணிகளை அவர்களிடம் ஒப்படைத்துள்ளோம்.

எனினும் வடக்கிலும், கிழக்கிலும் சட்டவிரோத சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி அதன் மூலம் தமிழ் மக்களை அழிக்க வேண்டும் என்ற எண்ணம் எம்மிடம் இல்லை. நாம் ஜனாநாயக ரீதியில் இந்த நாட்டில் அனைத்து மக்களுக்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முனனெடுத்து வருகின்றோம்.

இந்த நாட்டில் சகல பகுதிகளிலும் மூவின மக்களும் வாழ உரிமை உள்ளது. அதேபோல் வடக்கில் சிங்கள குடியேற்றங்கள் ஆரம்பத்தில் இருந்தே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யுத்த காலகட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் வெளியேற்றப்பட்ட சிங்கள் மக்களின் நிலங்களை அவர்களுக்கு பெற்றுக் கொடுப்பதும் அரசாங்கத்தின் கடமையாகும்.

எமது அரசாங்கம் தமிழ் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை சரியாக நிறைவேற்றும். நாம் வடக்கில் ஜனநாயகத்தை பலப்படுத்தும் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றோம். இப்போதும் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் மக்களை குடியமர்த்தும் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுதான் வருகின்றது.

தமிழ் மக்கள் வாழும் எந்தவொரு பகுதியிலும் தமிழ மக்களின் உரிய நிலங்களில் அத்துமீறிய சிங்கள் குடியேற்றங்கள் எவையும் நடைபெறாது. இந்த விடயத்தில் யாரும் எம்முடன் முரண்பட்டு சர்வதேச தரப்பை நாட வேண்டிய தேவை இல்லை. முன்னைய அரசாங்கத்தை போலவே எம்மையும் கருதி செயற்படாது எம்முடன் ஒன்றிணைந்து செயற்பட அனைவரும் தயாராக வேண்டும்.

மேலும் காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை அரசாங்கம் எமது பொறிமுறைக்கு அமைய மேற்கொண்டு வருகின்றது. கடந்த காலத்தில் காணாமற் போனோரை கண்டறியும் ஆணைக்கு மேற்கொண்ட விசாரணைகளை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றோம்.

அதேபோல் இந்த விசாரணைகளின் போதும் நாம் பொதுமக்களின் கருத்துக்களுக்கு முன்னுரிமை வழங்கி உண்மை சாட்சியங்களை சேகரித்து வருகின்றோம். எனினும் இந்த விவகாரங்களில் எவரதும் தனிப்பட்ட விருப்பத்திற்கு அமையவும் விசாரணைகளை மேற்கொள்ள முடியாது.


அதேபோல் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையிலோ அல்லது அவர்களின் தேவைக்காகவோ எம்மால் அநாவசியமாக எதையும் மேற்கொள்ளவும் முடியாது. அரசாங்கம் என்ற ரீதியில் நாம் சட்ட திட்டங்களுக்கு அமையவே விசாரணை பொறிமுறைகளை முன்னெடுக்க முடியும்.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் கோரிக்கைகளை நாம் சரியான முறையில் நிறைவேற்றுவோம். அதேபோல் உண்மைகளை கண்டறியும் நடவடிக்கையும் இந்த அரசாங்கத்தில் முழுமையடையும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 577

Search for people, places and things · Nagendram · Home

தினா



சசி



பவித்ரா



துவாரகன்




விமல்ராஜ்




கோபிந்தன்




**நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

# காணாமற்போனவர்களின் உறவினர்கள் சாட்சியம்



காணாமற் போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் நேற்றைய தினம் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நடைபெற்றபோது.... (படங்கள் பொ.சோபிகா)

# போர் இடைவெளியைப் பயன்படுத்தி இலங்கையில் சீனா முதலீடுகளை செய்தது



யுத்தத்தின் இறுதி வாரங்களில் இலங்கையின் போர் வலயத்தில் உண்மையில் என்ன நடந்தது என்பதை அறிவதற்கான நடவடிக்கைகளை மேற்குலக நாடுகள் முன்னெடுத்த வேளையில், இந்த இடைவெளியை சீனா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு இலங்கையில் முதலீடுகளை மேற்கொண்டது.

**இவ்வாறு லண்டனிலிருந்து வெளியாகும் independent நாளிதழில் Peter Popham எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இதனைப் மொழியாக்கம் செய்துள்ளவர் நித்தியபாரதி.**

மகிந்த ராஜபக்ஷ ஆட்சியிலிருந்த போது தன்னைத் தானே உயர்வாக எண்ணிக் கொண்டார். இது ஒரு சிறுபிள்ளைத்தனமான நடவடிக்கையாக காணப்பட்டது.

மகிந்த ராஜபக்ஷவின் சொந்த இடம் தென்னிலங்கையின் கரையோரக் கிராமமான அம்பாந்தோட்டை ஆகும். இக்கிராமமானது இந்திய மாக்கடலின் அருகில் அமைந்துள்ள ஒரு மீனவக் கிராமமாகும்.

இந்தக் கிராமமானது இலங்கையின் மத்திய ஆட்சியாளர்களின் நேரடிக் கவனிப்பிற்கு உள்ளாவதென்பது அவ்வளவு இலகுவான காரியமாகக் காணப்படவில்லை.

ஆனால், மகிந்தவுக்கு முதல் இலங்கையில் செயற்பட்ட பல அரசியல்வாதிகள் போன்றே, மகிந்த ராஜபக்ஷவும் தனது சொந்தக் கிராமமான அம்பாந்தோட்டையை அபிவிருத்தி செய்வதில் முன்னின்றார்.

அம்பாந்தோட்டையில் மகிந்த ராஜபக்ஷ அனைத்துலக துடுப்பாட்ட அரங்கம், மகிந்த ராஜபக்ஷ அனைத்துலக விமான நிலையம், மாகம்புர- மகிந்த ராஜபக்ஷ துறைமுகம் போன்ற பல்வேறு கட்டுமானங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஆனாலும் இவற்றில் எந்தவொரு கட்டுமானமும் பாரிய வெற்றியைப் பெறவில்லை. பணத்தைக் கொண்டு ஒரு துறைமுகத்தையும் விமான நிலையம் ஒன்றையும் வாங்க முடியுமே தவிர, நீண்ட கால அடிப்படையில் நோக்கும் போது இந்தப் பணமானது விமானங்களையும் பயணிகளையும் பெற்றுத் தர ஒரு போதும் உதவாது.

இலங்கையர்கள் துடுப்பாட்டத்தை நேசிக்கின்ற அதேவேளையில் கொழும்பு, காலி மற்றும் தம்புள்ள போன்ற இடங்களில் சிறப்பு வாய்ந்த அனைத்துலக விளையாட்டு அரங்குகள் காணப்படுவதால் இவற்றைத் தவிர்த்து விட்டு பின்தங்கிய கிராமமான அம்பாந்தோட்டை நோக்கிச் செல்வதில் மக்கள் ஆர்வங் காண்பிக்கவில்லை.

தன்னுடைய ஒளிப்படத்தை நாட்டின் நாணயத்தாள்களில் இட்ட இந்தப் பெரிய மனிதன் எவ்வாறு இவ்வாறான முட்டாள்தனமான திட்டங்கள் மீது நிதியை முதலிடுவதன் மூலம் வெற்றிபெற முடியும் எனக் கருதியிருப்பார்?

ராஜபக்ஷ சீனாவின் எடுபிடியாகச் செயற்பட்டார். இலங்கையில் நிலவிய யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தவர் எனப் பிரபலமாகப் பேசப்பட்ட சீனாவின் கையாளான ராஜபக்ஷ தனது ஆட்சிக்காலத்தில் அரசியல் யாப்பை மீறிச் செயற்பட்டார்.

அத்துடன் தனக்குச் சார்பற்ற நீதிபதிகள், கட்டளைத் தளபதிகள் போன்றவர்களை சிறைகளில் அடைத்தார். உள்நாட்டில் தனக்கு எதிராக கருத்துக்களை வெளியிட்ட ஊடகவியலாளர்களை ராஜபக்ஷ அச்சுறுத்தினார்.

இதனால் இவர்கள் நாட்டை விட்டு வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது.

மகிந்தவின் இரக்கமற்ற சகோதரரான கோத்தபாய பாதுகாப்பு அமைச்சராகக் கடமையாற்றிய போது விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

யுத்தத்தின் இறுதி வாரங்களில் இலங்கையின் போர் வலயத்தில் உண்மையில் என்ன நடந்தது என்பதை அறிவதற்கான நடவடிக்கைகளை மேற்குலக நாடுகள் முன்னெடுத்த அதே வேளையில், இந்த இடைவெளியை சீனா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு இலங்கையில் முதலீடுகளை மேற்கொண்டது.

ராஜபக்ஷவின் சமாதான பங்குலாபமானது சீனாவில் தயாரிக்கப்பட்டது. அதாவது சீனா மகிந்தவின் ஆட்சியைப் பயன்படுத்தியவாறு இலங்கையில் தொடருந்துப் பாதைகள், புதிய வாகனப் போக்குவரத்துப் பாதைகள், கொழும்பில் திட்டமிடப்பட்ட துறைமுக நகரம் போன்ற பல்வேறு திட்டங்களில் தனது நிதியை முதலிட்டது.

ஆனால் திடீரென ராஜபக்ஷ பதவியிலிருந்து தூக்கியெறியப்பட்டார். இவர் சீனாவில் தங்கியிருந்தார். இதனை இலங்கையர்கள் விரும்பவில்லை. இதுவே இவர் தேர்தலில் தோல்வியுறுவதற்கான காரணமாகும்.

இலங்கைக்கு தான் வழங்கிய கடனின் வட்டிவீதத்தை சீனா திடீரென அதிகரித்தது. இலங்கையை புதிய அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் சீனாவின் கொழும்பு துறைமுக நகரத் திட்டம் இடைநிறுத்தப்பட்டது.

ஏனெனில் இத்திட்டத்திற்காக வழங்கப்பட்ட நிலமானது 99 ஆண்டு குத்தகையுடன் வழங்கப்பட்டதால் பின்னர் இதில் மாற்றம் செய்யப்பட்டது.

இலங்கையானது போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் பிரித்தானியர் ஆகிய மூன்று நாட்டவர்களாலும் 400 ஆண்டுகளாக காலனித்துவ ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டிருந்த போதிலும் சீனாவின் கொழும்பு நகரத் திட்டத்திற்காக நிலம் வழங்குவதற்கு உடன்படவில்லை.

'இராணுவத்தைப் பலப்படுத்துவதற்காக வெள்ளையரால் (சிக்) கையகப்படுத்தப்பட்ட நிலமானது தற்போது வெளிநாட்டவர்களால் இலங்கையர்கள் சிலருக்கு கப்பம் செலுத்தப்பட்டு உடமையாக்கப்படுகிறது' என ராஜபக்ஷவை எதிர்த்து தேர்தலில் போட்டியிட்ட மைத்திரி பால சிறிசேன தனது தேர்தல் விளக்கவுரையில் குறிப்பிட்டிருந்தார்.

இங்கு 'கப்பம்' என்பது சீனாவால் தனக்குச் சாதகமான திட்டங்களை இலங்கையில் நடைமுறைப்படுத்துவதற்கு வழங்கப்பட்ட இலஞ்சத்தையே குறிக்கிறது.

கடந்த ஜனவரியில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷ தோல்வியுற்றார்.


குறிப்பாக சீன ஜனாதிபதி சி ஜின்பிங் இலங்கைக்கான தனது பயணத்தை மேற்கொண்டு மூன்று மாதங்களின் பின்னர் ராஜபக்ஷ பதவி துறக்க வேண்டிய நிலையேற்பட்டது. இதற்கு சீனாவின் செல்வாக்கு இலங்கையில் அதிகரித்தமையே காரணமாகும்.

தற்போது இலங்கையின் புதிய அரசாங்கத்துடன் சீனாவால் சமரசங்கள் மேற்கொள்ளப்பட்டதை அடுத்து, கொழும்பு துறைமுக நகரத் திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது. இது பெப்ரவரி மாதத்தில் மீண்டும் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்தலில் சிறிசேன வெற்றி பெறுவதற்கு முயற்சித்த போது சீனாவை ஓரங்கட்ட வேண்டும் என்கின்ற பரப்புரை பயன்படுத்தப்பட்டது. தற்போது இவர் ஆட்சியில் உள்ளார். ஆகவே செல்வந்த நாடுகளுடன் தொடர்பைப் பேணுவதில் சிறிசேன அக்கறை காண்பிக்கிறார்.

இது தவிர, சீனா தனக்கு என்ன தேவைப்படுகிறதோ அதனைப் பெற்றுக் கொள்கிறது என்பதை முழு ஆசியாவும் உணர்ந்துள்ளது. இதனையே இலங்கையும் உணர்ந்துள்ளதால் மீண்டும் இது சீனாவையும் அதன் நிதியையும் வரவேற்கிறது.

# மச்சங்களின் அதிர்ஷ்ட பலன்கள்



**இடுப்பில்**

பொதுவாக ஆண்களுக்கு இடுப்பில் மச்சம் இருப்பது நல்ல பலன்களை தராது.

இடுப்பில் வலது பக்கத்தில் மச்சம் இருந்தால் அவ்வாறு இருப்பவர்களுடைய வாழ்க்கை வசதியுள்ளதாக இருக்காது.

இவர்கள் வசதி குறைந்த குடும்பத்தில் பிறந்து, வசதியற்றவர்களாகவே வாழ்ந்து மிகவும் ஏழைகளாவே இறப்பார்கள்.

இடுப்பில் இடது பக்கத்தில் மச்சம் இருந்தால் அவ்வாறு இருப்பவர்கள் காம இச்சை அதிகம் உள்ளவர்களாக இருப்பார்கள். அதனால் தகாத பெண்களிடம் பழகுவார்கள். அப் பெண்களை நம்பி கைப்பொருள்களை இழந்துவிடுவார்கள்.

இந்த மச்சம் உடையவர்கள் மனத்தை அடக்கி பிற பெண்களிடம் பழகுதலைக் குறைத்துக் கொள்ளுதல் வேண்டும். அப் பெண்கள் இவர்களை ஏமாற்றுபவர்களாகவே இருப்பார்கள். இவர்கள் மீது உண்மையன்பு உடையவ்கள் போல நடித்து இவர்களை நம்பச் செய்து இவர்களது பொருள் களைச் கவர்வதிலேயே கவனம் கொண்டு பொருள்களைக் கவர்ந்த பின்னர் இவர்களை கைவிட்டுவிடுவார்கள். ஆகையால் இவர்கள் பெண்களின் தொடர்பைக் கொள்ளாதிருத்தலோடு ஏமாற்றும் பெண்களை அறிந்து அவர்களிடம் எச்சரிக்கையோடு இருப்பது நல்லது.

**முதுகில்**

பொதுவாக முதுகில் மச்சம் இருப்பது மிகவும் நல்லது. முதுகில் மச்சம் உடையவர்கள் நல்ல அதிஷ்டம் உடையுவர்களாக இருப்பார்கள். சொந்த வீடு, நிலம், வாகன வசதி உடையவர்களாக இருப்பார்கள். வாழ்நாள் முழுவதும் மிகுந்த வசதிகள் உடையவர்களாகவும் நல்ல உள்ளம் படைத்தவர்களாகவும் தெய்வப்பற்று உடையவர்களாகவும் இருப்பார்கள். அறிஞர்கள், பெரியோர்கள், பக்திமான்கள் ஆகியோருடன் தொடர்பு உடையவர்களாகவும் இருப்பார்கள்.

முதுகில் முதுகெலும் புக்கு அருகில் மச்சம் இருந்தால் அவ்வாறு இருப்பவர் பரம்பரைப் பணக்காரராக இருப்பார்கள். பெரிய பதவியில் இருப்பார். இவர்கள் அரசாங்க அதிகாரிகளாகவும் இருப்பார்கள். இவர்களுக்கு தமது பதவியில் திடீரென ஏமாற்றம் உண்டாகும். அரசாங்கத்திற்கு ஆலோசனை சொல்லும் அதிகாரிகளாகவும் சிலர் இருப்பார்கள். செல்வமும் செல்வாக்கும் பெற்று புகழ்மிக்கவர்களாக திகழ்வார்கள். ஆயினும் அந்த பணத்தாலோ பதவியாலோ அகந்தை இல்லாமல் இருப்பார்கள்.

முதுகில் வலது தோள்களுக்கு அருகில் மச்சம் இருப்பவர்கள் மிகவும் தைரியசாலிகளாக இருபார்கள். எந்தக் காரியத்திலும் தைரியமாக ஈடுபடுபவராக இருப்பர். தமது முயற்சிகளில் வெற்றியும் பெறுவார். இவர்களில் சிலர் படைவீரர்களாகவோ சண் டையிடுவதில் வல்லமையுடையவர்களாகவோ இருப்பார்கள். உடல் வலிமை மிக்கவர்களாகவும் தோற்றமளிப்பார்கள்.


முதுகில் இடது பக்கம் தோள்களுக்கு அருகில் மச்சம் இருந்தால் இவர்கள் செய்கின்ற செயல்கள் எல்லாம் மிகவும் முன்யோசனையுடன் கூடியனவாகவும் தக்க பலனளிப்பனவாகவும் இருக்கும். இவர்கள் நல்லவிதமாக அமைந்த வாழ்க்கையை உடையவர்களாவர்.

முதுகின் மேல் பாகத்திலோ அல்லது கீழ்ப்பாகத்திலோ அல்லது வலது பக்கத்தின் ஓரத்திலோ இடது பக்கத்தின் ஓரத்திலோ மச்சம் இருந்தால் அவ்வாறு இருக்கப் பெற்றவர் மனதைரியம் இல்லாதவர். நிலையான உள்ளம். எண்ணம் இல்லாதவர். துணிந்து எந்தக் காரியத்தையும் செய்து முடிக்காதவர். ஒவ்வொரு காரியத்தையும் பாதியிலேயே விட்டு விட்டு பலன் காணாதவர். மிகவும் சோம்பேறித்தனமானவர்.

முதுகெலும்பின் அடிப்பாகத்தில் பீடத்தின் இடையே மச்சம் இருந்தால் அவர் நல்ல உடல் ஆரோக்கியமும் நீண்ட ஆயுளையும் உடையவ ராகவே இருப்பர் யோகப்பயிற்சி மூலம் மனவிமையையும் உடல் வலிமையையும் வளர்த்துக் கொள்வார். மிகவும் சுறுசுறுப்பானவராகவும். இருப்பார். (தொடரும்)

# வலிகாமம் வடக்கில் விரைவில் மீள்குடியேற்றம் இடம்பெறும்

## யாழ்.அரச அதிபர் நம்பிக்கை



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கில் விரைவில் மீள்குடியேற்றம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் கனடா உயர்ஸ்தானிகருக்கு நேற்று புதன்கிழமை தெரிவித்தார்.

கனடா உயர்ஸ்தானிகர் ஷெலி வைட்டிங் யாழிற்கு மேற்கொண்டுள்ள விஜயத்தின் போது யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகனை யாழ்.மாவட்ட செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

அந்த சந்திப்பின் போதே, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இவ்வாறு கனடா உயர்ஸ்தானிகருக்கு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், யாழிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளதை இட்டு நன்றிகளை தெரிவித்துக்கொள்வதுடன், யாழ். மாவட்டத்தில் தற்போது, ஏற்பட்டுள்ள நிலைமைகள் குறித்தும் தெரிவித்தார். அதன்போது கடந்த மார்ச் மாதம் 1000 ஏக்கர் காணிகளில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். அதேவேளை, விரைவில் மீள்குடியேற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன், இளைஞர்களின் தொழில் வாய்ப்புக்கள் மற்றும் பல்வேறு பிரச்சினைகளையும் கனடா உயர்ஸ்தானிகருக்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் எடுத்துரைத்தார். (இ-4)

# 4 பொலிஸார் பணி நீக்கம்

இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் கம்பேகமுவ பொலிஸ் கான்ஸ்டபில்கள் நால்வர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

கஞ்சா கடத்திய இருவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளாதிருக்க குறித்த நால்வரும் 30 ஆயிரம் ரூபாவை இலஞ்சமாக பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் கம்பேகமுவ பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் மேற்கொள் ளப்பட்ட விசாரணைகளில் குறித்த நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களையும் பணிநீக்கம் செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. (இ-7)

# சம்பள உயர்வுப்பேச்சுவார்த்தை இழுத்தடிப்பது திட்டமிட்ட செயல்

24 மாதங்களுக்கு நடைமுறைக்கு வரப்போகும் சம்பளவுயர்வு கூட்டு ஒப்பந்தம் ஒன்றைப் புதுப்பிப்பதற்கு 9 மாதங்கள் காலம் கடத்துவது திட்டமிட்ட செயற்பாடாகும். இது ஒப்பந்த காலத்தின் மூன்றில் ஒரு பகுதியாகும் என நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.திலகராஜ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில், கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சம்பள உயர்வு பேச்சுவார்த்தையை இழுத்தடிப்பது திட்டமிட்ட செயலாகும். இதனால், பெருந்தோட்ட தொழிலாளர்கள் பல்வேறான அசௌகரியங்களுக்கு முகங் கொடுத்து வருகின்றனர். சம்பள உயர்வு ஒப்பந்த இழுத் தடிப்பினால், முன்னைய கூட்டு ஒப்பந்த அடிப்படை யிலேயே தொழிலாளர்கள் கடந்த ஒன்பது மாதங்களாகச் சம்பளத்தைப் பெற்றுக்கொண்டிருக்கின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (இ-7)

# சகல உள்ளூராட்சி சபைகளும் சிறப்பாக இயங்க வேண்டும்

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் வலியுறுத்து

உள்ளூராட்சிச்சபைகள சிறப்பாக இயக்கினால் வடகு மாகாணசபை சிறப்பானதாக அமையும் என வட மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின 41ஆவது அமர்வின்இரண்டாவது நாள் அமர்வு நேற்றைய தினம் கைதடியில் உள்ள வட மாகாணசபைசபா மண்டபத்தில் நடைபெற்றது. இதில முதலமைச்சர் அமைச்சின் ஒதுக் கீடுகள் தொடர்பான விவாதத்தின் போது அவர்மேற்கண்டவாறுதெரிவிதார்

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

உள்ளுராட்சி சபைகளுக்கென ஒதுக்கப்பட்ட நிதி செலவிடப்படவில்லை அவை தேங்கி இருப்பதாக கூறப்படுகிறது. அவை பயன்படுத்தப்படாமல் இருப்பதனால் இவ்வாறான நிலை ஏற்படடுள்ளது. பிரதேச சபைகள் நகர சபைகளில் தொழில் நுட்ப உத்தியோகத்தர் பற்றாக்குறை இருக்கின்றது. அதாவது 133 பேர் நியமிக்கப்பட வேண்டிய இடத்தில் 99 பேர் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

அத்துடன் 2011,12,13 ஆம் ஆண்டுகளாகபிரதேசசபைக்குகிடைக்க வேண்டிய 50 மில்லியன் முத்திரை வரியை கோட்டைவிட்டுள்ளோம். அதைபெற்றால் பல்வேறு வகையான செயறபாடுகளை மேற்கொள்ள முடியும். பிரதேசசபைகளுக்கு வாகனங்கள் வழங்கப பட்டுள்ளன. ஆனால் அதறகுரிய சாரதிகள்வழங்கப்படவில்லை எனவே அந்த வாகனங்கள் மக்களுக்குரிய சேவைகளைவழங்காமல் இருக்கின்றன.

மேலும் சுற்றுலாத்துறை மத்திக்கும் மாகாணத்துக்கும் இடையில் இருப்பதால் நியதிச் சட்டம் உருவாக்க வேண்டும். அவற்றை நிறைவேற் றாமல் அது தொடர்பாக பேசுவதில் அர்த்தம் இல்லை.

எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு எமக்கென இருக்கும் வசதிகளை முற்று முழுதாக பயன்படுத்தினால் எமது சபையை சிறப்பாக இயக்க முடியும். எனஅவர் மேலும் தெரிவித்தார்.(இ-9)

# மஹத்தயாவின் பாதாள உலகக் குழு சிக்கியது

"கொழும்பு மஹத்தயா" எனும் பெயரால் அறியப்படும் பாதாள உலகக் குழுத்தலைவனின் அடியாட்கள் 5 பேர் கார் ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்த போது களுத்துறை வடக்கு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். ஹெரோயின் போதைப் பொருள், கைக்குண்டு மற்றும் சில ஆயுதங்களுடன் இவர்கள் இவ்வாறு காலி வீதியூடாக களுத்துறை திசையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்துக்கொண் டிருந்த போதே இரவு வேளையில் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் காரை சோத னைக்கு நிறுத்திய பொலிஸ் கான்ஸ் டபிள் ஒருவரை மோதிவிட்டு தப்பிச் செல்லவும் முயற்சித்துள்ளதுடன் களுத்துறை வடக்கு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொ லிஸ் பரிசோதகர் ஆனந்த சில்வாவுக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையிலேயே வாடிய் மங்கட சந்தியில் வீதித் தடையை ஏற்படுத்தி சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து கைக்குண்டொன்றும், ரீ 56 ரக துப்பாக்கி ரவைகள் 15 உம், மெகஸின் இரண்டும், வாள்கள் இரண்டும் ஹெரோயின் போதைப் பொருள் 5.21 கிராமும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறைவடக்குபொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கிடைத்த தகவலை அடுத்து சந்தேக நபர்கள் பயணித்த காரை சோதனை செய்ய பொலிஸார் நிறுத்துமாறு சமிக்ஞை செய்துள்ளனர். களுத்துறை வடக்கு பொலிஸ் நிலையம் முன்பாக வைத்தே இந்த சமிக்ஞை செய்யப்பட்டுள்ளது. எனினும் அந்த சமிக்ஞையை கணக்கில் எடுக்காத சந்தேக நபர்கள் தாம் பயணித்த காரை கொழும்பு நோக்கி வேகமாக செலுத்தியுள்ளனர்.

இந் நிலையில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் மோட்டார் சைக்கிளில் அந்த காரை பின் தொடர்ந்து சென்றுள்ளார். ஒரு கட்டத்தில் அந்த பொலிஸ் கான்ஸ்டபிளை காரால் மோதி வீழ்த்தி விட்டு தப்பிச் செல்லவும் சந்தேக நபர்கள் முயற்சித்துள்ளனர்.

எனினும் மேலும் மூன்று கான்ஸ்டபிள்கள் இணைந்து வாடியமங்கட சந்தியில் வீதித் தடையொன்றை திடீரென ஏற்படுத்தி வேகமாக வந்த காரின் வேகத்தை குறைத்துள்ளனர். இதன்போது காரை பின் தொடர்ந்து வந்த கான்ஸ்டபிள் காரின் திறப்பை திடீரென கழற்றி எடுத்துள்ளார். இதனையடுத்து உடன் செயற்பட்ட ஏனைய மூன்று பொலிஸ் கான்ஸ்டபிள்களும் சந்தேக நபர்களை கைது செய்து காரை சோதனை செய்தபோதே ஆயுதங்களும் ஹெரோயினும் சிக்கியுள்ளன.

கைதான சந்தேக நபர்கள் பாணதுறை, மொறட்டுவை மற்றும் பண்டாரகம பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் குற்றச் செயல் ஒன்றில் ஈடுபடவே இவ்வாறு குழுவாக சென்றிருக்க வேண்டும் என சந்தேகிக்கும் பொலிஸார களுத்துறை சிரேஷ்ட பொலிஸ அத்தியட்சகர் ரத்மல கொடித்துவக்குவின் ஆலோசனைக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-7)

# அவுஸ்ரேலிய பெண் மீது துஷ்பிரயோக முயற்சி

இளம் பெண்ணொருவரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயன்ற நபரொருவர் எல்ல பிரதேசத்தில் கைதாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த 26 வயதுடைய இளம பெண்ணையே குறித்த நபர் வல்லுறவுக்குட்படுத்த முயன்றுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். எல்ல பிரதேச மசாஜ் நிலையத்தில் தொழில் புரியும் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

எல்ல பிரதேசத்துக்கு சென்ற அவுஸ்திரேலிய நாட்டுப் பிரஜை, அப்பிரதேசத்திலுள்ள மசாஜ் மத்திய நிலையத்திற்கு சென்றுள்ளார்.

அங்கு, மசாஜ் செய்யும் நபர், இவ் இளம் பெண்ணை பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயன்றுள்ளார். இது குறித்து அப்பெண், எல்ல பொலிஸ் நிலையத்தில் முறையிடவே, எல்ல பொலிஸார் குறிப்பிட்ட நபரைக் கைது செய்துள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணையை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (இ-7)

# மனைவியைத் தாக்கியவர் மதுவெறுப்பு சிகிச்சை பிரிவில்

மதுபோதையில் மனைவியை அடிக்கடி தாக்கி துன்புறுத்துவதாக குற்றஞ்சாட்டப்பட்டு கடந்த 10 ஆம் மாதம் கைது செய்யப்பட்டவரை சமுதாய சீர்திருத்தப்பிரிவினூடாக சாவகச்சேரி குருந்தகம் மதுவெறுப்புச் சிகிச்சை பிரிவுக்கு அனுப்பி தகுந்த சிகிச்சையின் பின் அறிக்கை சமர்ப்பிக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

குற்றஞ் சாட்டப்பட்டவர் மன நோயால் பாதிக்கப்பட்டு அடிக்கடி தற்கொலைக்கு முயல்வதாகவும் சமுதாய சீர்திருத்தப் பிரிவு அதிகாரி நீதிமன்றுக்கு தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, 10 கிலோ கிராம் கஞ்சாவை உடமையில் வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு கடந்த 14.08.2015 அன்று கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தவரை எதிர்வரும் 23 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா நேற்று உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி சந்தேகநபர் சார்பில் பிணை விண்ணப்பம் செய்யப்பட்ட போதிலும் இத்தகைய பாரதூரமான குற்றச்சாட்டு தொடர்பில் மேல்நீதிமன்றமே பிணை வழங்க முடியும் என்ற அடிப்படையில் பிணை விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

(இ-5-60)

# நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை- 16.12.2015

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 141.48 | 145.71 |
| பவுண்ட் | பிரிட்டன் | 212.06 | 219.92 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 153.78 | 160.19 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 141.88 | 148.06 |
| டொலர் | கனடா | 102.29 | 106.71 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 100.79 | 105.74 |
| டொலர் | சிங்கப்பூர் | 100.12 | 104.15 |
| ரூபா | இந்தியா | 2.1430 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 380.3041 |
| குவைத் | டினார் | 473.0694 |
| ஓமான் | ரியால் | 372.6190 |
| கட்டார் | ரியால் | 39.3970 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.2438 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.0597 |

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 200 | 140 | 160 | 150 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 80 | 100 | 80 |
| பச்சைமிளகாய் | 900 | 600 | 580 | 800 | 800 |
| தக்காளி | 220 | 220 | 160 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 15-30 | 40 | 40 |
| கோவா | 160 | 120 | 100 | 160 | 120 |
| கரட் | 180 | 200 | 170 | 200 | 200 |
| பூசணி | 60 | 40 | 30-40 | 60 | 40 |
| புடோல் | 140 | 100 | 80 | 120 | 140 |
| வாழைக்காய் | 80 | 50* | 50 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 150 | 120 | 120 | 160 | 100 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 70 | 100 | 90 |
| பாகற்காய் | 300 | 400 | 280 | 350 | 280 |
| வெண்டிக்காய் | 100 | 150 | 90 | 140 | 140 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | — | 100 | 70 |
| பயற்றங்காய் | 250 | 250 | 180 | 280 | 250 |
| லீக்ஸ் | 150 | 180 | 130 | 200 | 200 |
| பீற்றூட் | 120 | — | — | 200 | — |
| கறிமிளகாய் | 300 | — | — | 400 | 350 |
| முருங்கைக்காய் | 450 | — | — | — | — |
| போஞ்சி | 300 | — | 200 | 280 | 300 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 100 | 140 | — |
| கீரை - 1 பிடி | 80 | 50 | — | — | 40 |
| தேசிக்காய் | 150 | 150-200 | 110 | 160 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 20-40 | 35-40 | 50 |
| இராசவள்ளி | 200 | 250 | 150 | 160 | 250 |
| வெங்காயப்பூ | 400 | — | — | — | — |
| முள்ளங்கி | 120 | 100 | — | 160 | 140 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 20 | 30 | 40 |
| வல்லாரை | 20 | 20 | — | 20 | 30 |
| ஈரப்பலா | 40 | 50 | 35 | 60-100 | 40 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## சென்னை பாண்டி பஜாரில் பிரபாகரன்- உமாமகேஸ்வரன் மோதல்! 55

அந்த ஓட்டலில் உமா மகேஸ்வரன் கண்ணனுடன் உணவு அருந்திவிட்டு வெளியே வந்து மோட்டார் சைக்கிளை ஸ்டார்ட் செய்தார். அவர்களை பிரபாகரன் பார்த்துவிட்டார். அதே சமயம் கண்ணனும் பிரபாகரனைப் பார்த்துவிட்டு அதோ பிரபாகரன்! என்று உமாமகேஸ்வரனிடம் கூறினார்.

பிரபாகரன், உமா மகேஸ்வரன் இருவரும் ஒரே நேரத்தில் தங்களிடம் இருந்த துப்பாக்கிகளை எடுத்தனர். பிரபாகரன் முந்திக்கொண்டார். அவர் துப்பாக்கியில் இருந்து குண்டுகள் சீறிப் பாயந்தன. கண்ணனின் காலில் 6 குண்டுகள் பாய்ந்தன. அவர் கீழே சாய்ந்தார். அதற்குள் உமா மகேஸ்வரன் சுதாகரித்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றார்.

### முதல் முறையாகக் கைது

துப்பாக்கிச் சூடு நடந்ததால் பாண்டி பஜாரில் பரபரப்பு ஏற்பட்டது.

கூட்டம் சேர்ந்த காரணத்தால் பிரபாகரனும் ராகவனும் பொலிஸ் நிலையம் வழியாக ஓடினார்கள். அவர்களைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் கைது செய்தனர்.

பிரபாகரனின் வாழ்க்கையில் அவர் கைதானது இதுவே முதல் முறையாகும்.

காயமடைந்த கண்ணன் ராயப்பேட்டை அரசு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

மே 25 ஆம் திகதி கும்மிடிப்பூண்டி ரெயில் நிலையம் அருகே உமா மகேஸ்வரனும் கைது செய்யப்பட்டார். கரிகாலன் என்ற பெயரில் பிரபாகரன் மீதும் முகுந்தன் என்ற பெயரில் உமா மகேஸ்வரன் மீதும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.


காயமடைந்த கண்ணன் எல்லா உண்மைகளையும் கூறிய பிறகே தாங்கள் கைது செய்து இருப்பது விடுதலைப் புலிகள் என்பது பொலிசுக்கு தெரிய வந்தது.

### 10 லட்சம் ரூபா

கைதான இருவரையும் இலங்கைக்கு அனுப்பி வைத்தால் 10 லட்சம் ரூபா வழங்கப்படும் என்று இலங்கை அரசு அறிவித்தது.


அவர்களை நாடு கடத்தாமல் தடுப்பதற்காகச் செல்வநாயகத்தின் மகனும் வக்கீலுமான சந்திரஹாசன் சென்னை வந்தார். அவர் தி.மு.க தலைவர் கருணாநிதியைச் சந்தித்தார். அப்போது கலைஞர் ஆட்சியில் இல்லை. ஆயினும் இந்திரா காந்தியுடன் கூட்டணி தொடர்ந்த காரணத்தினால் டெல்லி மேலிடத்தில் இது பற்றி பேசுவதாக உறுதியளித்தார்.

அப்போது தமிழக முதலமைச்சராக இருந்த எம்.ஜி.



ஆருக்குப் போராளிகள் கைது பற்றி விபரம் தெரிவிக்கப்பட்டது. பையன்கள் விடயத்தில் கொஞ்சம் பார்த்து நடந்துகொள்ளுங்கள் என்று பொலிஸ் தலைமையிடம் எம்.ஜி.ஆர் கூறினார்.

சென்னையில் அனைத்துக் கட்சி கூட்டத்திற்குப் பழ.நெடுமாறன் ஏற்பாடு செய்தார். அப்போது அவர் தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர். கைதான போராளிகளை இலங்கைக்கு அனுப்பக்கூடாது என்று இந்தக் கூட்டம் வலி



யுறுத்தியது.


### நிபந்தனை ஜாமீன்

இருவரையும் விடுவித்து விடலாம் என்ற முடிவுக்குப் பிரதமர் இந்திரா காந்தியும் வந்திருந்தார். இதற்கு முதல் காரணம் ஜெவர்த்தன அரசு அமெரிக்காவின் பக்கம் சாய்ந்துகொண்டிருந்தது. இரண்டாவது காரணம் ஸ்ரேல், சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் மீது ஜெயவர்த்தன அரசு சிறப்புக் கவனம் செலுத்தியது.

வழக்கு விசாரணைக்கு வந்தபோது உமா மகேஸ்வரன் சென்னையிலும் பிரபாகரன் மதுரையிலும் தங்கியிருக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் இருவருக்கும் ஜாமீன் வழங்கப்பட்டது. உமா மகேஸ்வரன் சென்னையில் தமிழ் அறிஞர் பெருஞ்சித்திரனார் வீட்டில் தங்கியிருந்தார். பிரபாகரன் மதுரையில் பழ.நெடுமாறன் வீட்டில் தங்கியிருந்தார். ஏறத்தாழ 7 மாதம் பிரபாகரன் அங்கே இருந்தார். அவர்களது குடும்பத்தில் ஒருவராகவே மாறியிருந்தார்.

பிறகு ஒருநாள் திடீரென்று காணாமல் போனார்.

அவர் இலங்கைக்குத் தான் போய் இருப்பார் என்பது எல்லோருக்கும் தெரிந்திருந்ததால் அவரை யாரும் தேடவில்லை.



(தொடரும்)

என்னுடைய அனைத்து வெற்றிகளுக்கும் அடிப்படையாக இருந்தது எண்ணல் வெற்றி பெற முடியும் என்ற மந்திரச் சொல்தான்

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk

## இராமர் காடு சென்றபோது தசரதரும் உடன் சென்றிருந்தால்...

தசரதச் சக்கரவர்த்தியிடம் அவர் மனையாள் கைகேயி இரண்டு வரங்களை கேட்கிறாள். அதில் ஒன்று; இராமர் பதினான்கு ஆண்டுகள் காடு செல்ல வேண்டும். மற்றையது; என் மகன் பரதன் நாடாள வேண்டும்.

ஏற்கெனவே இரு வரங்கள் தருவதாக சத்தியம் செய்து கொடுத்த தசரதனால் எதுவும் செய்ய முடியவில்லை.

இராமர் காடேகுவதையாவது விட்டுவிடு என்று கைகேயிடம் கெஞ்சுகிறார் தசரதர். கைகேயி விடுவதாக இல்லை.

அயோத்தி மன்னராக முடிசூட்டப்பட இருந்த இராமரை பதினான்கு ஆண்டுகள் காடு செல்லுமாறும் பரதனுக்கு பட்டாபிஷேகம் நடைபெறும் என்றும் இராமருக்குச் செய்தி சொல்லப்படுகிறது.

செய்தி அறிந்ததும் சீதா, இலட்சுமணர் சகிதம் இராமர் காடேகிறார். இராமர் காடேகினார் என்ற செய்தியை தசரதன் அறிந்ததும் புத்திரசோகம் தாங்க முடியாமல் மரணித்து விடுகிறார்.

யாருக்கும் நடக்கக் கூடாத சம்பவம் தசரதருக்கு நடந்து விட்டது. இதை விதி வலிமை என்று கூறினாலும் தசரதனின் மதிக்குறைவும் காரணம் என்பதை சொல்லித்தானாக வேண்டும்.

ஆம், இராமாயணத்தில் தசரதனின் மதி மறைப்பு மூன்று இடங்களில் வெளிப்படுகிறது. ஒன்று; வேட்டையாடச்சென்ற தசரதர் ஆற்றில் தண்ணீர் எடுக்கும் ஒலியை மான் தண்ணீர் குடிப்பதாகக் கருதி முனிபுங்கவரின் புதல்வரை அம்பு எய்தி உயிர் போக்கியமை.

இரண்டாவது; தன் மனையாள் கைகேயிக்கு இரண்டு வரங்களைக் கொடுத்து, நீ விரும்பும் போது பெற்றுக் கொள்க என்று கூறியமை.

மூன்றாவது; இராமர் 14 ஆண்டுகள் காடு செல்ல வேண்டும் எனக் கைகேயி கேட்டபோது,

கைகேயி! இராமர் காடேகினால் நானும் இராமனோடு சேர்ந்து காடு செல்வேன் என்று கூறாமை என்பனவே அந்த மூன்று தவறுகளாகும்.

இராமரோடு சீதாதேவியும் இலட்சுமணனும் காடு செல்லும் போது தசரதரும் உடன் செல்வதில் தவறில்லை. தசரதர் காடு சென்றால் அவர் மனைவிகளாகிய கைகேயி, கோசலை, சுமத்திரை ஆகிய மூவரும் காடு செல்ல வேண்டும்.

ஆக, இராமர் காடு செல்ல வேண்டும் என்ற வரத்தை கைகேயி கைவிட்டிருப்பாள். எனினும் தசரதருக்கு அப்படி ஒரு மதி வேலை செய்யவில்லை.

சிலவேளை இராமரோடு சேர்ந்து தசரதரும் காடு சென்றிருந்தால், மாயமான் வந்தபோது சீதைக்குக் காவலாக தசரதர் இருந்திருப்பார் அல்லவா?

ஆக, தசரதரின் மதிக்குறைவு நிலைமைகளை மிக மோசமாக்கியது. தசரதரின் இராசதந்திரம் அற்ற செயற்பாடு போன்ற பல சம்பவங்கள் உலகில் நிறைவே நடந்துள்ளன.

ஏமாறுபவர்கள் இருந்தால் ஏமாற்றுகிறவர்கள் எப்போதும் எங்கும் இருப்பார்கள்.

இப்போதெல்லாம் தமிழ் மக்களின் நிலைமைகளை பார்க்கின்றபோது எத்தனையோ முறைகளின் ஊடாக நாங்கள் ஏமாற்றப்படுகின்றோம் என்பது தெரிகிறது. அதில் ஒன்றாக "கிராம இராச்சியம்" என்ற புதிய பூதம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இப்படியே எங்கள் பிரச்சினைகள் திசைதிருப்பப்படும் போது நாங்களும் சில தீர்மானங்களை எடுத்தாக வேண்டும்.

எங்களை ஏமாற்ற இலங்கை அரசு இனியும் நினைத்தால் எங்கள் பாராளுமன்றப் பதவிகளை தூக்கி எறியவும் தயங்கமாட்டோம் என்று ஒரு சம்பிரதாயத்துக்கேனும் கூறி நாங்களும் உசாராக இருக்கிறோம் என்பதைக் காட்டுவது கட்டாயம்.

ஜனநாயகம் என்பது ஆமாம் போடுவது, எல்லாவற்றுக்கும் இணங்கிச் செல்லுவது மட்டுமல்ல; நீதியை ஆணித்தரமாக எடுத்துரைப்பதும் ஜனநாயகம் என்பது உணரப்பட வேண்டும்.

# பிள்ளையானுக்கு விளக்கமறியல் நீடிப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை தொடர்பில் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் பிள்ளையான் எனப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தனை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின முன்னாள் தேசிய அமைப்பாளரும், முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான பிரதீப் மாஸ்டர் என்று அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்தராஜா மற்றும கஜன் மாமா எனப்படும் கனகநாயகம் ஆகியோரையும் எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் பணித்துள்ளது.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி என்.எம். அப்துல்லாஹ் முன்னிலையில் நேற்று புதன்கிழமை இவர்களை முன்னிலைப்படுத்திய போதே நீதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் மட்டக்களப்பு புனித மரியாள் பேராலயத்தில் 2005 ஆம் ஆண்டு நத்தார் நள்ளிரவு ஆராதனையின் போது சுட்டு கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# 26 அரச சார்பற்ற நிறுவனங்கள் புலிகளுக்கு பணம் வழங்கியுள்ளன

## சிங்கள ஊடகம் தகவல்

(கொழும்பு)

12 நாடுகளும் 26 அரச சார்பற்ற நிறுவனங்களும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பணம் வழங்கியுள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. 12 வெளிநாடுகளும், 26 சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும்தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு 133 கோடி ரூபாய் பணம் வழங்கியுள்ளன.

அண்மையில் முல்லைத்தீவில் மீட்கப்பட்ட இரகசிய ஆவணமொன்றில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஊடாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பணம் வழங்கபட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பிரிட்டன், இத்தாலி, பொஸ்ட்வானா, அவுஸ்திரேலியா, கனடா, டென்மார்க், பிரான்ஸ், ஜேர்மனி, அமெரிக்கா, நோர்வே, நியூசிலாந்து மற்றும் சுவீடன் உள்ளிட்ட நாடுகள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பணம் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம், புலிகள் ஆயுதம் கொள்வனவு செய்வதற்காக இந்தப் பணத்தை வழங்கியுள்ளதாக திவயின சிங்கள பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

## திருவெம்பாவை இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ண லிங்கேஸ்வரர் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை அதிகாலை 4.30 மணிக்குதிருவெம்பாவைபூஜை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது. (இ-5)

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

மட்டுவில்பன்றித்தலைச்சி அம்மன் கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெறவுள்ள நிலையில் இன்று இரவு 9 மணிக்கு நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதாவாரிதி பிரம்ம ஸ்ரீ. சிவ.வை.நித்தியானந்த சர்மா, பக்தகௌரி எனும் தொனிப் பொருளில் சொற்பொழிவாற்றவுள்ளார். (இ-5)

## நலன்புரி விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்துச் சபை வடபிராந்திய யாழ். சாலை ஊழியர் நலன்புரிச் சங்கத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் நலன்புரி விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். சாலையில் நடைபெறவுள்ளது. (இ-5)

# அதிக பொருட்களை எடுத்துச் செல்ல இலங்கை அகதிகளுக்கு அனுமதி!

(கொழும்பு)

இலங்கை அகதிகள், இந்தியாவிலிருந்து கூடுதலான பொருட்களை எடுத்துச் செல்ல அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ள அகதிகள் நாடு திரும்ப விரும்பினால் அவர்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க உள்ளதாக ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர்நிறுவனம் அறிவித்துள்ளது.

பயணப் பொதிகளுக்கான எடையையும் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் கட்டணம் இன்றி 20 கிலோ கிராம் எடையுடைய பயணப் பொதிகளை எடுத்துச் செல்லவே அனுமதிக்கப்பட்டிருந்தது.

எனினும் தற்போது இந்த இந்த எடை 60 கிலோ கிராமாக உயர்த்தப்பட்டுள்ளது.

தன்னார்வ அடிப்படையில் நாடு திரும்புவோருக்கு இவ்வாறு சலுகைகளை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசாங்கத்தினால் இந்த வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளன. (எ-11)

# மகசின் சிறைக் கைதிகளின் உண்ணாவிரதம் நிறுத்தம்

(கொழும்பு)

மகசின் சிறைச்சாலையில் கடந்த பத்து நாட்களாக உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட இரு அரசியல் கைதிகளின் உண்ணாவிரதம் நேற்று தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் அ.வியாளேந்திரன் தெரிவித்தார்.

நேற்று பிற்பகல் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும எஸ்.வியாளேந்திரன் ஆகிய இருவரும் சிறைச்சாலைக்கு சென்று உண்ணாவிரதத்தில ஈடுபட்ட அரசியல் கைதிகளை பார்வையிட்டிருந்தனர்.

உண்ணாவிரத அரசியல கைதி இருவரின் வழக்கு தொடர்பாக கேட்டறிந்ததுடன், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சுவாமிநாதன் இவ் இருவரின் விடுதலை தொடர்பாக அலைபேசியூடாக கேட்டபோது,

இருவரின்கோரிக்கையை இன்னும் இரண்டு தினங்களுக்குள் அவர்கள் முன்வைத்த கோரிக்கைகான ஒரு தீர்வைப்பெற்றுக் கொடுப்பதாக கூறியிருந்தார் என பாராளுமன்ற உறுப்பினர் வியாளேந்திரன் தெரிவித்தார். (எ-11)

## சத்திய தரிசனம்



### அமைதியை வேண்டுவோம்

❖ கடவுளிடம் மன அமைதியை மட்டும் வேண்டுங்கள். இதுவே எல்லோரும் செய்ய வேண்டிய பிரார்த்தனை.

❖ சுயநலமற்ற சேவையில் ஈடுபடுங்கள். அதுவே மனம் அமைதி பெற வழி.

❖ எல்லாரும் கடவுளின் குழந்தை என்பதை உணர்ந்தால் உலகமே அன்பு மயமாகி விடும்.

❖ பிறருடைய கருத்தை மதிக்கப் பழகுங்கள். மற்றவர்களின் சுதந்திரத்தில் தலையிடாமல் இருப்பதே உயர்ந்த பண்பு.

❖ பூமிக்கு வரும் போது நாம் எதையும் கொண்டு வரவும் இல்லை. போகும் போது எதையும் கொண்டு போகவும் முடியாது.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### கோயில்கள் எதன் அடிப்படையில் கட்டப்படுகின்றன?

கோயில்கள் ஒரு மனிதன் மல்லாந்து படுத்திருக்கும் நிலையைக் குறிக்கும்.கர்ப்பக்கிரஹம் தலையாகவும் நிருத்த மண்டபம் தொடையாகவும் மகா மண்டபம் மார்பாகவும் அர்த்த மண்டபம் முகமாகவும் ஆஸ்தான மண்டபம் கணுக்காலாகவும் வெளிக்கோபுரம் பாதமாகவும் குறிக்கப்படுகிறது. கர்ப்ப விமானம் ஞானியின் அமர்ந்த திருக்கோலமாகும். இவைகள் அண்டத்தையும் (உலகம்) பிண்டத்தையும் (மனித உடல்) பிரதிபலிப்பது. அண்டமாக ஈஸ்வரன் தான் பிண்டத்தில் ஆத்மாவாக உள்ளான். விராட புருஷனின் உயிரே இப்பூமியாகவும் சுவாசமாக புதன்கிரகமும் இதயமாக சுக்கிரனும் பிறப்பு உறுப்பாக குருவும் கால்களாக சனியும் கோயிலே சிவமாகவும் வணங்குபவர்களின் பரிசுத்த குணங்களே சக்தியாகவும் குறிக்கப்படுகின்றது. இதையே திருமூலர்,

*உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்*
*வள்ளல் பிரானுக்கு வாய் கோபுரவாசல்*
*தெள்ளத் தெளிந்தார்க்குச் சிவன் சிவலிங்கம்*
*கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே*

எனக் குறிப்பிடுகின்றார்.

# டோனிக்கு எதிராக உத்வேகத்துடன் விளையாடுவோம் : ரெய்னா

ஐ.பி.எல். தொடரில் டோனியின் சவால்களை சந்திக்க ஆவலுடன் காத்திருப்பதாக சுரேஷ் ரெய்னா தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். தொடர் தொடங்கப்பட்டதில் இருந்து டோனியும், ரெய்னாவும் 8 ஆண்டுகளாக சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு விளையாடி வந்தனர்.

இந்நிலையில் புதிய ஐபிஎல் அணிகளான புனேவுக்கு டோனியும், ராஜ்கோட்டுக்கு ரெய்னாவும் பிரிந்து சென்றுவிட்டனர். இதனால் டோனியை முதன்முறையாக நேருக்கு நேர் சந்திக்கவிருக்கிறார் ரெய்னா.

இது பற்றி அவர் கூறுகையில், ராஜ்கோட்டில் நான் ஜூனியர் அளவிலான கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி இருக்கிறேன்.

இங்குள்ள சூழல் எனக்கு நன்கு பழக்கப்பட்டதால் அதை சாதமாக பயன்படுத்தி கொள்வேன்.

டோனிக்கு எதிராக விளையாட்டு வீரருக்குரிய முழு உத்வேகத்துடன் விளையாடுவோம என்று கூறியுள்ளார்.

ராஜ்கோட் அணியில் தெரிவானது பற்றி பேசிய ரெய்னா, ராஜ் கோட் அழகிய, துடிப்பான நகரம். அந்த அணிக்காக விளையாட விருப்பது உற்சாகம் அளிக்கிறது.




புதிய அணி வீரர்களையும், குஜராத் மக்களின் ஆதரவையும் ஆவலுடன் எதிர்நோக்கி இருக்கிறேன் என்று தெரிவித்துள்ளார். (க)

## கலைமதி வி. கழக உதைபந்து இறுதிப் போட்டியில் யங்கம்பன்ஸ்

கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் உதைபந்து போட்டியின் அரையிறுதிப் போட்டியில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியுடன் மோதி கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி இறுதிக்குத் தெரிவாகியுள்ளது.

கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற பரபரப்பான அரையிறுதிப் போட்டியில் முழு நேரப்பந்தை தன்வசப்படுத்தி வைத்திருந்தது றேஞ்சர்ஸ் அணி.

முதலாவது பாதியாட்டத்தில் றேஞ்சர்ஸ் அணியின் வீரர் வேகத்துடனான கோல் ஒன்றை போட்டார்.

இரண்டாவது பாதியாட்டத்திலும் றேஞ்சர்ஸ் அணியின் வேகத்தை கட்டுப்படுத்த தடுமாறியது யங்கம்பன்ஸ் அணி. ஆனாலும் தக்க தருணத்தில் அணியை மீட்டெடுத்தார் யங்கம்பன்ஸ் அணியின் முன்கள வீரர் நிறோஜன்.

நேரமுடிவில் போட்டி 1.1 என்ற அடிப்படையில் சமநிலையில் முடிந்தது. வெற்றியை தீர்மானிப்பதற்காக சமநிலை தவிர் உதை வழங்கப்பட்டது இதிலும் இரண்டு அணிகளும் போராடியது.

இப் போராட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தார் யங்கம்பன்ஸ் அணி கோல் காப்பாளர் மகிந்தன். போட்டியில் வெற்றியை பெற்று இறுதிக்கு தகுதி பெற்றது கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி. (க)

# செருப்பு அணிந்திருந்ததால் பீட்டர்சனுக்கு அனுமதி மறுப்பு



இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர் கெவின் பீட்டர்சன் சாதாரண செருப்பு அணிந்திருந்ததால் குவாண்டஸ் விமான நிறுவன ஊழியர்கள் அவருக்கு அனுமதி மறுத்துள்ளனர்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரரான பீட்டர்சன் சர்வதேச அணியில் கழற்றிவிடப்பட்டுள்ளார். இதனால் அவர் பல்வேறு நாடுகளில் நடக்கும் இருபது-20 போட்டிகளில் விளையாடி வருகிறார். இந்த நிலையில் தென்ஆப்பிரிக்காவில் நடைபெற்ற ராம் ஸ்லாம் இருபது-20 லீக் போட்டியில் பீட்டர்சன் பங்கேற்று விளையாடினார். இந்த தொடர் சில தினங்களுக்கு முன்பு முடிந்தது.

இதனையடுத்து அவுஸ்திரேலியாவில் நடைபெற இருக்கும் பிக் பாஷ் இருபது-20 லீக் போட்டியில் விளையாடுவதற்காக தென் ஆப்பிரிக்காவிலிருந்து அவுஸ்திரேலியாவுக்கு குவாண்டஸ் விமானத்தில் சென்றார்.

முன்னதாக சாதாரணமான செருப்பு அணிந்திருந்ததாக விமான ஊழியர்கள் பீட்டர்சனை விமான நிலைய ஓய்வறைக்குள் செல்வதற்கு அனுமதிக்கவில்லை. இதனால் கோபமடைந்த பீட்டர்சன், குவாண்டஸ விமான நிறுவனத்தை டுவிட்டரில் தலையாட்டி பொம்மை என கடுமையாக சாடியுள்ளார். (க)

# அணியினை காப்பாற்றுவதற்காக டெஸ்ட் போட்டியில் களமிறங்குவேன்




டெஸ்ட் போட்டிகளில் தடுமாறி வரும் மேற்கிந்திய தீவுகள் அணியை காப்பாற்ற மீண்டும் அணிக்கு திருப்பவுள்ளதாக கிறிஸ் கெய்ல தெரிவித்துள்ளார்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் அதிரடி ஆட்டக்காரரான கிறிஸ் கெய்ல் ஐ.பி.எல். போன்ற இருபது-20 போட்டிகளில் விளையாடி வருகிறார்.

இதனால் சொந்த நாட்டுக்கு விளையாடாமல் பணம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் மட்டும் செயற்படுவதாக அவர் மீது குற்றச் சாட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் டெஸ்ட் போட்டிகளில் மேற்கிந்திய தீவுகள் அணி தொடர்ந்து மோசமாக விளையாடி வருவதால் அணியை காப்பாறுவதற்காக மீண்டும் டெஸ்ட் போட்டிக்கு திரும்ப உள்ளதாக கிறிஸ் கெய்ல் கூறியுள்ளார்.

மேலும், தான் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறவில்லை என்றும், அடுத்த ஆண்டு டெஸ்ட் போட்டிகளில் ஆடுவேன் என்ற நம்பிக்கை உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கிந்திய தீவுகள் அணி, இலங்கை அணிக்கெதிரான டெஸ்ட் தொடரை 0-2 என இழந்தது.

அத்துடன் சமீபத்தில் முடிந்த அவுஸ்திரேலியாவிற்கு எதிரான முதல் டெஸ்டில் இன்னிங்ஸ் மற்றும் 212 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வியடைந்தது குறிப்பிடத்தக்கது. (க)



முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் வெற்றிக்கிண்ணம் 2015 இற்காக முல்லைத்தீவு மாவட்ட அரச திணைக்களகங்களிற்கிடையே நடத்தப்பட்ட விளையாட்டுப்போட்டிகளில் கரைதுறைபற்று பிரதேச செயலகம் வெற்றிவாகை சூடி அரச அதிபர் வெற்றிக்கிணத்தைத் தனதாக்கிக் கொண்டது. 14.12.2015 மாலை 5.30 மணியளவில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் அரச அதிபர் வெற்றிக்கிண்ணத்தை முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரிடமிருந்து கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பெற்றுக்கொள்வதையும் வெற்றிக்கிண்ணத்துடன் கரைதுறைப்பற்று பிரதேச செயலக அணியிரையும் படத்தில் காணலாம்.

# பசிலின் ஆட்களே மகனை கடத்தினர்

## தாயார் சாட்சியம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தம்பியான பசில் ராஜபக்ஷவின் ஆட்களே எனது மகனை கொழும்பில் வைத்துக் கடத்தினார்கள் என தாய் ஒருவர் சாட்சியம் அளித்துள்ளார்

தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் நேற்றையதினம் இடம்பெற்ற ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் நடைபெற்ற போது. அதில் சாட்சியம் அளிக்கும் போதே தாயொருவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எனது மகனான ஆசீர்வாதம் யேசுநாயகம் கடந்த 2002ஆம் ஆண்டு வெளிநாடு செல்வதற்கென கொழும்புக்கு சென்று நீர்கொழும்பில் உள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்தார்.

எனினும் வெளிநாடு செல்ல முடியாத காரணத்தால் அங்குள்ள முஸ்லிம் உணவகத்தில் வேலை செய்து வந்தார்.

அங்கிருந்த முஸ்லிம் நண்பர்களின் உதவியில் சிறிது காலம் அவர்களுடன் தங்கியதில் அவர் முஸ்லிம் மதத்தில் ஈர்க்கப்பட்டு அவரும் அவருடைய குடும்பத்தினருடன் முஸ்லிம் மதத்திற்குமாறியதுடன் அவருடை பெயரை முஹம்மது பைசன் என மாற்றிக் கொண்டு நீர்கொழும்பில் குடும்பத்துடன் வசித்துவந்தார்.

கடந்த 2005-ம் ஆண்டு 12-ம் மாதம் 14-ம் திகதி நாங்கள் நீர்கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் சுகவீன காரணமாக படுத்திருந்த வேளை சிவில் உடையில் வாகனத்தில் வந்த சில இனம்தெரியாத நபர்கள் எனது மகனை விசாரணைக்கென அழைத்துச் சென்றனர்.

அதற்கு முன்னரும் ஒரு சில தடவைகள் நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்திலிருந்து பொலிஸ் அதிகாரிகள் வந்து எனது மகனை அழைத்துச் சென்று விசாரித்தனர்

ஆனால் கடந்த 2005.12.14ஆம் திகதி அழைத்துச் செல்லப்பட்ட பின்னர் எனது மகன் வீடு திரும்பவில்லை

மகனை அழைத்துச்சென்ற இனம் தெரியாத நபர்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தம்பியும் முன்னாள் பொருளாதார அமைச்சருமான பசில் ராஜபக்ஷவின் ஆட்கள் என வீட்டிற்கு அருகிலிருந்த அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் எங்களிடம் தெரிவித்தனர்

கடந்த இரண்டு ஆண்டுகளிற்கு முன்னர் எனது மருமகள் உள்ளிட்ட காணாமல் போனவர்களின் உறவினர்கள் ஒருசிலர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கொழும்பில் சென்று சந்தித்தனர்.

அப்போது உங்களது கணவன்மாரை நாங்கள் கடத்தவில்லை என்றும் அவர்கள் வேறு பெண்களை திருமணம் முடித்து வெளிநாடுகளுக்கு சென்றிருப்பார்கள் என்றும் மகிந்த ராஜபக்ஷ பதிலளித்தார். பின்னர் நாம் பயம் காரணமாக அங்கு செல்லவில்லை. இதுவரை எந்ததகவலும் இல்லை என்று குறித்ததாய் சாட்சியம் அளித்துள்ளர்.(செ-9)

## மகிந்தவிடம் விசா...

விசாரணை நடத்தப்படவுள்ளது.

சுயாதீன தொலைக்காட்சியில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்தப்படவுள்ளது.

பாரிய நிதி மோசடிகள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவினால் இந்த சம்பவம் குறித்த விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இன்றும் நாளையும் பொதுமக்களிடம் சாட்சியங்கள் திரட்டப்படவுள்ளன.

கடந்த ஜனாதிபதி தேர்தல் காலத்தில் பாரியளவில் தேர்தல் பிரசார விளம்பரங்கள் செய்யப்பட்டு அதற்கான பெருந்தொகைக் கட்டணம் செலுத்தப்படவில்லை எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவும், ஹெகலியவும் ஏற்கெனவே இந்த விசாரணைகளில பங்கேற்றிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## உண்ணாவிரத...

ப்பட்டுள்ளார்.

எவ்வாறாயினும், குறித்த கைதியின் உடல்நலம் குறித்து அச்சமடையத் தேவையில்லை என சிறைச்சாலைகள் ஆணையாளரும் ஊடகப் பேச்சாளருமாகிய துஷார உபுலதெனிய குறிப்பிட்டார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த 6 ஆண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதியொருவர் கடந்த 9 ஆம் திகதி உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தார்.

வழக்கு விசாரணையின்போது குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் நீதிமன்றத்திற்கு சமுகமளிக்காத காரணத்தினால், கடந்த ஆறு ஆண்டுகளாக தொடர்ந்தும் தாம் சிறையில் வாடுவதாகவும், தனக்கு உரிய தீர்வு வழங்கப்படவேண்டும் எனவும் குறித்த கைதி தெரிவித்திருந்தார்

இவருக்கு ஆதரவாக உண்ணாவிரதப் போராட்டத்தில் இணைந்த கைதியே சிறைச்சாலைகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள கைதியின் உடல்நிலை தொடர்பில் அச்சமடைய வேண்டியதில்லை என சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, முதலில் உண்ணாவிரதத்தை ஆரம்பித்த கைதியின் போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (எ-11)

## இந்தியப் பிரஜை...

னால் கைது செய்யப்படுள்ளனர்.

இவர்களிடமிருந்து சுமார் 90 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஆடைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர்கள் நால்வரையும் கல்முனை நீதவான நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்கு கல்முனைப் பொலிஸார் நடவடிக்கை எடுத்திருந்தனர்.(எ-11)

## அமைச்சர்கள்...

ள்ளார்.

முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது 2009ஆம் ஆண்டு மே மாதம் பத்தொன்பதாம் திகதியன்று, எனது கணவன் வட்டுவாகலில் வந்து கொண்டிருக்கும் போது காணாமல் போய்விடடார். கணவர் காணாமல் போனது தொடர்பில் மனிதவுரிமை ஆணைக்குழு உட்பட அனைத்து ஆணைக்குழுக்கள் முன்பாகவும் சாட்சியம் அளித்திருந்தேன்.

ஆனால்காணாமல்போன எனது கணவன கிடைக்கவில்லை. இந்த நிலையில் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் ஆகியோர் வவுனியாவில் உள்ள புனர்வாழ்வு முகாமை பார்வையிட்டதாக, தொலைக்காட்சிகளில் காணொளி மற்றும் பத்திரிகைகளில படங்கள் பிரசுரமாகியிருந்தன.

அப்போது வட்டுவாகலில் காணாமல் போன எனது கணவர் அந்த புகைப்படத்தில் உள்ளார் என கூறினார். எனினும் சந்தேகம் கொண்ட ஆணைக்குழுவினர், அந்த பெண்ணிடம் திரும்ப திரும்ப கேட்டனர், நீங்கள் கூறுவது சரியானதா? என. இதனால் சினமடைந்த வேதாவின் மனைவி ரம்யா, அது என்னுடைய கணவன் இல்லாவிட்டாலும் அந்த நபரை பார்வையிட ஏற்பாடு செய்யுமாறு கோரியிருந்தார்.

இது தொடர்பில் சாட்சியங்களை பதிவு செய்த ஜனாதிபதி ஆணைக்குழு, வவுனியா புனர்வாழ்வு முகாமில் இருந்து பத்திரிகைகளில் வெளியாகியிருந்த அந்த நபரினை பார்வையிடுவதற்கு ஏற்பாடுகளை முன்னெடுப்பதாகவும் உறுதியளித்துள்ளனர். இதனால் அங்கு சற்று நேரம் பரபரப்பு காணப்பட்டது.(எ-4)

## ஒபாமா மட்டு...

பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

தற்போதைய அரசாங்கம் பதவியேற்றதன் பின்னர் இதுவரை சில அமெரிக்க பிரதிநிதிகள் இலங்கை வந்துள்ளனர். அந்த நாட்டின் ஜனாதிபதியான பராக் ஒபாமா மாத்திரமே இதுவரை வரவில்லை.

இலங்கைக்கு வருவது போல் அமெரிக்க பிரதிநிதிகள் இவ்வாறு வேறு எந்த நாடுகளுக்கும்பயணம்மேற்கொள்வதில்லை. தற்போது கூட அமெரிக்க பிரதிநிதி ஒருவர் இலங்கையில் இருக்கின்றார். இம்முறை அமெரிக்காவின் வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும் கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் உரையாற்ற வழங்கப்பட்டுள்ள நேரம் குறைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தை விரட்டியடித்து விட்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்த அவசியமாயின் எதிர்வரும் 19ஆம் திகதி வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களிக்குமாறும் நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகபெரும குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## இலங்கையின்...

லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தில், நிகழ்த்திய உரையின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் நிகழ்த்திய உரையில், உலகப் பொருளாதாரத்துக்கு பங்களிக்கும், மனித உரிமைகள், ஜனநாயகம், நீதியை ஊக்குவிக்கும், அனைத்துலகச் சட்டங்களை நிலை நிறுத்த உதவும், அனைத்துலக சமூகத்தின் ஒரு தலைவராக -வலுவான இலங்கையைப் பார்க்க அமெரிக்கா விரும்புகிறது.

இலங்கையில் உள்ள தொழில் முனைவோர், ஏராளமான வளங்கள், கேந்திர அமைவிடம் என்பன அந்த நிலையை அடைவதற்கு ஏதுவாக உள்ளன.

இலங்கையின் கடல்சார் முக்கியத்துவம் நீங்கள் அறிந்ததே. அது நீண்ட வரலாற்றைக கொண்டது.

பண்டைய கிரேக்கம், ரோம், அரேபியா, சீனா ஆகிய நாடுகளின் கப்பல்கள் இலங்கை கடல் வழியாக பயணித்துள்ளன. இங்குள்ள துறைமுகங்களில் தரித்துச் சென்றுள்ளன.

வரவிருக்கும் பத்தாண்டுகளில்,உலகின் மையக் கவனம் பெற்றதாக இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின் பொருளாதாரம், அரசியல் மற்றும் பாதுகாப்பு என்பன விளங்கும். இதில் இலங்கை பங்களிக்கும் என்று நம்புகிறோம்.

உலக அமைதிக்கான சவால்களைச் சமாளிக்க இலங்கை தனது ஆயுதப்படைகளை அமைதிகாப்பு படையினராக அனுப்பி பங்களித்து வருகிறது என்றார். (எ-11)

## இராணுவம் இல்லா...

வடக்கு மாகாணசபையின் 41ஆவது அமர்வின் இரண்டாவது நாள் அமர்வு நேற்றையதினம் கைதடியில் உள்ள வட மாகாணசபை சபா மண்டபத்தில் நடைபெற்றது. அதில் முதலமைச்சர் அமைச்சின் ஒதுக்கீடுகள் தொடர்பன விவாதத்தின் பின்னர் கருத்து தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது அமைச்சின் கீழ் உள்ளசெயற்பாடுகள் தொடர்பாக உறுப்பினர்களால் கூறப்பட்ட ஆலோசனைகள் கவனத்தில் எடுத்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இந்தியாவையும் இலங்கையையும் ஏன் குறைகூறுகிறீர்கள் என்று கேள்வி எழுப்பப்பட்டது. நாங்கள் எவரையும் குறை கூறவில்லை. ஆனால் சில நாடுகள் எங்கள் குறைகளை புறக்கணித்து வருவதையும் மத்திய அரசாங்கத்துக்கு சார்பாக மட்டும் நடந்து கொள்வதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாமல் உள்ளது. எம்மை குறை கூறுவதிலும பார்க்க மத்திய அரசாங்கத்தின் குறைகளை பரிசீலிக்க வேண்டும் என்றுதான் நாங்கள் கூறுகின்றோம்.

வடிகால்கள் மூடப்பட்டது தொடர்பாக முக்கியமான கருத்து முன்வைக்கப்பட்டது. யுத்தத்தின் போது வடிகால்கள் ஊடாக புலிகள் வருகின்றார்கள் என்ற காரணத்தினால் இராணுவம் அவற்றை மூடிவிட்டதாக கூறப்பட்டது. எனவே இங்கு சும்மா இருக்கும் இராணுவத்தைக் கொண்டே அந்த வடிகால்களை திறந்து விட அவர்களிடம் பேசவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

காணி அபகரிப்பு மிகவும் பாரதூரமான விடயம். தொடர்ந்து இப்படியான நடவடிக்கை கொழும்பில் இருந்து வந்தவர்கள் பலர் செய்து கொண்டிருக்கிறார்கள் என தகவல்கள் எமக்கு கிடைக்கின்றன. அது தொடர்பான தகவல்களை எமக்கு வழங்குங்கள்.

உண்மையிலேயே வடக்கில் காணி அபகரிப்பு தொடர்ந்து இருப்பதற்கு காரணம் இங்கு இராணுவம் இருப்பதனால் தான். அவர்கள் இல்லையென்றால் இந்த காணி அபகரிப்பு பலகாலத்துக்கு தொடர்ந்து இருக்காது.

முன்பள்ளி ஆசிரியர் வெற்றிடம் தொடர்பாக எமது அமைச்சினால் சேவை பரிமாண குறிப்பு தயாரிக்கப்பட்டு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தவுடன் வெற்றிடம் நிரப்பப்படும்.

அரசுடன் சேர்ந்து செயற்படுமாறு எம்மிடம் வெளிநாட்டு பிரதிநிதிகள் சிலர் கோருகின்றனர். அவர்களிடம் இராணுவத்தால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது வெளியில் இருந்து மக்களை குடியேற்றுகிறார்கள்.

இந்த அரசாங்கம் நாங்கள் வாக்களித்து தான் வந்தது. அவர்களுடன் சேர்ந்து செயற்படமுடியும். ஆனால் மனமாற்றம் அரசுக்கு இருக்கிறதா என்று சந்தேகம் உள்ளது. அதை நிவர்த்தி செய்யுங்கள் சேர்ந்து செயற்படுகின்றோம் எனஅவர்களிடம் கூறியுள்ளேன் என மேலும் தெரிவித்தார். (எ-9)

## ஐரோ. ஒன்றிய...

தலைவரின் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இக்கலந்துரையாடலின் போது புதிய அரசியல் யாப்பு, தமிழ்அரசியல் கைதிகளின் விடுதலை, வடக்கு கிழக்கு மக்களின் காணிப பிரச்சினை, மீள்குடியேற்றம், வீட்டுத்திட்டம், மக்களின் வாழ்வாதார பிரச்சினைகள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் எதிர்க்கட்சி தலைவரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன், ஐரோப்பிய ஒன்றிய தூதுவரின் கவனத்திற்கு கொண்டு வந்ததோடு, வடக்கு கிழக்கு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் ஆற்றும் பங்களிப்பிற்கு தமது நன்றியையும் தெரிவித்தார்.

மேலும் இந்த கருமங்கள் புதுவருடத்தில் அதிகளவு நிதிதிரட்டப்பட்டு இன்னும் சிறப்பாக இடம்பெற வேண்டும் எனவும் வலியுறுத்தினார். (எ-11)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## நீதிமன்ற தாக்குதல்...

தைக்கு அருகில் சைக்கிள் கடை ஒன்று வைத்து நடத்தி வந்தவர். அப்போது வயது அவருக்கு இருபத்தி இரண்டு, இவ்வாறு மகன் கடை வைத்திருந்த காலத்தில் இரண்டு மூன்று தடவைகள் எனது மகனை இராணுவ புலனாய்வாளர்கள் வந்து விசாரணை செய்துவிட்டுப் போனார்கள்.

பின்னர் 1997 ஆண்டு மாசி மாதம் ஆறாம் திகதி அன்று எனது மகனின் சைக்கிள் கடைக்கு வந்த மானிப்பாய் இராணுவ முகாமை சேர்ந்த இராணுவம் ஒரு ஜீப்பில் வந்து எனது மகனின் கைகளை கட்டி, பிடித்து கொண்டு போனார்கள். அதன் பின்னர் எனது மகனை எங்கு தேடியும் கிடைக்கவில்லை. மானிப்பாய் இராணுவமும் தாங்கள் பிடிக்கவில்லை என்று கூறினார்கள்.

பதினெட்டு வருடங்களாகியும் இதுவரை எனது மகனை நான் காணவில்லை. ஆனால் கடந்த சில மாதங்களுக்கு முன்னர், புங்குடுதீவு பாடசாலை மாணவி வித்தியா கொலை செய்யப்பட்டதன் பின்னர், இடம்பெற்ற யாழ்.நீதிமன்ற தாக்குதலில் கைது செய்யப்பட்டவர்கள் அனுராதபுரம் சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டனர்.

அதில் ஒரு சிலர் காயமடைந்த நிலையில், அனுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தனர். அப்போது எனது மகனை தெரிந்த ஒருவர் அனுராதபுரம், வைத்தியசாலையில் எனது மகன் நிற்கும் போது கண்டதாக என்னிடம் வந்து கூறினார் என்று அந்த தந்தை சாட்சியம் அளித்தார்.

இது தொடர்பில் விசாரணை மேற்கொள்வதாக கூறியுள்ள ஜனாதிபதி ஆணைக்குழு, அனுராதபுரம் வைத்தியசாலையில் தேடுவதற்கான முன்னேற்பாடுகளை முன்னெடுப்பதாகவும் அந்த தந்தைக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது. (எ-4)

## அச்சுறுத்தல்...

தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி நாள் அமர்வு நேற்று தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. சாட்சியமளிப்பின் நிறைவில் ஊடகங்களினால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்.

இன்றுடன் (நேற்று) யாழ்.மாவட்டத்திற்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் முதலாம் கட்ட விசாரணைகள் முடிவுற்றுள்ளது. இதில் மக்கள் ஆர்வத்துடன் சாட்சியமளித்திருந்தனர். இதன்போது சாட்சியம் அளித்தவர்களுக்கு ஏதும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டால் அது தொடர்பில் எம்மிடம் முறையிட முடியும்.

அச்சுறுத்தல் விடுத்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக உயர் நீதிமன்றில் எமது ஆணைக்குழு வழக்கு தொடரும் என்றார் அவர். மேலும் அடுத்த கட்ட அமர்வு குறித்து ஜனாதிபதியே தீர்மானிக்க வேண்டும். புதிய பதிவுகள் செய்தவர்கள் இன்னமும் விசாரணை செய்யப்படவில்லை. அவர்கள் அடுத்தகட்ட அமர்வுகளில் விசாரணை செய்யப்படுவார்கள்.

தமது உறவினர்களை காணவில்லை தேடி கண்டு பிடித்து தாருங்கள் என்று எம்மிடம் முறைப்பாடு செய்பவர்கள் அஞ்ச வேண்டிய அவசியம் இல்லை. அச்சுறுத்தல்கள் ஏதும் விடுக்கப்பட்டால் அதற்கு நானே முழுப் பொறுப்பு எனவும் அவர் கூறினார். (எ-4)

## ஆறு நாட்களும்...

புதிய முறைப்பாடுகளில் 337 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. அதில் 68 சாட்சியங்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளன.

மொத்தம் 993 பேரின் சாட்சியங்கள் முழுமையாக பதிவு செய்யப்பட்டுள்ளன. நேற்றுடன் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முதலாம் கட்ட சாட்சிய பதிவுகள் நிறைவுக்கு வந்துள்ள நிலையில், ஆறு நாட்களாக இடம்பெற்ற விசாரணைகளின் போது ஜனாதிபதி ஆணைக் குழு ஊடகவியலாளர்களுக்கு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கியிருந்தது.

விசாரணையாளர்களுக்கு அருகிலேயே ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்பட்டு செய்தி சேகரிப்பு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. மேலும் பதிவுகள் பிரதேச செயலரும் ஊடகங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கி இருந்தார். எம்மிடம் சாட்சியங்களை பெற்றுச் செல்லும் ஆணைக்குழு ஏனைய ஆணைக்குழுக்கள் போல் இல்லாமல் எங்கள் பிள்ளைகளை கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரியுள்ளனர்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் அடுத்த கட்ட யாழ்.மாவட்ட அமர்வுகள் எதிர்வரும் ஜனவரி மாதம் இறுதியில் நடைபெறலாம் எனவும் கூறப்படுகின்றது. (எ-4)

## 17 தமிழ்க்...

தமிழ் கைதிகளின் உடல் நிலைமை மோசமடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். பொலிஸார் பதிவு செய்து கொண்ட ஒரு வாக்குமூலத்தை அடிப்ப டையாக கொண்டு இரண்டு வழக்குகளை தொடர்வது அநீதியானது எனக் கூறி, இவர்கள் இந்த உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆர ம்பித்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இந்த கைதிகளின் பிரச்சினை குறித்து தமிழ் அரசியல்வாதிகளோ அல்லது பொறுப்புமிக்கவர்களோ உரிய கவனத்தை செலுத்தவில்லை எனவும் அருட்தந்தை என். சக்திவேல் குற்றம் சுமத்தியுள்ளார். (எ-11)


சுன்னாகத்தில்-NAC

A/L-2016

கணக்கீடு

M.C.Q-1

ஆரம்பம்-18.12.2015

(Fri-9 மணி)

திரு.வின்சன் (B.B.A Spl) (2781)

வேலையாள் தேவை

சைவ உணவகமொன்றிற்கு தங்கி நின்று சமையல் செய்யக்கூடிய வேலையாள் தேவை.

தொடர்பு:-0773715920 (2910)

கடை விற்பனைக்கு

மணிக்கூட்டு கோபுர வீதி, ஞானம்ஸ் Hotel அருகில் களஞ்சிய வசதியுடன் கூடிய கடை விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு:-0757411611 (2902)

எந்தவொரு நாட்டிலும், விரும்பிய எந்தத் துறையிலும் பட்டக்கல்வியைத் தொடர

Student Visa

15 வருடங்களுக்கு மேற்பட்ட விசா சேவை நிபுணத்துவ அனுபவம் கொண்ட் கொழும்பு சட்ட வல்லுநர்கள் ஊடாக...

எந்தவொரு நாட்டுக்குமான எந்த வகை விசா என்றாலும்.. (சி-2988)

VISIT VISA – SPOUSE VISA – WORK VISA
DEPENDANT VISA – SKILLED MIGRATION

SIKARAM Any Visa to Any Country

மேலதிக விபரங்களையும் ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றியும் அறிந்துகொள்ள

www.sikaram.lk

Tel: 0777 32 4004 , 021 222 00 11

இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.

வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m

B.A யாழ்.பல்கலைக்கழகம் (வெளிவாரி)

- புதிய பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- A/L 3 பாடங்கள் சித்தியடைந்து பொது சாதாரண பரீட்சையில் 30 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் பதிவு செய்ய முடியும்.
- பதிவுகள் எமது நிறுவனம் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.
- முன்னணி விரிவுரையாளர்களால் விரிவுரைகள் நடத்தப்படுகின்றன.
- விரிவுரைகள் ஆரம்பம் 19.12.2015 காலை 9 மணி. பட்டதாரியாகும் கனவை நனவாக்க எம்முடன் இணையுங்கள்.

பட்டப் படிப்புக்கள் பிரிவு

BEACON யாழ்.நகர் T.P: 0778318964 (சி-2985)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (வெளிவாரி)

கலைமாணி கல்வியாண்டு 2013/2014 புதிய பாடத்திட்டம்

- A/L 3 பாடங்களும் சித்தியடைந்த மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்.
- 500/= ரூபாயினை மட்டும் செலுத்தி பதிவினை மேற்கொள்ள முடியும். (இது எமது நிறுவனத்தில் மட்டுமே)
- விரிவுரைகள் அனுபவம் வாய்ந்த ஆசிரியர் குழாமுடன் எமது நிறுவனத்திலேயே நடைபெறும்.
- பல்கலைக்கழகத்தினால் பதிவு உறுதிப்படுத்தப்படும்வரை விரிவுரைக் கட்டணங்கள் எதுவும் அறவிடப்படமாட்டாது.
- பதிவுகள் எதிர்வரும் சனி, ஞாயிறு (26/27.12.2015) காலை 8.00 - 2.00 வரை மேற்கொள்ளப்படும்.
- விரிவுரைகள் ஆரம்பம் 26.12.2015 காலை 9.00
- உங்கள் பதிவினை எம் ஊடாக உறுதிப்படுத்தி கொள்ளுங்கள். (2906)

தொடர்பு : இணைப்பாளர் திரு.K.தர்மராஜா 0777288731
இயக்குநர் திரு.N.பிரதீபன் 0776624387

NJT பட்டப் படிப்புகள்

இல.55, பலாலி றோட், யாழ்ப்பாணம். (இலுப்பையடிச் சந்தி)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- இலங்கையில் FRENCH EMBASSY யின் கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. 136 நாடுகளில் 1062 கிளைகள். எமது தலைமை நிறுவனம் பிரான்ஸில் உள்ளது.
- எமது DELF A1 சான்றிதழைப் பெற்றால் பிரான்ஸில் உள்ள கட்டாய பரீட்சைக்கு தோற்றவேண்டியதில்லை.
- இலவசம்: படிக்கும் பாடங்களின் PHOTOCOPIES, படித்ததற்கான LETTRE, VISA FORM நிரப்புதல், CD, BOOKS பாவனை...
- யாழ், வன்னி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே வெளிநாடு செல்கிறார்கள்.
- பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்களுக்கான பிரெஞ் மொழி பெயர்ப்புகள். பாடசாலை / பல்கலைக்கழக மாணவர்களுக்கு கட்டணம் மிக குறைவு (2908)

ஆரம்பம் சில தினங்களில். முதலில் தொலைபேசி ஊடாக பதிவை உறுதிப்படுத்துங்கள்.

021 222 8093 6, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

கச்சேரி பஸ் நிலையம் → புகையிரதக்கடவை → AF (வெள்ளை மாடிக்கட்டடம்)

'வெற்றி நிச்சயம்'

க.பொ.த (உ/த) 2016 உயிரியல்

மாதாந்தப் பரீட்சை கார்த்திகை 2015

S.பொன்திவாகரன் V. உமாசங்கர்


| Index No. | Full Name | School | Marks | Rank |
|---|---|---|---|---|
| 8100/B | ரதினி சண்முகலிங்கம் | J/V.G.H.S | 92 | 1 |
| 8289/B | தமிழினி கங்காதரன் | J/V.G.H.S | 92 | 1 |
| 8195/B | திசாந்தினி விஜயகுமார் | J/V.G.H.S | 91 | 3 |
| 8203/B | கோபிதா பவழகுமாரன் | J/V.G.H.S | 90 | 4 |
| 0020/B | விசாகஜா பஞ்சாயுதன் | J/V.G.H.S | 88 | 5 |
| 8037/B | நிதர்சினி இராமச்சந்திரன் | J/V.G.H.S | 87 | 6 |
| 8080/B | சந்திரமௌலீசன் கௌரிபாலன் | J/S.J.C | 86 | 7 |
| 8001/B | பிரவீனா இராகவன் | J/V.G.H.S | 82 | 8 |
| 8304/B | கஜன்சிகா விமலச்சந்திரன் | J/V.G.H.S | 81 | 9 |
| 8064/B | டிலக்சி ரூபகுமார் | J/U.G.C | 80 | 10 |
| 8118/B | ஞானச்சந்திரன் கஜீவன் | J/S.J.C | 80 | 10 |
| 8301/B | தமிழ்ச்செல்வி சுரேந்திரன் | J/V.G.H.S | 80 | 10 |
| 8368/B | லக்சனியா புவனேஸ்வரகுமார் | J/H.F.C | 80 | 10 |
| 8322/B | பிரபாலினி சிவானந்தம் | J/V.G.H.S | 78 | 14 |
| 8442/B | கஜிசியா பேரின்பநாயகம் | J/M.L.C | 77 | 15 |
| 8163/B | கஜானா ரங்கநாயகம் | J/V.G.H.S | 76 | 16 |
| 8407/B | மாலிக் முகம்மது காலித் | T/A.A.C | 76 | 16 |
| 8092/B | சூசைநாதர் விவின்ரன் | J/S.J.C | 75 | 18 |
| 8162/B | கபிலா துரைராசா | J/V.G.H.S | 74 | 19 |
| 8296/B | ஜெயசக்தி சிவலிங்கம் | J/V.G.H.S | 74 | 19 |
| 8185/B | ஜஸ்மினி பிரேமதாஸ்குமாரசிறி | J/V.G.H.S | 73 | 21 |
| 8097/B | தேவசேனா விஜயகுமார் | J/V.G.H.S | 72 | 22 |
| 8158/B | ஆன்தமிழினி கியூபேட் அன்ரனி | J/C.G.C | 72 | 22 |
| 8199/B | லவ்சியா சுந்தர் | J/V.G.H.S | 72 | 22 |
| 8026/B | பவதாரணி சிவராஜா | J/V.G.H.S | 71 | 25 |
| 8103/B | கஸ்தூரி செந்திற்செல்வன் | J/V.G.H.S | 71 | 25 |
| 8276/B | முரளீதரன் அனுகூலன் | J/S.J.C | 71 | 25 |
| 8354/B | அபிராமி ரவிதரன் | J/V.G.H.S | 71 | 25 |
| 8078/B | தர்சனா ரவீந்திரன் | J/V.G.H.S | 70 | 29 |
| 8094/B | தர்சிகா கந்தசாமி | J/H.F.C | 70 | 29 |
| 8269/B | கியானி சிவஞானம் | J/V.G.H.S | 70 | 29 |
| 8351/B | தட்சயா உதயகுமார் | J/V.G.H.S | 69 | 32 |
| 8375/B | ரவீந்திரநாத் சிவலக்சன் | Kn/K.C.C | 69 | 32 |
| 8410/B | இராமநாதன் டனுகரன் | J/S.J.C | 69 | 32 |
| 8487/B | நிசானா கமலநாதன் | J/Kon.H.C | 69 | 32 |
| 8059/B | சுலோசனா சந்திரராசா | J/V.G.H.S | 68 | 36 |
| 8099/B | கஸ்மிலா பத்மநாதன் | J/V.G.H.S | 68 | 36 |
| 8086/B | சத்தியேந்திரா குபேந்திரா | J/S.J.C | 67 | 38 |
| 8139/B | மகேந்திரராஜா மாதுரன் | J/J.H.C | 67 | 38 |
| 5506/B | பூலோகசிங்கம் கோபிராஸ் | J/J.H.C | 66 | 40 |
| 8414/B | ஜீவிதா சுரேஸ்குமார் | J/J.H.L.C | 66 | 40 |
| 8131/B | சீவரத்தினம் கோவர்த்தனன் | J/J.H.C | 65 | 42 |


NEW SCIENCE WORLD VICTORY MUST Brown Road, Jaffna.

NEW SCIENCE WORLD

Navalar Road -Brown Road Junction, Jaffna.

phone: +94 77 336 4055

web: www. physicsocean.com

E-mail: info@physicsocean.com (சி-2983)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

ஆண்டாள் திருப்பாவை வெளியீடு



சி.நாகலிங்கம் JP எமது 75 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு ஆண்டாள் திருப்பாவை என்னும் நூல் வெளியீடு 18.12.2015 வெள்ளிக்கிழமை காலை 10 மணி முதல் 11 மணிவரை நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமி அவர்களின் ஆசியுடன் சந்நிதியான் ஆச்சிரமம் தொண்டைமானாறில் இடம்பெறும்.

அத்துடன் சமயப் பெரியார்களின் வாழ்த்துரைகளும் மகேஸ்வர பூஜையும் நடைபெறும். அன்பர்கள், உறவினர்கள் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

கரணவாய் தெற்கு, கரவெட்டி. (கொழும்பு) (2747)

சி.நாகலிங்கம், முன்னாள் சந்நிதியான் ஆச்சிரமத் தலைவர்.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.